REGISTERED AS A NEWSPAPER IN SRI LANKA
www.thinakaran.lk
/ Thinakaran.lk / ThinakaranLK

2024 செப்டெம்பர் 10 செவ்வாய்க்கிழமை

# தினகரன்

THINAKARAN 92 தினකරන්

வரு. 92 இல. 216 | Tuesday 10, September, 2024 | 16 பக்கங்கள் | 50/-




# சஜித் ஆதரவு கூட்டத்தில் பட்டாசு வெடித்து சிதறல்

## 07 பொலிஸார் உட்பட 09 பேருக்கு காயம்

## தீக்காயங்களுடன் 09 பேரும் கண்டி வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர்



ஜக்கிய மக்கள் முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவித்து, கண்டியில் நேற்று (09) நடைபெற்ற பிரசார கூட்டத்தில் பட்டாசு வெடிக்கப்பட்டதில் ஒன்பது பேர் காயமடைந்துள்ளனர்.

ஜக்கிய மக்கள் முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு ஆதரவு தெரிவிக்கும் வகையில், கண்டி மத்திய சந்தைக்கு முன்பாக ஏற்பாடு செய்யப்பட்டிருந்த கூட்டத்திலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளது.

மக்கள் ஜக்கிய முன்னணியின் ஆதரவாளர்களால் வெடிக்கப்பட்ட பட்டாசினால், 7 பொலிஸார் மற்றும் இரண்டு 06

# வரிசைகள் இல்லாத, இளைஞர்களின் ஆசைகளை நிறைவேற்றும் நாட்டை உருவாக்குவதே எனது நோக்கம்

Open Mic Night இளைஞர் இசை நிகழ்ச்சியில் ஜனாதிபதி தெரிவிப்பு



வரிசைகளற்ற மற்றும் இளைஞர்களின் எதிர்பார்ப்புகளை நிறைவேற்றும் நாட்டைக் கட்டியெழுப்புவதே தனது நோக்கம் என ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

பத்தரமுல்லை தியத உயன வெளிப்புற அரங்க மண்டபத்தில் நேற்று முன்தினம் (08) இரவு நடைபெற்ற Open Mic Night இளைஞர் இசை நிகழ்ச்சியில் கலந்துகொண்டு இளைஞர்களுடன் 06



# 06 தங்க விலையில் திடீர் வீழ்ச்சி

## ரிஷாத் பதியுதீனின் அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் முக்கியஸ்தர்கள் பலர் ஜனாதிபதி ரணிலுக்கு ஆதரவு



ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் வெற்றியை உறுதிப்படுத்துவதற்கு தமது பூரண ஆதரவை வழங்குவதாக ரிஷாத் பதியுதீன் தலைமையிலான, அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் முக்கியஸ்தர்கள் பலரும் தெரித்தனர். வடமாகாண சபை முன்னாள் உறுப்பினர் அலிகான் ஷரீப், முசலி பிரதேச சபை முன்னாள் தலைவர் ஏ.ஜீ.எச். சுபிஹான், முசலி பிரதேச சபை 06

## வடக்கில் அநுரவின் உரைக்கு தமிழ் தலைவர்கள் கண்டனம்



வடபகுதியில் அண்மையில் தேர்தல் பிரசாரம் ஒன்றில் ஈடுபட்ட தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திசாநாயக்க, வடக்கு, கிழக்கு தமிழர்களை மிரட்டும் தொனியில் உரையாற்றியிருந்தமைக்கு, வடபகுதியிலுள்ள தமிழ் தலைவர்கள் பலரும் கண்டனம் வெளியிட்டுள்ளனர். யாழ்ப்பாணத்தில் அநுரகுமார திசாநாயக்க ஆற்றிய உரை தொடர்பாக கருத்து 06

## பாடசாலை மாணவர்களது "சீசன்" டிக்கட்டுக்கு நிவாரணம்

அடுத்த அமைச்சரவை பத்திரம் சமர்ப்பிப்பு



பாடசாலை மாணவர்களின் பருவகால சீட்டுக்கு நிவாரணம் வழங்குவது தொடர்பான புதிய ஆலோசனைகளை உள்ளடக்கிய விசேட அமைச்சரவைப் பத்திரம், அடுத்த அமைச்சரவையில் சமர்ப்பிக்கவுள்ளதாக போக்குவரத்து நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்தார்.

தற்போதைய நிவாரண உதவியில் மாற்றத்தை எவ்வாறு மேற்கொள்ள வேண்டும் என்பது தொடர்பாக புதிய அமைச்சரவை பத்திரம் அமைந்துள்ளதாக அவர் தெரிவித்தார். 06

## மனித உரிமை பேரவை தீர்மானங்கள்; இலங்கை முற்றாக நிராகரிப்பு

சம்பந்தம் இன்றி நிறைவேற்றப்பட்டதாக தெரிவிப்பு




ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தொடர்பாக நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் வெளிப்புற ஆதாரங்களை சேகரிப்பதற்கான பொறிமுறையையும் நிராகரிப்பதாக ஐக்கிய நாடுகள் மனித உரிமை பேரவையில் இலங்கை தெரிவித்துள்ளது. இலங்கையின் சம்மதம் இன்றி அவை 06

## தேர்தல் பிரசார நடவடிக்கைகளுக்காக வீடுகளுக்கு பேரணியாக செல்ல சட்டத்தில் இடம் கிடையாது!

தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர்



ஜனாதிபதி தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் பிரசார நடவடிக்கைகளுக்காக ஐந்து பேர் மட்டுமே வீடுகளுக்குச் செல்ல முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் ஆர்.எம்.ஏ.எல்.ரத்நாயக்க தெரிவித்துள்ளார்.

நேற்று முன்தினம் (08) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனை 06

## நாகப்பட்டினம்–இலங்கைக்கிடையிலான கப்பல் சேவை சனிக்கிழமையும் இடம்பெறும்



தமிழ்நாட்டின் நாகப்பட்டினத்துக்கும் இலங்கையின் காங்கேசன்துறைக்கும் இடையிலான பயணிகள் கப்பல் சேவை எதிர்வரும் 21 ஆம் திகதி முதல், சனிக்கிழமைகளிலும் இடம்பெறவுள்ளதாக “த இந்து” பத்திரிகை செய்தி வெளியிட்டுள்ளது.

குறைவான முன்பதிவுகள் காரணமாக வாரத்தில் மூன்று நாட்களாக குறைக்கப்பட்டிருந்த இந்த 06

## இலத்திரனியல் கடவுச்சீட்டு தயாரிப்பை ஆராய போலந்து செல்லும் அதிகாரிகள்

குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம்



வெளிநாட்டு கடவுச்சீட்டு தயாரிக்கும் செயல்முறையை ஆராய்வதற்காக குடிவரவுத் திணைக்கள அதிகாரிகள் குழுவொன்று போலந்து நாட்டுக்குச் சென்றுள்ளதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களம் தெரிவித்துள்ளது. 06




## ஊழலுக்கு எதிராக அநுரகுமார நீதிமன்றம் செல்லாதது ஏன்?

ரிஷாத் பதியுதீன் எம்.பி கேள்வி!



"ஊழலை ஒழிப்பதற்கும் மோசடியாளர்களைத் தண்டிப்பதற்கும் ஜனாதிபதிக்குரிய அதிகாரமே தேவை என்று தேசிய மக்கள் சக்தி கருதக்கூடாது" என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான ரிஷாத் பதியுதீன் தெரிவித்துள்ளார். ஐக்கிய மக்கள் கூட்டணியின் 06

## ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க தற்காலிக அடையாள அட்டை



ஜனாதிபதி தேர்தலில் வாக்களிப்பதற்கு செல்லுபடியாகும் அடையாள அட்டை இல்லாத வாக்காளர்கள், தற்காலிக வாக்காளர் அடையாள அட்டையை பெற்றுக்கொள்ள முடியும் என தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது. அதன்படி, தங்கள் பகுதிகளிலுள்ள கிராம அலுவலர் அல்லது தோட்ட 06

## மூளையை பாதிக்கும் புதிய வைரஸ் வகை

சீனாவில் கண்டுபிடிப்பு



'வெட்லேண்ட் வைரஸ்' (wetland virus) என அழைக்கப்படும் புதிய வகை வைரஸ் ஒன்று சீனாவில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளது. ஒட்டுண்ணி பூச்சி கடிப்பதனால் மனிதர்களிடையே பரவும் 06

# தோட்டத் தொழிலாளர்களுக்கு காணி, வீட்டுரிமை வழங்குவேன்

## ஓய்வுபெற்ற தோட்டத் தொழிலாளர்களுக்கும் அஸ்வெசும நிவாரணம்_ ஜனாதிபதி

லயன் அறைகளுக்குப் பதிலாக, கிராமங்களை உருவாக்கி, அதற்கான காணி உரிமையையும், வீட்டுரிமையையும் வழங்கி பெருந்தோட்டத் தொழிலாளர்களின் வாழும் உரிமையை உறுதிப்படுத்துவது தனது முன்னுரிமையான எதிர்பார்ப்பு என ஜனாதிபதி வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

அத்துடன் ஓய்வுபெற்ற தோட்டத் தொழிலாளர்களுக்கும் அஸ்வெசும நிவாரணம் வழங்கி அவர்களின் வாழ்க்கைத் தரத்தையும் மேம்படுத்துவதாக ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அப்புத்தளையில் நேற்றுமுன்தினம் (08) பிற்பகல் நடைபெற்ற 'ரணிலால் முடியும்' வெற்றிப் பேரணியில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே ஜனாதிபதி இதனைத் தெரிவித்தார்.

இங்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

"இந்தப் பிரதேசங்கள் பற்றி நான் 75 வருடங்களாக அறிவேன். இன்று குறைபாடுகள் இல்லாத அப்புத்தளை தேர்தல் தொகுதிக்கு வந்ததில் மகிழ்ச்சியடைகின்றேன்.

2022 ஆம் ஆண்டில் இராணுவ நிகழ்ச்சி ஒன்றுக்காக இங்கு பிரதமராக வந்தபோது அத்தியாவசிய பொருட்களுக்கான வரிசைகள் நீண்டு கிடந்தன. தொழில் இன்றி மக்கள் அல்லல்பட்டனர். வீடுகளில் முடங்கினோம். எதிர்காலம் கேள்விக்குறியாக தெரிந்தது. இவற்றை



நிவர்த்திக்க மக்களுக்காக அரசாங்கத்தை ஏற்றுக்கொண்டேன்.

அதன் பின்னர் கடினமான முடிவுகளை எடுக்க வேண்டியிருந்தது. இதிலிருந்து மீள்வதற்கு சர்வதேச நாணய நிதியத்திற்குச் செல்ல வேண்டியிருந்தது. அவர்களின் நிபந்தனைகளுக்கு அமைய எவ்வாறு செயற்பட வேண்டுமெனவும் முன்கூட்டியே அறிந்திருந்தேன். அவர்கள் மேலும் இலங்கைக்கு கடன் தரவும் தயாராக இருக்கவில்லை.

கடன் பெறவோ, பணம் அச்சிடவோ முடியாது என்று வலியுறுத்தினர். கைகளையும் கால்களையும் கட்டிப் போட்டிருந்தனர். அரசாங்கத்திடம் பணம் இருக்கவில்லை. இறுதியாக வேறு வழியின்றி வரியை அதிகரிக்கும் கடினமாக முடிவை எடுத்தோம். வருமான வரியையும் அதிகரித்தோம். ரூபாவின் பெறுமதி இரட்டிப்பாக அதிகரித்தது. ஆனால் பணம் கிடைக்கவில்லை.

அதற்கு மத்தியிலேயே கஷ்டமான தீர்மானத்தை எடுக்க வேண்டியிருந்தது. அதன் பயனாக நாட்டின் வருமானம் அதிகரித்தது. டொலரின் பெறுமதி குறைந்தது. அத்தியாவசியப் பொருட்களின் விலைகள் சடுதியாகக் குறைந்தன. ஆனால் மக்களின் கஷ்டம் முற்றாகக் குறையவில்லை. ஆனால் எமது வருமானம் அதிகரிக்கிறது. 2023 இல் மக்களிடம் ஓரளவு பணம் இருந்தது.

அதனை யாருக்குப் பகிரலாம் என்று சிந்தித்தேன். அதன்படியே குறைந்த வருமானம் ஈட்டும் மக்களுக்கு 'அஸ்வெசும' வழங்கும் திட்டத்தை செயற்படுத்தினோம். லயன் அறைகளில் வசிக்கும் ஓய்வுபெற்றவர்களுக்கும் அஸ்வெசும நிவாரணம் வழங்கப்படும். எனவே, இவ் வருடத்தில் மேலும் வருமானம் அதிகரிக்கும். தோட்டத் தொழிலாளர் சம்பளமும் அதிகரிக்கும்.

அரச ஊழியர்களுக்கும் 10 ஆயிரம் ரூபா வரையில் சம்பளம் அதிகரிக்கும். அடுத்த வருடம் மேலும் அதிகரிக்கும். ரூபாவின் பெறுமதியைப் பலப்படுத்தி விலைகளைக் குறைத்து நிவாரணம் வழங்குவோம்.

நாட்டின் கடன் சுமையைக் குறைப்பதற்கான இணக்கப்பாடுகளை எட்டியுள்ளோம். இப்போது வெளிநாட்டு வங்கிகளுடன் கொடுக்கல் வாங்கல் செய்ய முடியும். ஐ.எம்.எப் இடமிருந்து நிவாரணங்கள் கிடைக்கின்றன. கடன் வழங்கிய நாடுகள் மீளச்செலுத்த சலுகைக் காலத்தை வழங்கியுள்ளன. இந்த ஒப்பந்தங்களைப் பின்பற்றி முன்னோக்கிச் சென்றால் எமக்கு நல்ல எதிர்காலம் கிடைக்கும்.

எனவே, எனது எதிர்காலத்தை விடுத்து உங்கள் எதிர்காலத்தைத் தீர்மானியுங்கள். அனுரவும் சஜித்தும் இவற்றை மாற்றுவதாகக் கூறுகிறார்கள். அதனால் நெருக்கடிகள் மீண்டும் தலையெடுக்கும்.

இந்நாட்டின் பொருளாதாரத்தை ஏற்றுமதிப் பொருளாதாரமாக மாற்றுவதே இப்போதைய தேவையாகும். அதனால் தன்னிறைவான வருமானத்தை ஈட்ட வேண்டும். பழைய முறைகள் மாற்றப்பட வேண்டும். குறிப்பாக தோட்டத் தொழிலாளர் சம்பளத்தை அதிகரிக்கும் முயற்சிகளை முன்னெடுக்கிறோம். லயன் அறை முறைகளை முற்றாக ஒழித்துவிட்டு அவற்றைக் கிராமங்களாக மாற்றியமைப்போம். காணி உறுதிகளையும் மக்களுக்குத் தருகிறோம். விரும்பியவாறு வீடுகளைக் கட்டிக் கொள்ள முடியும். அதனால் தோட்டங்கள் கிராமங்களாக பரிணமிக்கும்.

மரக்கறி மற்றும் பழ உற்பத்திக்கும் தேவையான வசதிகளை மேம்படுத்தித் தருவோம். அதனால் உள்நாட்டு, ஏற்றுமதி உற்பத்திக்கான தேவைகளைப் பூர்த்தி செய்யலாம். சுற்றுலாத்துறையையும் இங்கு பலப்படுத்த வேண்டும். அதனால் புதிய தொழில்வாய்ப்புகள் கிடைக்கும்.



எதிர்காலத்தில் நாட்டை முன்னேற்றுவோம். டிஜிட்டல் யுகத்தை உருவாக்குவோம். பெண்களையும் கைவிடவில்லை. அதற்குரிய சட்டங்களை நிறைவேற்றியுள்ளோம். பெண்கள், சிறுவர் பாதுகாப்புக்களை உறுதிப்படுத்துவோம். பெண்களை தொழில் சந்தைக்குள் உள்வாங்குவோம். சிறுவர் பராமரிப்பு நிறுவனங்களை அமைத்துத் தருவோம்.

இவற்றுக்காகவே எனக்கு வாக்களியுங்கள் என்று கேட்கிறேன். அப்புத்தளை மற்றும் தியத்தலாவ போன்ற நகரங்களின் அபிவிருத்திக்கு வழி செய்வேன். எனவே சிலிண்டருக்கு வாக்களியுங்கள் இல்லாவிட்டால் சிலிண்டரும் இருக்காது கிராமங்களும் இருக்காது".

இவ்வாறு ஜனாதிபதி தனது உரையில் தெரிவித்தார்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா:

"இன்று யாழப்பாணம் மக்களும், கிழக்கு மாகாண மக்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை மீண்டும் ஆட்சியில் அமர்த்த தீர்மானித்து விட்டனர். ஊவா மாகாண மக்களும் ஒருபோதும் நன்றிக்கடன் மறப்பவர்கள் அல்லர்.

பொருளாதார நெருக்கடியிலிருந்து நாட்டை மீட்ட ஜனாதிபதி பொருளாதாரம் மேலும் வலுவடையும்போது தோட்ட மக்களின் தேவைகள் பலவற்றையும் தீர்த்து வைப்பார். இன்று பதுளை வைத்தியசாலை வசதிகளை மேம்படுத்தித் தரவும் ஜனாதிபதி இணக்கம் தெரிவித்திருக்கிறார். எனவே அவரை மீண்டும் ஆட்சியில் அமர்த்த வேண்டும்".

இராஜாங்க அமைச்சர் அ.அரவிந்தகுமார்:

"இதுவரை ஒவ்வொரு அரசியல் கட்சிகளும் நவக்கிரகங்களைப் போல ஒவ்வொரு பக்கமாகத் திரும்பி நின்றோம். இன்று அனைத்துத் தரப்பினரையும் ஒன்றிணைக்க ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவினால் முடிந்திருக்கிறது. மலையக மக்கள் காணியின்றி தவித்த யுகத்திற்கு முற்றுப்புள்ளி வைப்பதற்கான சட்டதிட்டங்களை ஜனாதிபதி தயாரித்திருக்கிறார்.

அதனால் மலையக மக்களுக்கு வீட்டுரிமையும் காணியுரிமையும் கிடைக்கப்போகும் நாட்கள் வெகுதூரத்தில் இல்லை என்பது அனைவருக்கும் தெரியும். கடந்த பொருளாதார நெருக்கடியால் சகல மக்களும் கஷ்டப்பட்டனர்.

இன்று 38 வேட்பாளர்கள் போட்டியிடுகின்றனர். அவர்களில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு மட்டுமே கல்விப் புலமையும், வலுவான சர்வதேச தொடர்புகளும் உள்ளன. அதேபோல் நாட்டு மக்களும் அவருக்கு ஆதரவாக இருப்பதால் அவருக்கு அசுர பலம் கிடைத்திருக்கிறது.

எனவே, மலையக மக்கள் செய் நன்றி மறவாத சமூகம் என்ற வகையில் கஷ்டத்திலிருந்து எம்மை மீட்டெடுத்த



தலைவருக்கு பிரதி உபகாரம் செய்வதற்கு இப்போது வாய்ப்புக் கிடைத்திருக்கிறது. இன்று 38 பேர் ஜனாதிபதிப் பதவிக்காக போட்டியிடுகின்றனர். நாட்டின் எதிர்காலம் கேள்விக்குறியாக இருந்தபோது அவர்கள் ஏன் பொறுப்பை ஏற்க வரவில்லை? அன்று நாட்டை ஏற்றிருந்தால் தங்களது எதிர்காலம் கேள்விக்குறியாகிவிடும் என்ற அச்சத்தில் அன்று அவர்கள் இருந்தனர்.

அன்று நாட்டைக் காக்க திராணியற்றவர்கள், இன்று சுயநலமாக நாட்டின் அதிகாரத்தைக் கைப்பற்ற முயற்சிக்கிறார்கள்".

இராஜாங்க அமைச்சர் வடிவேல் சுரேஷ்:

"மலையக மக்களுக்கு வீட்டுத் திட்டங்கள், சுவசெரிய அம்பியூலன்ஸ் சேவை, கல்வியற் கல்லூரிகள் என்று பல சேவைகளை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க செய்திருக்கிறார். 1700 ரூபா சம்பள அதிகரிப்பையும் ஜனாதிபதி உறுதி செய்வார் என்று நம்புகிறோம்.

மலையகத்தின் தமிழ்க் கட்சிகள் உட்பட அனைத்துக் கட்சிகளையும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க ஒன்றிணைத்துள்ளார். எனவே நன்றிக்கடன் செலுத்தும் வகையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கே வாக்களிப்போம்".

கிழக்கு மாகாண ஆளுநர் செந்தில் தொண்டமான்:

"இலங்கை தொழிலாளர் காங்கிரஸ் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கு ஆதரவு அளிப்பதென்ற எமது முடிவில் எந்த மாற்றங்களும் இல்லை. லயன் அறைகளை அரசாங்கம் பொறுப்பேற்றுக் கொள்ள வேண்டும் என்ற நிபந்தனையை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிடம் முன்வைத்திருக்கிறோம்.

மேலும், நாட்டில் பொருளாதார நெருக்கடியும் வரிசை யுகமும் வந்தால் எமது மக்கள்தான் கஷ்டப்படுவார்கள். ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் காலத்தில் எந்த வரிசைகளும் உருவாக அவர் இடமளிக்கவில்லை. அதனை நடைமுறையிலும் அவர் காட்டியிருக்கிறார். எனவே போலி வாக்குறுதி வழங்குவோரை நம்புவதில் அர்த்தமில்லை".

# அரசியலமைப்பைப் பாதுகாத்து முறையான ஆட்சி நடத்துவோம்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச

'அரசியலமைப்பையும், சட்டத்தின் ஆட்சியையும், ஜனநாயக கட்டமைப்பையும் பாதுகாத்து, நல்லாட்சியை முன்னெடுக்கின்ற வகையில் பொறுப்புள்ள நிர்வாகக் கட்டமைப்பை முன்னெடுப்போம்' என்று எதிர்க்கட்சித் தலைவரும், ஜனாதிபதி வேட்பாளருமான சஜித் பிரேமதாச தெரிவித்தார்.



'ஒற்றுமையே நாட்டின் மிகப்பெரிய பலமாகும். எனவே இன, மத, குல, வகுப்பு, கட்சி பேதங்களின்றி ஒற்றுமையோடு முன்னோக்கிச் செல்வதற்கு நடவடிக்கை எடுப்போம். அத்தோடு நாட்டின் அனைத்து கொடுக்கல் வாங்கல்களும் முறையாகவும் நியாயமாகவும் இடம்பெறும். சரியான



வழிமுறையை கையாளும் போது எவராலும் திருட முடியாது' என்று எதிர்க்கட்சித் தலைவர் மேலும் தெரிவித்தார்.

கொழும்பு கோட்டே ராஜமகா விகாரைக்குச் சென்று வழிபாடுகளில் ஈடுபட்ட பின்னரே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

"கொள்முதல் முறை இல்லாத காரணத்தினால்தான் அதிகமான மோசடிகள் இடம்பெறுகின்றன. அதனால் சரியான நடைமுறைகளை கையாண்டு செயற்பாடுகள் முன்னெடுக்கப்படும். அவசர நிலைமைகளின் போது இடம்பெறுகின்ற கொள்முதல் முறைகளில் இருந்து விலகி பொருட்கள் கொள்வனவு செய்யப்பட்டமையால், கடந்த காலங்களில் பெருந்தொகையான நிதி மோசடி இடம்பெற்றிருக்கின்றது. இது குறித்து நீதிமன்ற தீர்ப்பொன்றும் கிடைக்கப் பெற்றுள்ளது. எனவே அரச நிர்வாகத்துக்குள் முறையான கட்டமைப்பு ஒன்று காணப்பட வேண்டும்" என்று எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாச இங்கு மேலும் தெரிவித்தார்.

# வாகரையிலிருந்து காத்தான்குடி வரை பாரிய சுற்றுலா வலயம் உருவாகும்

## மட்டக்களப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

வாகரை தொடக்கம் காத்தான்குடி வரையிலான பாரிய சுற்றுலா வலயமொன்றை உருவாக்குவதற்கு திட்டமிடப்பட்டுள்ளதாகவும், மட்டக்களப்பு உலகின் பிரதான சுற்றுலாப் பிரதேசமாக மாறும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.


மட்டக்களப்பு, கல்குடா பிரதேசத்தில் நேற்றுமுன்தினம் (08) நடைபெற்ற 'இயலும் ஸ்ரீலங்கா' வெற்றிப் பேரணியில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

இந்த மக்கள் பேரணியில் பெருந்திரளான மக்கள் கலந்துகொண்டனர். முற்போக்குத் தமிழர் கழகம் இதனை ஒழுங்கு செய்திருந்தது.

இங்கு உரையாற்றிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க மேலும் தெரிவித்ததாவது:

"நாட்டை முன்னோக்கி கொண்டு செல்வதற்கு சஜித்துக்கும் அனுரவுக்கும் சரியான கொள்கை இல்லை. நாடு எதிர்நோக்கும் சவால்களுக்கு அவர்களிடம் தீர்வுகள் இல்லை. பிரச்சினைகள் ஏற்படும் போது அவர்கள் ஓடி விடுகின்றனர்.

2022 இல் நான் இந்தப் பகுதிக்கு வந்த போது நீண்ட வரிசை இருந்தது. பல பகுதிகளுக்கும் சென்றேன். நீங்கள் அனைவரும் வரிசையில் இருந்தீர்கள். இந்த வரிசையுகத்தை நிறைவு செய்ய முடிவு செய்தேன். 2023 இல் நான் வரும் போது வரிசைகள் இருக்கவில்லை. விவசாயிகள் என்னிடம் உரம் கேட்டார்கள். அதனை நான் பெற்றுக்கொடுத்தேன்.



நீங்கள் சிறந்த விளைச்சலைப் பெற்றுத் தந்தீர்கள். இவ்வாறுதான் நாட்டை முன்னேற்றினோம். நீங்கள் அனைவரும் கஷ்டப்பட்டீர்கள். மீண்டும் அந்த நிலைக்குச் செல்ல வேண்டுமா?

பிரச்சினைகள் வந்த போது மற்றைய தலைவர்கள் ஓடுகையில் நான் மட்டுமே முன்வந்தேன். இவர்களை நம்ப முடியுமா? பாராளுமன்றத்தைக் கலைகுமாறு கோரினார்கள். தேர்தலை நடத்தச் சொன்னார்கள். இவ்வாறு பல நொண்டிச்சாட்டுகளைக் கூறினார்கள். இவர்கள் கூறியதைப் போன்று 2022 இல் தேர்தலை நடத்தியிருந்தால் என்ன நடந்திருக்கும். பிரச்சினை தீருமா? அல்லது சிக்கல் ஏற்படுமா? பங்களாதேஷத்தைப் போன்று நாடு மாறியிருக்கும்.

சஜித் வந்து மேடைகளில் பேசுகிறார், பேசுகிறார். பேசிக்கொண்டே இருக்கிறார். எந்தத் தீர்வும் அவரிடமில்லை. இவ்வாறானவர்களால் எவ்வாறு தீர்வு வழங்க முடியும்? அடுத்த 5 வருடங்களுக்கான 'இயலும் ஸ்ரீலங்கா' திட்டம் எம்மிடமுள்ளது. 5 அம்சங்களில் அதில் பிரதானமானவை.

பெண்களுக்குத் தான் அதிக பிரச்சினை ஏற்பட்டது? பெண்களின் உரிமைகள் செயற்படுத்தப்படுவதில்லை. பெண்களை வலுவூட்டுவதற்கான நடவடிக்கைகளை எடுத்துள்ளோம்.

இந்தப் பிரதேசத்தில் விவசாய நவீன மயமாக்கலை மேற்கொண்டு நவீன விவசாயத்தில் ஈடுபவோருக்கு கடனுதவி வழங்க இருக்கிறோம். மீன்பிடித்துறையிலும் நவீன தொழில்நுட்பத்தை வழங்க இருக்கிறோம். கைத்தொழில் வலயங்கள் மற்றும் முதலீட்டு வலயங்களை ஆரம்பிக்க இருக்கிறோம். திருகோணமலையில் ஒன்றை ஆரம்பிப்போம். சபுகஸ்கந்த எண்ணெய் சுத்திகரிப்பு நிலையத்தை இங்கு கொண்டு வர இருக்கிறோம். டிஜிட்டல் மத்திய நிலையமொன்றை மட்டக்களப்பில் ஆரம்பிக்க இருக்கிறோம்.

இந்தப் பிரதேசத்தை சுற்றுலா வலயமாக முன்னேற்றுவோம். மட்டக்களப்பு பிரதேசத்தை உலகில் தலைசிறந்த சுற்றுலாப் பயண வலயமாக மாற்ற எம்மால் "இயலும்".



இராஜாங்க அமைச்சர் சிவநேசத்துரை சந்திரகாந்தன்:

"ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவிற்கான ஆதரவை நாம் 6 மாதங்களுக்கு முன்னரே அறிவித்து விட்டோம். எமது மாவட்டத்திற்கான அதிகாரத்தைப் பெற்றுக் கொள்வதற்கான முதற்கட்டமாக எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஜனாதிபதியை வெற்றிபெறச் செய்ய வேண்டும். அதிகாரம் கொண்ட அமைச்சு பதவிகளை இந்த மாவட்டத்தில் உருவாக்க வேண்டும். எமது வளங்களைப் பயன்படுத்தி கிழக்கு மாகாணத்தில் வறுமையை ஒழிக்க வேண்டும்".

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா:

"எந்த தேர்தலிலும் காணாத ஒற்றுமை எமது அணியில் உள்ளது. பல கட்சிகள் எம்முடன் ஒன்றாக உள்ளனர். மக்களும் பிரியாமல் இணைந்தே உள்ளனர். கல்குடா தொகுதி முக்கியமான தொகுதி. தேவநாயகம் போன்ற தலைசிறந்த தலைவர்கள் உருவான பகுதி இது. உங்களுக்கு பொய் வாக்குறுதிகளை அளிக்கும் அநுரவினாலோ சஜித்தினாலோ மக்களை ஏமாற்ற முடியாது. உண்மையைச் சொல்லும் தலைவர் ரணில் விக்கிரமசிங்க. அப்படிப்பட்ட தலைவருடன் அரசியல் செய்வதில் நாம் மகிழ்ச்சியடைய வேண்டும்".

இராஜாங்க அமைச்சர் சதாசிவம் வியாழேந்திரன்:

"அநுரவும் சஜித்தும் நாடு பற்றி எரிந்த போது பொருளார வீழ்ச்சி ஏற்பட்ட போது இருளில் மூழ்கிய போது ஒரு மெழுகுவர்த்தியை ஏற்ற முன்வரவில்லை. ஜனாதிபதி ஒருவர்தான் தைரியமாக முன்வந்தார். அவசர சிகிச்சைப் பிரிவில் உயிருக்காக போராடிய நோயாளியைக் காப்பாற்றி சாதாரண விடுதிக்கு மாற்றினார்.

இந்த நாட்டுக்கும் அதே நிலை ஏற்பட்டது. சாதாரண வார்டில் உள்ள நோயாளியை வீட்டுக்கு அனுப்பப் போகிறீர்களா? மீண்டும் அவசர சிகிச்சைப் பிரிவுக்கு அனுப்பப் போகிறீர்களா? 5 வருட காலத்திற்கு அவருக்கு அதிகாரம் வழங்கினால் நிச்சயம் நாடும் பழைய நிலைமைக்குச் செல்லும்".

இந்த கூட்டத்தில் இந்து சமயத் தலைவர்கள் மற்றும் ஏனைய மதத் தலைவர்கள், அமைச்சர் அலி சாஹிர் மௌலானா, முற்போக்குத் தமிழர் கழக மட்டக்களப்பு மாவட்ட அமைப்பாளர் தவயோக ராஜா நிரோராஜ், கட்சியின் ஒருங்கிணைப்புச் செயலாளர் ராஜதுரை இராஜேந்திரகுமார், கட்சியின் பொருளாளர் சாமித்தம்பி யசோதரன், முற்போக்குத் தமிழர் கழக முக்கியஸ்தர்கள், பிராந்திய அரசியல் தலைவர்கள், அமைப்பாளர்கள் உள்ளிட்ட பெருந்திரளான மக்கள் கலந்து கொண்டனர்.

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் விபத்து

## வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட அனைத்து மீனவர்களுக்கும் உடனடி இழப்பீடு



### மொரட்டுவ மக்களுடனான சந்திப்பில் ஜனாதிபதி தெரிவிப்பு

எக்ஸ்பிரஸ் பேர்ல் கப்பல் விபத்தினால் கடல் மாசுபட்டதில் வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட மீனவர்களில் ஒரு பகுதியினருக்கு, ஏற்கனவே இழப்பீடு வழங்கப்பட்டுள்ளதாகவும், மீதமுள்ள மீனவர்களுக்கு உரிய இழப்பீடுகள் உடனடியாக வழங்கப்படும் எனவும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

மொரட்டுவை வில்லோரவத்த பிரதேசத்தில் நேற்று முன்தினம் (08) இரவு இடம்பெற்ற மக்கள் சந்திப்பில் இதனை தெரிவித்த அவர், மேலும் கூறுகையில், முறைசாரா தொழில் சந்தையில் பணியாற்றும் அனைவருக்காகவும் ஆரம்பிக்கப்படும் ஓய்வூதியம் மற்றும் சமூக பாதுகாப்புத் திட்டம் குறித்து 'இயலும் ஸ்ரீலங்கா' வேலைத் திட்டத்தில் குறிப்பிடப்பட்டுள்ளது.

திருகோணமலை துறைமுகத்தை அபிவிருத்தி செய்வது தொடர்பாக இந்தியாவுடன் கலந்துரையாடி வருகின்றோம்.

06

கடந்த 8 மாதங்களில் கடல் மார்க்கமாகக் கடத்தப்பட்ட

## ரூ.15,000 மில். பெறுமதியான போதைப்பொருள் மீட்பு!

இவ்வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் மாத்திரம் கடல் மார்க்கமாக நாட்டுக்குள் கொண்டு வரப்பட்ட 15,491 மில்லியன் ரூபா பெறுமதியான போதைப்பொருள் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படை தெரிவித்துள்ளது.

அதன்படி, ஜனவரி முதலாம் திகதி முதல் நேற்று முன்தினம் (08) வரை மேற்கொள்ளப்பட்ட சுற்றிவளைப்பு நடவடிக்கைகளில், 9,631 மில்லியன் ரூபா பெறுமதியுடைய 385 கிலோகிராம் ஹெரோயின் போதைப்பொருளும், 4,860 மில்லியன் ரூபா பெறுமதியான 511 கிலோகிராம் ஐஸ் போதைப்பொருளும் கைப்பற்றப்பட்டுள்ளதாக கடற்படையினர் தெரிவித்துள்ளனர்.

அத்துடன், கேரள கஞ்சா, ஹாஷிஸ் மற்றும் போதை மாத்திரைகள் போன்றவைகளும் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், போதைப்பொருள் கடத்தலுக்காக பயன்படுத்தப்பட்ட 11 படகுகளும் கைப்பற்றப்பட்டுள்ளதுடன் 162 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளதாகவும் கடற்படை தெரிவித்துள்ளது.

## தனியார்துறையினருக்கு ஓய்வூதியத்தை வழங்குவேன்

### அநுரகுமார திசாநாயக்க தெரிவிப்பு



தனியார்துறை ஊழியர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதிய திட்டத்தை அறிமுகப்படுத்தும் யோசனையை தேசிய மக்கள் சக்தி முன்வைத்துள்ளதாக, அதன் ஜனாதிபதி வேட்பாளர் அநுர குமார திசாநாயக்க தெரிவித்துள்ளார்.

தொழிற்சங்கமொன்றின் நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போது இதனை தெரிவித்த அவர், மேலும் தெரிவிக்கையில்,

ஓய்வுபெற்ற பலர் அவலம் நிறைந்த துன்பகரமான வாழ்க்கையை வாழ்கின்றனர். ஓய்வுபெற்ற பின்னர் அனைவரும் கௌரவமான மகிழ்ச்சியான வாழ்க்கை வாழவேண்டும்.

நாட்டின் உற்பத்திக்கு தனியார் துறையினர் பெரும் பங்களிப்புச் செய்கின்றனர். ஒவ்வொருவரும் இத்தனை வயது வரைதான் வேலை செய்யவேண்டும் என்றொரு விடயம் உள்ளது. ஓய்வுபெற்ற பின்னர் அனைவரும் கௌரவமான மகிழ்ச்சியான வாழ்க்கை வாழவேண்டும். எனவே, தனியார் துறை ஊழியர்களுக்கு பங்களிப்பு ஓய்வூதிய திட்டமொன்று எங்களிடம் உள்ளது என அவர் தெரிவித்தார்.

பாடசாலை விடுமுறை

## தேர்தல்கள் ஆணைக்குழுவுடன் கல்வியமைச்சு கலந்துரையாடல் !

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை முன்னிட்டு பாடசாலைகளுக்கு விடுமுறை வழங்குவது தொடர்பாக இதுவரையில் இறுதித் தீர்மானம் எடுக்கப்படவில்லையென கல்வியமைச்சு தெரிவித்துள்ளது.

தேசிய தேர்தல் ஆணைக்குழுவின் கோரிக்கையை ஆராய்ந்து, பாடசாலை விடுமுறை தொடர்பான திட்டமிடல்கள் முன்னெடுக்கப்படுமென கல்வி அமைச்சு மேலும் குறிப்பிட்டுள்ளது.

இதேவேளை, வாக்கெண்ணும் நிலையங்களை தயார்படுத்தும் நடவடிக்கைகள் தரம் ஐந்து புலமைப்பரிசில் பரீட்சை நிறைவடைந்ததன் பின்னர், 19 மற்றும் 20 ஆம் திகதிகளில் ஆரம்பிக்கப்படவுள்ளதாக தேர்தல்கள் ஆணைக்குழு தெரிவித்துள்ளது.

## மழையுடனான வானிலை எதிர்வரும் நாட்களில் அதிகரிக்கும்

### வளிமண்டலவியல் திணைக்களம்

நாட்டின் தென்மேற்குப் பகுதிகளில் தற்போது நிலவும் மழையுடனான காலநிலை எதிர்வரும் நாட்களில் மேலும் அதிகரிக்கக்கூடுமென வளிமண்டலவியல் திணைக்களம் எதிர்வு கூறியுள்ளது.

மத்திய வங்கக் கடலில் உருவான குறைந்த காற்றழுத்தம், தாழ்வு மண்டலமாக உருவாவதற்கான சாத்தியம் காணப்படுவதனால் இவ்வாறு அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது.

மேலும், இந்த காற்றழுத்த தாழ்வு நிலை அடுத்துவரும் நாட்களில் வடமேற்கு வங்கக்கடல் பகுதியில் காற்றழுத்த தாழ்வு மண்டலமாக மாறி ஒடிசா கடற்கரையை அண்மிக்கும் எனவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

இதனால், மீனவர்கள் மறு அறிவித்தல் வரை வங்கக்கடலின் ஆழ்கடல் பகுதிகளுக்குச் செல்வதை தவிர்க்குமாறு வளிமண்டலவியல் திணைக்களம் எச்சரிக்கை விடுத்துள்ளது.



இலங்கை வங்கியின் BASEL III இணக்கமான பட்டியலிடப்பட்ட தொகுதிக்கடன் வெளியீடு 2024

இலங்கை வங்கியின் தொகுதிக்கடன் வெளியீடு 2024 செப்டெம்பர் 12 இல் திறக்கப்படும்

| வகை | காலம் (வருடங்கள்) | வட்டி வீதம் (வ.வ) | வட்டி வழங்கப்படும் கால அளவு |
|---|---|---|---|
| A. நிலையான வட்டி | 5 | 13.50% (வ.உ.வ.) | வருடாந்தம் |
| B. மிதக்கும் வட்டி | 5 | 12 மாத தி.உண்டியல் வீதம் +1.00% | வருடாந்தம் |

இவ்வெளியீடு தகவற்குறிப்பேட்டில் குறிப்பிடப்பட்டுள்ள தகுதிவாய்ந்த முதலீட்டாளர்களுக்கு மட்டுமே வரையறுக்கப்பட்டுள்ளது

| | |
|---|---|
| கடன்முறி | BASEL III இற்கு இணக்கமான, பட்டியலிடப்பட்ட Tire 2, தரப்படுத்தப்பட்ட, காப்பளிக்கப்படாத, இரண்டாந்தர, மீட்கத்தக்க தொகுதிக்கடன் (2024/29) நம்பகத்தன்மையற்ற மதிப்பிறக்கம் செய்யப்பட்ட அம்சங்களுடன் |
| அதிகபட்சம் திரட்டப்பட வேண்டிய தொகை | 15 பில்லியன் ரூபாய் |
| முறியின் மதிப்பீடு | Lanka Rating முகவரால் AA- (நிலையான) தரப்படுத்தல் பெற்றது |
| வெளியீட்டு தொகை | தொகுதிக்கடன் ஒன்று 100/- ரூபாய் |
| ஆகக் குறைந்த சந்தாப் பணம் | 1. தகைமை பெற்ற தனிப்பட்ட முதலீட்டாளர்கள் - ரூ. 5,000,000/-<br>2. ஏனைய தகைமை பெற்ற முதலீட்டாளர்கள் - ரூ. 10,000/-<br>விபரங்களுக்கு தகவற்குறிப்பேட்டிலுள்ள பிரிவு 6.2 ஐப் பாருங்கள் |

மேலதிக விபரங்களுக்கு தகவற்குறிப்பேட்டைப் பாருங்கள்

தகவற்குறிப்பேடு மற்றும் விண்ணப்பங்களை www.boc.lk மற்றும் www.cse.lk இணையத்திலிருந்து பதிவிறக்கம் செய்து கொள்ளலாம் அல்லது சகல பங்கு முகவர்களிடமிருந்தும் பெற்றுக் கொள்ளலாம்.

முகாமையாளர்கள் / வெளியீட்டுக்கான பதிவாளர்கள்:
இலங்கை வங்கியின் முதலீட்டு வங்கியியல் பிரிவு,
7 ஆம் மாடி, தலைமைக் காரியாலயம், இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 01.
அழையுங்கள்: 011 244 8348 / 011 220 3640 - 47

1975 BOC CALL CENTRE
www.boc.lk
A (lka) Fitch ரேட்டிங், AAA Brand Finance ரேட்டிங்.
இலங்கை வங்கி இலங்கை மத்திய வங்கியினால் கண்காணிக்கப்படும் உரிமம் பெற்ற வணிக வங்கியாகும்.
பரிந்துரைகள்/கருத்துக்கள்/முறைப்பாடுகளுக்கு - https://www.boc.lk/contact

தலைமை அலுவலகம், BOC சதுக்கம், இல.1, இலங்கை வங்கி மாவத்தை, கொழும்பு 1.

இலங்கை வங்கி BOC
தேசத்தின் வங்கியாளர்

தினகரன்
THINAKARAN

35, டி. ஆர். விஜயவர்தன மாவத்தை, கொழும்பு - 10
தபால் பெட்டி இலக்கம் : 834
தொலைபேசி இலக்கம் : 2429429, 2429272, 2429279
பெக்ஸ் : 2429270, 2429329, விளம்பர முகாமையாளர் : 2429321

குரோதி வருடம் ஆவணி மாதம் 24ஆம் நாள் செவ்வாய்க்கிழமை
ஹிஜ்ரி வருடம் 1446 ரபீஉனில் அவ்வல் பிறை 06

**குறள் தரும் சிந்தனை**

திறனல்ல தற்பிறர் செய்யினும் நோநொந்து
அறனல்ல செய்யாமை நன்று

பிறர் செய்திடும் இழிவான காரியங்களுக்காகத் துன்ப முற்று வருந்தி, பதிலுக்கு அதே காரியங்களைச் செய்து பழி வாங்காமலிருப்பதுதான் சிறந்த பண்பாகும்.

## சமூக ஊடகங்கள் பொறுப்புடன் செயற்படுவதன் அவசியம்

இன்றைய உலகில் நவீன ஊடகத் துறை அபரிமித வளர்ச்சி பெற்றுள்ளன. அவற்றில் சமூக ஊடகங்கள் முக்கிய இடத்தைப் பிடித்துள்ளன. அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களை விடவும் மக்கள் மத்தியில் அதிக செல்வாக்கு பெற்றவையாக சமூக ஊடகங்கள் விளங்குகின்றன. இந்த நிலைமை மக்களின் அபிப்பிராயங்களிலும் நிலைப்பாடுகளிலும் தாக்கம் செலுத்த முடியும். இது தொடர்பில் பல மட்டங்களிலும் கவனம் செலுத்தப்படுகின்றன.

இன்றைய கால கட்டத்தில் ஏனைய ஊடகங்களை விடவும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்துபவர்களின் எண்ணிக்கை பெரிதும் அதிகரித்து காணப்படுகிறது. அதற்கு பல காரணங்கள் துணைபுரியக் கூடியனவாக அமைந்துள்ளன. அவற்றில் 'அன்ட்ரொய்ட்' கையடக்கத் தொலைபேசிப் பாவனை பாரிய பங்களிப்பை நல்கி உள்ளது.

கையடக்கத் தொலைபேசி பாவனையில் ஏற்பட்டுள்ள அபரிமித வளர்ச்சி சமூக ஊடகங்கள் மக்கள் மத்தியில் செல்வாக்கு செலுத்துவதற்கு பக்க துணையாக அமைந்துள்ளன. இந்த ஊடகங்களின் பாவனையில் அதிகரிப்பு ஏற்பட இது பெரிதும் உதவியுள்ளது. இந்த நிலைமையை இலங்கையில் மாத்திரமல்லாமல் உலகின் பல நாடுகளிலும் பரவலாக அவதானிக்க முடிகிறது.

அதனால் சமூக ஊடகங்களது பயன்பாட்டில் ஏற்பட்டுள்ள அதிகரிப்பு, அதன் விளைவாக ஏற்படுகின்ற தாக்கங்கள், பாதிப்புக்கள் உள்ளிட்ட பல்வேறு விடயங்கள் குறித்து கவனம் செலுத்தப்படுகின்றன. ஏனெனில் சமூக ஊடகங்கள் மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்றுள்ள அளவுக்கு அதில் பரப்பப்படுகின்ற தகவல்கள், செய்திகளின் உண்மைத்தன்மையில் பலவீனங்களும் தவறுகளும் நிறைந்து காணப்படுகின்றன. அதனால் அந்த ஊடகங்களில் வெளியாகும் தகவல்களை உத்தியோகபூர்வமானவையாக ஏற்றுக்கொள்ளப்படும் நிலை உலகில் இன்னும் ஏற்படவில்லை என்பது இங்கு சுட்டிக்காட்டத்தக்கதாகும்.

ஆனால் அச்சு மற்றும் இலத்திரனியல் ஊடகங்களில் எந்தவொரு தகவலும் உத்தியோகபூர்வமாக உறுதிப்படுத்தப்பட்டவையாகவே வெளியிடப்படும். அத்தோடு ஊடக தர்மத்தையும் நெறிமுறைகளையும் பேணியவையாகவே அந்தத் தகவல்களும் தரவுகளும் அமைந்திருக்கும். ஆனால் சமூக ஊடகங்களில் வெளியாகும் தகவல்களில் இத்தகைய உறுதிப்பாடுகளைப் பெரும்பாலும் எதிர்பார்க்க முடியாது.

ஏனெனில் 'அன்ரொய்ட்' கையடக்கத் தொலைபேசி கிடைத்து விட்டால் தாமொரு கையடக்க தொலைபேசி ஊடகவியலாளர் எனக்கருதும் நிலைமை பெரிதும் வளர்ச்சி பெற்றுள்ளது. அதனால் பெரும்பாலானவர்கள் சமூக ஊடகப் பாவனையாளராக விளங்குகின்றனர். ஆனால் அவர்கள் ஊடக நெறிமுறைகள், ஒழுங்குவிதிகள் குறித்து கவனம் செலுத்துவதுமில்லை. அது தொடர்பான அறிவு குறித்து அக்கறை செலுத்துபவர்களாகவும் அவர்கள் இல்லை. தங்களுக்கு கிடைக்கும் தகவல்களை பரப்புவதற்கும் தாங்களாக தகவல்களை உருவாக்கி பதிவிடுவதற்கும் சமூக ஊடகங்களைப் பயன்படுத்திக் கொள்கின்றனர். இதன் போது உண்மை, பொய், திரிபு எதுவும் பகுப்பாய்வு செய்யப்படுவதில்லை. அதனால் இது தொடர்பில் அடிக்கடி குற்றச்சாட்டுகளும் முன்வைக்கப்படுகின்றன. இப்பின்புலத்தில் சமூக ஊடகங்களை ஒழுங்குபடுத்தவென உலகின் சில நாடுகள் சட்ட ஏற்பாடுகளையும் அறிமுகப்படுத்தியுள்ளன.

இவ்வாறு சமூக ஊடகங்கள் தொடர்பில் பலவிதமான குறைபாடுகளும் பலவீனங்களும் காணப்படும் சூழலில் அவற்றில் வெளியாகும் தகவல்கள், செய்திகளை உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ளக்கூடிய நிலை உலகில் எங்குமே இன்னும் ஏற்படவில்லை.

இந்நிலையில், இலங்கையில் ஜனாதிபதி தேர்தல் நடைபெறவிருக்கும் சூழலில் தேர்தல் நடவடிக்கைகளுக்காக சமூக ஊடகங்களின் பயன்பாடு பெரிதும் அதிகரித்துக் காணப்படுகிறது. அதாவது தேர்தல் பிரசாரத்திற்காக மாத்திமல்லாமல் அபேட்சர்கள் பெறும் வாக்குகள் குறித்த கணிப்பீடுகளும் அவற்றில் வெளியிடப்படுகின்றன. ஆனால் சமூக ஊடகங்களில் பதிவிடப்படும் ஏனைய தகவல்கள், தரவுகளைப் போன்று தேர்தல் கணிப்பீடுகளும் புள்ளிவிபரங்களும் உத்தியோகபூர்வமாக ஏற்றுக் கொள்ள முடியாதவை. அது தான் துறைசார் நிபுணர்களின் கருத்தாகும். இவ்வாறான சூழலில் ஜனாதிபதித் தேர்தலில் அபேட்சகர்கள் பெறும் வாக்குகள் உள்ளிட்ட அது தொடர்பிலான கணிப்பீடுகள், தரவுகளை வெளியிட வேண்டாம் என்று வலியுறுத்தியுள்ள தேர்தல்கள் செயலகம், சமூக ஊடகப் பாவனையாளர்கள் பொறுப்புடன் செயற்பட வேண்டும் என்றும் கேட்டுக் கொள்ளப்பட்டுள்ளனர். இந்த ஊடகங்கள் மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற்று இருந்தாலும் அவற்றில் வெளியாகும் தகவல்கள், செய்திகளில் காணப்படும் பலவீனங்களும் உண்மைத்தன்மை இன்மையுமே இதற்கான காரணமாகும்.

ஆகவே சமூக ஊடகங்களின் தவறானதும் பலவீனமானதுமான தரவுகளும் தகவல்களும் மக்கள் மத்தியில் செல்வாக்கு பெற இடமளிக்கலாகாது. அதன் ஊடாக குளறுபடிகளையும் முறைகேடுகளையும் தவிர்த்துக் கொள்ள முடியும்.

editor.tkn@lakehouse.lk

# காத்தான்குடி பதுரியா ஜும்ஆ பள்ளிவாசலுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி



'இயலும் ஸ்ரீலங்கா' வெற்றிப் பேரணியின் கல்குடா மற்றும் ஓட்டமாவடி பொதுக்கூட்டங்களில் கலந்து கொள்ளச் சென்ற ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, நேற்றுமுன்தினம் (08) முற்பகல் காத்தான்குடி 05 பதுரியா ஜும்ஆ பள்ளிவாசலுக்கு விஜயம் செய்தார்.

அங்கு அப்துல் ஜவாத் ஆலிம் வலியுல்லாஹ் நிதியத்தின் தலைவர் அப்துர் ரஊப் மிஸ்பாஹி உட்பட அங்கு வருகை தந்திருந்த மக்களுடன் ஜனாதிபதி சிநேகபூர்வ உரையாடலிலும் ஈடுபட்டார்.

அமைச்சர் நிமல் சிறிபால டி சில்வா, வடமேல் மாகாண ஆளுநர் நஸீர் அஹமட், பாராளுமன்ற உறுப்பினர்களான ஏ. எல். எம். அதாவுல்லா, அலி சாஹிர் மௌலானா மற்றும் முன்னாள் பிரதி மேயர் எம். எம். ஜசீம் ஆகியோர் இதன்போது இணைந்திருந்தனர்.

பதுரியா ஜும்ஆ பள்ளிவாசலின் கீழ் 02 ஜும்மா பள்ளிவாசல்கள் உட்பட 04 பள்ளிவாசல்கள், 07 குர்ஆன் பாடசாலைகள், 02 அரபிக் கல்லூரிகள் மற்றும் 30 இற்கும் மேற்பட்ட சமூக சேவை நிறுவனங்கள் இயங்கி வருகின்றன.





பதுரியா ஜும்ஆ பள்ளிவாசலுக்கு விஜயம் செய்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, காத்தான்குடி நகர வர்த்தகர்கள் மற்றும் பொது மக்களை சந்தித்து அவர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் குறித்து கருத்துக்களையும் கேட்டறிந்தார்.

# அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் பிரச்சினைகள் தீர்த்து வைக்கப்படும்

## ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசிய கிழக்கு மாகாணசபையின் முன்னாள் உறுப்பினர் மு.இராஜேஸ்வரன் நம்பிக்கை



கடந்த பல்லாண்டு காலமாக அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் எதிர்நோக்கிவரும் பல்வேறு பிரச்சினைகள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காலத்தில் தீர்த்து வைக்கப்படும்.

இவ்வாறு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை நேரில் சந்தித்துப் பேசிய கிழக்கு மாகாண முன்னாள் மாகாணசபை உறுப்பினர் மு.இராஜேஸ்வரன் நம்பிக்கை தெரிவித்தார்.

எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் எனது பூரண ஆதரவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு வழங்குவதற்கு முடிவெடுத்துள்ளேன் என்றும் இராஜேஸ்வரன் கூறினார்.

ஜனாதிபதியின் அழைப்பின் பேரில் கொழும்பு சென்று அவரைச் சந்தித்ததாக இராஜேஸ்வரன் தெரிவித்தார்.

"அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் படும் துன்பங்கள் கொஞ்சநஞ்சம் அல்ல. தொடர்ச்சியாக எமது மக்களை ஏமாற்றிக்கொண்டு ஒரு சில அரசியல்வாதிகள் சுய இலாபங்களை அடைகின்றனர். எல்லா மாவட்டங்களுடனும் ஒப்பிடும் பொழுது அம்பாறை மாவட்ட தமிழ்ப் பிரதேசங்கள் அனைத்தும் பின் தங்கியே காணப்படுகின்றன. எதிர்காலத்தில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களை அங்கு வசிக்கின்ற மக்களே நிர்வகிக்க வேண்டும். அவர்களுக்கான முடிவுகளை அவர்களே எடுக்க வேண்டும். ஆகவே இவற்றைக் கருத்தில் கொண்டு நமது மக்களுக்கான வாய்ப்புகளைக் கருத்தில் கொண்டு எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலை மக்கள் பயன்படுத்திக் கொள்ள வேண்டும்" என்று இராஜேஸ்வரன் கூறினார்.

"இந்தச் சந்திப்பில் ஜனாதிபதியிடம் கல்முனை வடக்கு பிரதேச செயலக விடயம் தொடர்பாக பேசியிருந்தேன். நான் மாகாணசபை உறுப்பினராக இருந்த போது நாவிதன்வெளி சம்மாந்துறை கல்முனை வலய தமிழ்ப் பாடசாலைகளை உள்ளடக்கிய கல்முனை வடக்கு கல்வி வலயம் உருவாக வேண்டியதன் அவசியம் கருதி பல முன்னெடுப்புக்களை செய்திருந்தேன். அதனை நிவர்த்தி செய்து தரவேண்டும் எனும் கோரிக்கையையும் முன்வைத்தேன். பட்டதாரிகளுக்கு தொழில் வழங்க வேண்டும்.

அம்பாறை மாவட்டத்தின் திருக்கோவில், பொத்துவில், சம்மாந்துறை, நாவிதன்வெளி , காரைதீவு பிரதேச தமிழ் மக்கள் எதிர்நோக்கும் பல்வேறு பிரச்சினைகள் தொடர்பாகவும் விபரித்திருந்தேன். அதனை ஜனாதிபதி கவனமாக செவிமடுத்தார்" என்று இராஜேஸ்வரன் குறிப்பிட்டார்

"ஜனாதிபதித் தேர்தல் முடிந்த பின்னர் பாராளுமன்றத் தேர்தல், மாகாணசபைத் தேர்தல்களை எதிர்கொள்ளும் போது தமிழ்க் கட்சிகள் வாக்குகளைப் பிரிக்காது அனைவரும் விட்டுக்கொடுப்புடன் ஒரு சின்னத்தில் போட்டியிட்டு ஆசனங்களைப் பாதுகாக்க வேண்டும்.

நான் மாகாணசபை உறுப்பினராக இருந்த போது முடிந்தவரை பல்வேறு அபிவிருத்தித் திட்டங்களை நிறைவேற்றியுள்ளேன். ஆனால் ஏனைய மாவட்டங்களுடன் ஒப்பிடுகையில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்களுக்கான தேவைகள், பிரச்சினைகள், அபிவிருத்திகள் தற்போதுவரை தீர்வின்றியே உள்ளன. ஜனாதிபதியுடனான சந்திப்பில் பல விடயங்களை விபரித்திருந்தேன். ஜனாதிபதி சாதகமான பதிலை தந்தார்" என்று இராஜேஸ்வரன் மேலும் தெரிவித்தார்.

வி.ரி.சகாதேவராஜா...
(காரைதீவு குறூப் நிருபர்)

# தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் ஆங்கில ஆசிரியர்களுக்கு பயிற்சி

இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழக கலை கலாசார பீடத்தின் ஆங்கில கற்கைகள் திணைக்களம் ஏற்பாடு செய்திருந்த, அம்பாறை மாவட்டத்திலுள்ள கல்முனை, சம்மாந்துறை மற்றும் அக்கரைப்பற்று கல்வி வலயங்களில் ஆங்கில ஆசிரியர்களாக பணியாற்றும் ஆசிரியர்களுக்கான ELT பயிற்சிப் பட்டறையானது அதன் இணைப்பாளர் பேராசிரியர் ஏ.எம்.எம். நவாஸ் தலைமையில் திணைக்களத்தின் கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

நிகழ்வை ஆங்கில கற்கைகள் திணைக்களத்தின் தலைவி கலாநிதி எம்.ஐ. பௌசுள் கரீமா ஆரம்பித்து வைத்தார்.

பயிற்சிப் பட்டறையின் முதல் சுற்றில் *Action Research for ELT Practitioners* எனும் தலைப்பில் பேராசிரியர் கலாநிதி நவாஸ், கருத்துக்களை முன்வைத்தத்துடன், பங்குபற்றுனர்களுடனான கருத்துப் பரிமாற்றங்களும் இடம்பெற்றன. இரண்டாம் சுற்றில் பேராசிரியர் சஹீட் அப்ராருள் ஹசன் தலைமையில் *Re conceptualizing effective Assessment* எனும் தலைப்பில் உரையாடலும் கருத்துப்பரிமாற்றங்களும் இடம் பெற்றன. நிகழ்வின் இறுதியில் இடம்பெற்ற சான்றிதழ் வழங்கும் நிகழ்வில் கலை கலாசார பீடாதிபதி பேராசிரியர் எம்.எம். பாஸில் மற்றும் பதில் உபவேந்தர் கலாநிதி யூ.எல். அப்துல் மஜீட் ஆகியோர் கலந்து கொண்டு உரையாற்றியதுடன், பங்குகொண்டவர்களுக்கு சான்றிதழ்களையும் வழங்கி வைத்தனர்.







நிகழ்வின்போது சிரேஷ்ட விரிவுரையாளர் எம்.ஏ.எம். சமீம் மற்றும் விரிவுரையாளர் இசட். ஹூருல் பிர்தௌஸ் உள்ளிட்ட பலரும் கலந்து கொண்டிருந்தனர்.

றிசாத் ஏ. காதர்...
(ஒலுவில் மத்திய விசேட நிருபர்)

# இலங்கையில் கைதான மீனவர்களை விடுவிக்க தூத்துக்குடியில் கடையடைப்பு

இலங்கைக் கடற்படையால் கைது செய்யப்பட்டு அபராதம் விதிக்கப்பட்டுள்ள மீனவர்களை மீட்குமாறு வலியுறுத்தி தமிழ்நாடு தருவைகுளத்தில் நேற்று மீனவர்கள் மற்றும் பொதுமக்கள் சார்பில் கடையடைப்பு மற்றும் உண்ணாவிரதப் போராட்டம் நடைபெற்றது.

தூத்துக்குடி மாவட்டம், தருவைகுளத்தில் இருந்து கடந்த மாதம் 2 விசைப்படகுகளில் மீன்பிடிக்கச் சென்ற மீனவர்கள் 22 பேரை இலங்கை கடற்படையினர் இலங்கை எல்லைக்குள் வைத்து கைது செய்திருந்தனர்.

கைது செய்யப்பட்டவர்களில் 12 மீனவர்கள் புத்தளம் மாவட்டம் கல்பிட்டி சுற்றுலா நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்டு வாரியபொல சிறையில் தடுத்து வைக்கப்பட்டனர்.

இந்த வழக்கு கடந்த 3 ஆம் திகதி மீண்டும் விசாரணைக்கு வந்த போது வழக்கை விசாரித்த நீதிபதி அம்மீனவர்களுக்கு அபராதம் விதித்ததுடன், அதனைச் செலுத்தத் தவறினால் 6 மாதம் சிறைத்தண்டனை அனுபவிக்க வேண்டி வருமென்றும் தீர்ப்பு வழங்கியிருந்தார்.



மற்றொரு விசைப்படகில் இருந்த 10 பேர் மீதான வழக்கு செப்டம்பர் 10 ஆம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டது.

இந்நிலையில் 22 மீனவர்களையும் மீட்குமாறு மத்திய, மாநில அரசுகளை வலியுறுத்தி நேற்று தருவைகுளத்தில் கடையடைப்பு மற்றும் உண்ணாவிரதப் போராட்டம் நடந்தது.

புத்தளம், கற்பிட்டி, நீர்கொழும்பு கரையோரம் தேடுதல்

# ஒரு தொகை பீடி இலைகள் கடற்படையினரால் மீட்பு

**கற்பிட்டி தினகரன் விஷேட நிருபர்**



புத்தளம், கற்பிட்டி மற்றும் நீர்கொழும்பு பகுதிகளில் இருந்து ஒருதொகை பீடி இலைகள் கடந்த இரண்டு நாட்களில் (7, 8) கடற்படையினரால் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேற்கு கடற்படை கட்டளையின் ரங்கல கடற்படையினர் நீர்கொழும்பு களப்பு பிரதேசத்தில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த டிங்கி இயந்திர படகு ஒன்றை சோதனை செய்தனர். இதன்போது, குறித்த டிங்கி இயந்திர படகில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் 6 உர மூடைகளை சோதனையிட்டபோது அதிலிருந்து 150 கிலோ கிராம் பீடி இலைகள் கைப்பற்றப்பட்டுள்ளன.

மேலும், கற்பிட்டி பொலிஸாருடன் இணைந்து வடமேற்கு கடற்படை கட்டளையின் விஜய நிறுவன கடற்படையினர் கற்பிட்டி அல்மனார் பகுதியில் விஷேட சோதனை நடவடிக்கையினை மேற்கொண்டனர்.

இதன்போது, குறித்த பகுதியில் சந்தேகத்திற்கு இடமான முறையில் வீதியில் நிறுத்தி வைக்கப்பட்டிருந்த லொறியொன்றை கடற்படையினரும், பொலிஸாரும் சோதனையிட்டனர். குறித்த லொறியில் மிகவும் சூட்சகமான முறையில் மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் பீடி இலைகளை கடற்படையினர் கைப்பற்றியுள்ளனர்.

இதன்போது, குறித்த லொறியில் 6 உரமூடைகளில் இருந்து 185 கிலோ கிராம் பீடி இலைகள் காணப்பட்டுள்ளதாக கடற்படையினர் குறிப்பிட்டனர்.

மேலும், சேரக்குளி கடல் பிரதேசத்தில் நீரில் மிதந்துகொண்டிருந்த 6 உரமூடைகளை கடற்படையினர் பரிசோதனை செய்தபோது, குறித்த 6 உரமூடைகளில் இருந்து 198 கிலோ கிராம் பீடி இலைகள் கண்டெடுக்கப்பட்டுள்ளன.

# பொருளாதார வீழ்ச்சியில் இருந்து நாட்டை மீட்டமைக்காக ஜனாதிபதிக்கு ஸ்ரீ.ல.சு.க ஆதரவு

## மத்திய குழு உறுப்பினர் அன்வர்



பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி இருந்த நாடு மீட்சி பெறுவதற்கு சிறந்த தலைமை வழங்கியமைக்காக ஸ்ரீ லங்கா சுதந்திரக் கட்சி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவளிப்பதாக ஸ்ரீ.ல.சு. கட்சியின் மத்திய குழு உறுப்பினரும் பலஸ்தீனுக்கான இலங்கையின் முன்னாள் தூதுவருமான பௌஸான் அன்வர் தெரிவித்தார்.

ஜனாதிபதி தேர்தலில் ஜனாதிபதிக்கு ஆதரவளிப்பது குறித்து ஊடகவியலாளர்கள் மத்தியில் குறிப்பிடும்போதே அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் தொடர்ந்தும் கூறுகையில், 2022 ஆம் ஆண்டின் ஆரம்பப்பகுதியில் நாடு பொருளாதார வீழ்ச்சிக்கு உள்ளாகி வங்குரோத்து நிலையை அடைந்தது. அச்சந்தர்ப்பத்தில் அன்றைய பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவும் அவர் தலைமையிலான அரசாங்கமும் பதவி விலகியது. அச்சமயம் ஆட்சிப் பொறுப்பை ஏற்குமாறு அழைப்பு விடுக்கப்பட்டும் அன்றைய எதிர்க்கட்சித் தலைவரான சஜித் பிரேமதாச அப்பொறுப்பை ஏற்காது சாக்கு போக்குகளைக் கூறி தவிர்ந்து கொண்டார்.

அந்த இக்கட்டடான சூழலில் முன்னாள் பிரதமரான ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க நாட்டினதும் மக்களினதும் நலன்களை முன்னிலைப்படுத்தி பிரதமர் பதவியை ஏற்றார். அதனைத் தொடர்ந்த சொற்ப காலத்தில் ஜனாதிபதி பதவியை ஏற்க வேண்டிய நிலைக்கு அவர் உள்ளானார்.

அதனால் நாட்டின் தலைமையை ஏற்ற ஜனாதிபதி பொருளாதாரத்தை கட்டியெழுப்புவதற்கான வேலைத் திட்டங்களை விரிவான அடிப்படையில் ஆரம்பித்தார். அதன் பயனாக பொருளாதார வீழ்ச்சி காலத்தில் நிலவிய அசௌகரியங்கள் கட்டம் கட்டமாக நீங்கியது. நாடு பெற்றுக் கொண்ட பொருளாதாரப் பிரதிபலன்கள் மக்களும் பெற்றுக்கொடுக்கப்படலாயின.

அந்த பொருளாதார நெருக்கடி காலத்திலும் இராஜதந்திரமான முறையில் நாட்டின் ஒவ்வொரு விடயங்களையும் கையாண்டு பொருளாதார வீழ்ச்சியின் பாதிப்புக்கள் மற்றும் தாக்கங்களில் இருந்து மக்களை மீட்டெடுத்தார்.

அத்தகைய தலைவரான ஜனாதிபதிக்கு நன்றிக்கடன் தெரிவிப்பது இந்நாட்டின் ஒவ்வொரு வாக்காளரதும் பொறுப்பாகும்.

# தே.ம. சக்தியின் தேர்தல் அலுவலகம் மீது தாக்குதல்

**(ஊவா சுழற்சி நிருபர்)**

தேசிய மக்கள் சக்தி (ஜே.வி.பி.) வெல்லவாய வருணகம தேர்தல் அலுவலகம் மீது கடந்த சனிக்கிழமை இரவு இனந்தெரியாதோர் தாக்குதல் மேற்கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இத் தாக்குதலில் அலுவலகத்தின் கதிரைகள், மேசைகள் உடைக்கப்பட்டு பெனர் மற்றும் போஸ்டர்கள் காகிதாதிகள் போன்றவை கிழித்து வீசப்பட்டுள்ளதாக தெரிவித்த வெல்லவாய பொலிஸார், மொனராகலை தேர்தல் உதவி ஆணையாளரின் பணிப்புரைக்கமைய மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாக மேலும் தெரிவித்தனர். இதுவரை எவரும் கைது செய்யப்படவில்லையென்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

# வலம்புரி கவிதா வட்டத்தின் 104 ஆவது கவியரங்கு

வலம்புரி கவிதா வட்டத்தின் 104 ஆவது கவியரங்கம் எதிர்வரும் 17 ஆம் திகதி (17/09/2024) செவ்வாய்க்கிழமை காலை 10 மணிக்கு கொழும்பு பழைய நகர மண்டபத்தில் நடைபெறும். கவிஞர் வாழைத்தோட்டம் எம். வஸீர் கவியரங்கிற்கு தலைமைத் தாங்குவார்.

நான்கு நிமிடங்களுக்கு உட்பட்ட கவிதை பாட விரும்புவோர் நஜ்முல் ஹுசைன் (தலைவர்) 074 143 8447 அல்லது இளநெஞ்சன் முர்ஷிதீன் (செயலாளர்) 077 738 8149 அல்லது ஈழகணேஷ் (பொருளாளர்) 071 756 3646 உடன் தொடர்பு கொள்ளவும்.

# எவரும் பொறுப்பேற்காத நிலையில் நாட்டை பொறுப்பேற்றவர் ரணில்

வெலிகம நகர சபை முன்னாள் தலைவர் மொஹமட்

**(வெலிகம தினகரன் நிருபர்)**

கடந்த இரண்டு வருடங்களுக்கு முன் நாடு பொருளாதார ரீதியாக மிகவும் வீழ்ச்சியடைந்திருந்தது. அந்நிலையில், எவருமே நாட்டைப் பொறுப்பேற்க முன்வராத நிலையில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க துணிச்சலாக முன் வந்து நாட்டை பொறுப்பேற்றார். தற்போது நாடு நல்ல நிலையில் முன்னேறி வருவதை அவதானிக்க முடிகின்றதென முன்னாள் வெலிகம நகர சபைத் தலைவர் எச்.எச். மொஹமட் தெரிவித்தார்.

வெலிகமவில் இடம் பெற்ற நிகழ்வொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

தொடர்ந்து அவர் உரையாற்றுகையில், போட்டியிடும் வேட்பாளர்களுள் பொருத்தமானவர் யார்? என்பதை அறிந்து எதிர்வரும் 21ஆம் திகதி நன்கு சிந்தித்து வாக்களிக்க வேண்டும்.

நாடு மிகவும் வீழ்ந்திருந்த சமயம் நாட்டை முன்னேற்றப் பாதையில் இட்டுச் சென்றவர் யார் ? வரிசை யுகத்தை இல்லாதொழித்தவர் யார்? இவற்றையெல்லாம் நன்கு சிந்தித்து வாக்களிக்க வேண்டும். சர்வதேச அங்கீகாரம் பெற்ற தற்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவை வெற்றி பெறச் செய்வதன் மூலமே நாட்டுக்கு ஒரு விடிவு கிட்டும் என்றும் அவர் தெரிவித்தார்.

# கடல் அலையில் சிக்கிய இளைஞனை காணவில்லை

**(பாணந்துறை மத்திய குறூப் நிருபர்)**

பாணந்துறை நகர்ப்புற கடற்கரையில் பொழுதுபோக்குக்காக கடலில் நீராடச் சென்ற இளைஞர் குழுவில் கடல் அலையில் சிக்குண்டு காணாமல்போன இருவரில் ஒருவர் பாணந்துறை உயிர் காப்பு பிரிவினரால் மீட்கப்பட்டுள்ளதுடன் மற்றுமொருவர் கடந்த ஞாயிறு மாலை முதல் காணாமல் போயுள்ளார். வேறவத்த பகுதியைச் சேர்ந்த எம். ரிஹான் (வயது 23) இளைஞரே இவ்வாறு காணாமல் போயுள்ளார்.

இவரை தேடும் நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.


உள்நாட்டு இறைவரித் திணைக்களம்

விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

**உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் Perimeter மற்றும் Inner Firewalls என்பவற்றைப் பராமரித்தல்**

**ஒப்பந்த இலக்கம் : IRI PAM/28/123/2025**

01. உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் Perimeter மற்றும் Inner Firewalls என்பவற்றைப் பராமரிப்பிற்காக தகைமையுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முத்திரைக்குறி பொறியிடப்பட்ட விலைமனுக்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் சார்பாக திணைக்கள பெறுகைக்குழுவின் (மேல் நிலை) தலைவர் கோருகின்றார். பராமரிப்பு காலம் 1 வருடமாகும்.
02. தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் முறைமையின் ஊடாக விலைக்கோரல் நடாத்தப்படும்.
03. விலைமனு சமர்ப்பித்தல் மற்றும் ஒப்பந்தங்களை கையளிக்கப் பெறுவதற்கான தகைமை பெறுவதற்கு, வெற்றிகரமான விலைமனுதாரர்.
    அ) ஒப்பந்தத்தைப் பெற்றுக்கொள்ளும் வேளையில் ஒப்பந்ததாரர் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாது இருத்தல் வேண்டும் என்பதுடன் இது சம்பந்தமான சத்தியக்கடதாசியை சமர்ப்பித்தல் வேண்டும்.
    ஆ) இலங்கையில் செல்லுபடியாகும் வியாபார பதிவைக் கொண்டிருத்தல் வேண்டும்.
    இ) அரசாங்க திணைக்களங்கள்/நிறுவனங்கள் அல்லது மிகவும் கீர்த்தி வாய்ந்த தனியார் கம்பனிகளில் பட்டியலப்படுத்தப்பட்டுள்ள இதனையொத்த கனரக பொருட்களைப் பராமரிப்பில் குறைந்தபட்சம் 05 வருட அனுபவத்தை கொண்டிருத்தல் வேண்டும்.
    ஈ) கடந்த 3 ஆண்டுகளில் 75 மில்லியன் இல. ரூபா வருடாந்த புரள்வைக் கொண்டிருத்தல்.
05. மீளளிக்கப்படாத கட்டணமாக பன்னிரண்டாயிரத்து ஐந்நூறு ரூபாவைச் (ரூ. 12,500/-) செலுத்துவதன் பேரில் 2024.09.10ஆம் திகதி முதல் 2024.09.30ஆம் திகதி வரை 0900 மணித்தியாலம் முதல் 1500 மணித்தியாலம் வரை கொழும்பு - 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்கள ஆணையாளர் நாயகத்திற்கு ஓர் எழுத்து மூல விண்ணப்பத்தை சமர்ப்பிப்பதன் பேரில் ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் ஆங்கில மொழியிலான முழுமையான விலைமனு ஆவணத் தொகுதியொன்றைக் கொள்வனவு செய்யலாம். கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்தில் மாத்திரம் செலுத்துதல் வேண்டும்.
06. 2024-10-01ஆம் திகதி மு.ப. 11.00 மணித்தியாலம் அல்லது அதற்கு முன் கொழும்பு - 02, சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், 15ஆம் மாடி, பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவ கிளை, திணைக்களப் பெறுகைக்குழு (மேல்நிலை) தலைவருக்கு விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுதாரர்களால் சமுகமளிப்பதற்கு தேர்ந்தெடுத்துள்ள விலைமனுதாரர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் விலைமனுக்கள் மூடப்பட்டவுடன் உடனடியாகத் திறக்கப்படும்.
07. விலைமனுக்கள் 2025-01-01ஆம் திகதி வரை செல்லுபடியாகும்.
08. ஐந்து இலட்சம் (ரூ. 500,000.00) இலங்கை ரூபா கொண்ட ஓர் விலைமனு பிணை எல்லா விலைமனுவுடனும் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும். உள்நாட்டு இறைவரி ஆணையாளரின் பெயரில் இலங்கை மத்திய வங்கியால் அனுமதிக்கப்பட்ட ஓர் வர்த்தக வங்கியினால் வழங்கப்படும் விலைமனு ஆவணத்தின் அனுமதிக்கப்பட்ட படிவத்தின் பிரகாரம் வங்கிப்பிணை படிவத்தில் மாத்திரமான ஓர் விலைக்கோரல் பிணை முறியாகவிருத்தல் வேண்டும். 2025-02-01ஆம் திகதி வரை விலைமனுப்பிணை முறி செல்லுபடியாதல் வேண்டும்.

**தலைவர்,**
**திணைக்களப் பெறுகை குழு (மேல் நிலை)**
**பெறுகை மற்றும் ஆதன முகாமைத்துவ கிளை,**
**15ஆம் மாடி, உள்நாட்டு இறைவரித் திணைக்களம்,**
**சேர் சிற்றம்பலம் ஏ கார்டினர் மாவத்தை, கொழும்பு - 02.**
**2024-09-09ஆம் திகதி.**



**கேள்வி திருத்த அறிவித்தல்**

**சுகாதார அமைச்சு**

**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை**

**Tender for the Supply, Installation, Commissioning & Maintenance of Cardiac Catheterization Laboratory**

**Tender No.: Q 429/24**

2024.07.29, 2024.08.21 மற்றும் 2024.08.28 ஆம் திகதிகளில் இந்த பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட மேற்குறிப்பிட்ட கேள்வி அறிவித்தல் தொடர்பானது.

சில திருத்தங்கள் பின்வருமாறு மேற்கொள்ளப்பட்டுள்ளதென தயவு செய்து கவனிக்கவும்.

விலைமனு மூடுதல் மற்றும் திறத்தல் திகதி ஆகியன 2024.09.26 ஆம் திகதியன்று மு.ப. 10 மணி வரையும் நீடிக்கப்பட்டுள்ளது.

விலைமனுவின் செல்லுபடியாகும் காலம் 2024.12.26 ஆம் திகதி வரையும்

கேள்விப்பிணையின் செல்லுபடியாகும் காலமானது 2025.01.26 ஆம் திகதியன்று வரையும்.

மேற்கூறப்பட்டுள்ள விளம்பரத்தில் வழங்கப்பட்ட ஏனைய நியதிகள் மற்றும் நிபந்தனைகளில் எவ்வித மாற்றமுமில்லை.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு,**
**ஸ்ரீ ஜயவர்தனபுர பொது வைத்தியசாலை,**
**தளபத்பிட்டிய.**
**நுகேகொட.**





**2025ஆம் வருடத்தில் ஆதனங்களை குத்தகைக்கு விடல்**

**பொல்பித்திகம பிரதேச சபை**

இங்கு பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ள ஆதனங்களை 2025ஆம் வருடத்தில் குத்தகைக்கு விடுவதற்காக முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட கேள்விப் படிவங்கள் என்னால் ஏற்றுக்கொள்ளப்படும். எக்காரணத்தைக் கொண்டும் கீழ்க் குறிப்பிடப்பட்டுள்ள நேரத்திற்குப் பின் கிடைக்கப்பெறும் கேள்விப்படிவங்கள் ஏற்றுக்கொள்ளப்பட மாட்டாது.

கேள்விப் படிவங்கள் வழங்க ஆரம்பிக்கும் தினம் மற்றும் நேரம் - 2024-09-09 பி.ப. 2.00
கேள்விப் படிவங்கள் வழங்கும் இறுதித் தினம் மற்றும் நேரம் - 2024-10-02 பி.ப. 2.30
கேள்விப் படிவங்கள் ஏற்றுக்கொள்ளும் இறுதித் தினம் மற்றும் நேரம் - 2024-10-03 மு.ப. 11.00
கேள்விப் படிவங்கள் திறக்கப்படும் தினம் மற்றும் நேரம் - 2024-10-03 மு.ப. 11.00

எம்மால் விநியோகிக்கப்படும் கேள்விப் படிவங்கள் இரண்டை பூர்த்தி செய்து வெவ்வேறான இரு உறைகளில் இட்டு பதிவுத் தபால் மூலம் செயலாளர், பிரதேச சபை, பொல்பித்திகம எனும் முகவரிக்கு அனுப்புதல் வேண்டும் என்பதுடன் கேள்விகளைத் தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் தாம் விண்ணப்பிக்கும் ஆதனத்தின் பெயரை தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும். கேள்விகளை நேரில் கொண்டு வந்து ஒப்படைக்க விரும்புவோர் கேள்வி விண்ணப்பங்களை இந்த அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடல் வேண்டும். விண்ணப்பப் படிவங்களைப் பெற்றுக்கொண்டு கேள்விகளைச் சமர்ப்பிக்காத விண்ணப்பதாரர்கள் மற்றும் ஆகக் குறைந்த கேள்வித் தொகையை விட குறைந்த தொகைக்கு கேள்வி கோரும் மற்றும் பெறுகை நிபந்தனைகளை மீறும் கேள்விதாரர்களின் கேள்விப் பிணைத் தொகை சபைக்குரித்தாக்கப்படும்.

அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணத்தை ரொக்கப் பணமாக மாத்திரம் பொல்பித்திகம பிரதேச சபைக்குச் செலுத்தி கேள்விப் படிவங்களைப் பெற்றுக்கொள்ளலாம் என்பதுடன் மேலதிக விபரங்களை அலுவலக நேரத்தினுள் அலுவலகத்திற்கு வருகை தந்து அல்லது 037-2273135 எனும் தொலைபேசி எண்ணைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

| ஆதனம் | மீளளிக்கப் படாத கேள்விப் படிவக் கட்டணம் ரூபா | மீளளிக்கப் படும் கேள்விப் பிணை ரூபா | 2025ஆம் வருடத்தில் குத்தகைக்கு விடும் ஆகக் குறைந்த தொகை ரூபா |
|---|---|---|---|
| ரம்பே செவ்வாய்க்கிழமை வாரச்சந்தை | 3000.00 | 130000.00 | 2600000.00 |
| பொல்பித்திகம புதன்கிழமை வாரச் சந்தை | 3000.00 | 100000.00 | 2000000.00 |
| கல்வெட்டேவ வெள்ளிக்கிழமைச் சந்தை | 3000.00 | 75000.00 | 1500000.00 |
| பொல்கஹன்கொட புதன்கிழமை வாரச் சந்தை | 3000.00 | 21200.00 | 265000.00 |
| சாலியகம வியாழக்கிழமை வாரச் சந்தை | 1500.00 | 9000.00 | 90000.00 |
| கிரலபொக்காகம திங்கட்கிழமை வாரச் சந்தை | 3000.00 | 34000.00 | 425000.00 |
| தலமல்கம வாரச்சந்தை | 1500.00 | 2000.00 | 20000.00 |
| ரம்பே வாரச் சந்தையின் பன்றியிறைச்சி வியாபாரம் | 1500.00 | 9500.00 | 95000.00 |
| கல்வெட்டேவ வாரச் சந்தையின் பன்றியிறைச்சி வியாபாரம் | 1500.00 | 5000.00 | 50000.00 |
| பொல்பித்திகம நகரத்தின் மீன் தட்டு | 1500.00 | 6500.00 | 65000.00 |
| மொரகொல்லாகம 01ஆம் இலக்க கடை அறை | 1500.00 | 3802.00 | 38020.00 |
| மொரகொல்லாகம 02ஆம் இலக்க கடை அறை | 1500.00 | 4342.00 | 43420.00 |
| புறநெகும பல்காரிய கட்டிடத்தின் முன்புறப் பகுதி | 3000.00 | 24000.00 | 300000.00 |
| புறநெகும பல்காரிய கட்டிடத்தின் மேல் பகுதி | 3000.00 | 28800.00 | 360000.00 |
| சந்தைக் கட்டிடத்தொகுதியின் 02ஆம் இலக்கப் பகுதி | 3000.00 | 32224.00 | 402800.00 |
| 14ஆம் இலக்க பெட்டிக் கடை | 1500.00 | 2500.00 | 25000.00 |
| 18ஆம் இலக்க பெட்டிக் கடை | 1500.00 | 2480.00 | 24800.00 |
| 19ஆம் இலக்க பெட்டிக் கடை | 1500.00 | 2040.00 | 20400.00 |
| 20ஆம் இலக்க பெட்டிக் கடை | 1500.00 | 3000.00 | 30000.00 |
| குருலன் கடவல வத்த | 1500.00 | 1200.00 | 12000.00 |
| பெதும்புர இஹலகெதர வத்த | 1500.00 | 3100.00 | 31000.00 |

**கவனிக்கவும்:** கிடைக்கப்பெற்றுள்ள கேள்விப் படிவங்கள் தொடர்பான இறுதித் தீர்மானம் கேள்விச் சபையைச் சார்ந்தது.

**ஐ.எம். உதேனிகா மொஹொட்டி,**
**செயலாளர்,**
**பிரதேச சபை,**
**பொல்பித்திகம.**

2024-09-03ஆம் திகதி பொல்பித்திகம சபை அலுவலகத்தில்.



**கல்கமுவ பிரதேச சபை**

**பெறுகை அறிவித்தல்**

**2025ம் ஆண்டிற்கான சொத்துக்களை குத்தகைக்கு விடல்**

கல்கமுவ பிரதேச சபைக்குச் சொந்தமான கீழ்க்காணும் சொத்துக்களை 2025ம் ஆண்டிற்கு குத்தகைக்கு விடுவதற்காக கேள்விப்பத்திரங்கள் 2024 செப்டெம்பர் 11 முதல் 2024 ஒக்டோபர் 03 வரை விநியோகிக்கப்படுவதுடன் பூர்த்தி செய்யப்பட்ட கேள்விப் பத்திரங்கள் 2024 ஒக்டோபர் 09 பி.ப. 1.00 வரை மீள ஏற்கப்படுவதுடன் கேள்விப் பத்திரங்கள் செயலாளர் பிரதேச சபை, கல்கமுவ இற்கு கையோடு அல்லது பதிவுத் தபாலில் அனுப்பலாம்.

கேள்விப் பத்திரங்கள் திறத்தல் 2024 ஒக்டோபர் 09 பி.ப. 1.30 இற்கு இடம்பெறுவதுடன் மேலதிக விபரங்களை கல்கமுவ பிரதேச சபையின் வருமான மேம்பாட்டு அதிகாரியிடம் பெற்றுக் கொள்ளலாம்.

கேள்வி கோருவதுடன் சம்பந்தப்பட்ட சொத்துக்கள் கீழ்க்காணுமாறு அமையும்.

| தொ. இல. | சொத்து பற்றிய விபரம் | குறைந்தபட்ச கேள்வி (ரூ.) | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் (ரூ.) | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புத் தொகை (ரூ.) |
|---|---|---|---|---|
| 1 | கல்கமுவ வாரச்சந்தை, கல்கமுவ வாரச்சந்தை வாகன நிறுத்துமிட கட்டணத்தை அறவிடல் வாரச் சந்தை உணவகம், வாரச்சந்தை பொது மலசலகூடம் (வாரச்சந்தை மீன் தட்டு மற்றும் இறைச்சி கடை தவிர்த்து) | 4,050,000.00 | 5,000.00 | 162,000.00 |
| 2 | எஹட்டுவெவ வாரச்சந்தை மற்றும் வாரச்சந்தை மீன்தட்டு | 225,000.00 | 2,000.00 | 18,000.00 |
| 3 | நான்னேரிய வாரச்சந்தை | 270,000.00 | 2,000.00 | 21,600.00 |
| 4 | பஸ் நிலைய பொது மலசலகூடம் | 26105.00 | 1500.00 | 2611.00 |
| 5 | பழைய பஸ் நிலைய பொது மலசலகூடம் | 17340.00 | 1500.00 | 1734.00 |
| 6 | பிரதேச சபை உணவகம் | 17570.00 | 1500.00 | 1757.00 |
| 7 | பூலஞ்சிய துரு செவன உணவகம் | 8785.00 | 1500.00 | 879.00 |
| 8 | பல்நோக்கு கட்டிடம் அருகில் வாகன நிறுத்துமிடம் | 67982.00 | 1500.00 | 6798.20 |
| 9 | கல்கமுக பஸ் நிறுத்துமிட கட்டணம் அறவிடல் | 1,889,690.00 | 2000.00 | 94484.50 |
| 10 | கல்கமுவ வாரச்சந்தை கடல் மீன் தட்டு | 55372.00 | 1500.00 | 5538.00 |
| 11 | அரசன்வெவ மிதக்கும் உணவகம் | 95832.00 | 1500.00 | 9583.00 |

2024.09.05
**கல்கமுவ பிரதேச சபை,**
**அலுவலகத்தில்.**

**ஏ.பீ.நிமல் ரத்னாயக்க,**
**செயலாளர்,**
**பிரதேச சபை, கல்கமுவ.**

# தங்க விலையில் திடீர் வீழ்ச்சி



நாட்டில் சற்று ஏற்ற இறக்கத்துடன் காணப்பட்ட தங்கத்தின் விலை நேற்று (09) சடுதியாக குறைவடைந்துள்ளது.

நேற்றைய நிலவரத்தின் படி ஒரு அவுன்ஸ் தங்கத்தின் விலை 747,490 ரூபாவாகவும், 24 கரட் கிராம் தங்கத்தின் விலை 26,370 ரூபாவாகவும், 24 கரட் தங்கப் பவுண் 210,950 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

அத்துடன், 22 கரட் தங்க கிராம் 24,180 ரூபாவாகவும் 22 கரட் தங்கப் பவுண் 193,400 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

21 கரட் தங்கம் ஒரு கிராமின் விலை 23,080 ரூபாவாகவும், 21 கரட் தங்கப் பவுண் 184,600 ரூபாவாகவும் பதிவாகியுள்ளது.

மேலும், கொழும்பு செட்டியார் தெரு தங்க நிலவரங்களின்படி 24 கரட் தங்கப் பவுண் ஒன்று 201,000 ரூபாவாகவும், 22 கரட் தங்கப் பவுண் ஒன்று 186,000 ரூபாவாகவும் பதிவாகியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# கீதா குமாரசிங்க சஜித்துக்கு ஆதரவு



ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசாங்கத்தில் முக்கிய பொறுப்புகளை வகித்துவரும் இராஜாங்க அமைச்சர் கீதா குமாரசிங்க, எதிர்வரும் ஜனாதிபதித் தேர்தலில் ஐக்கிய மக்கள் சக்தியின் ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவுக்கு தனது ஆதரவை வழங்க தீர்மானித்துள்ளார்.

கண்டியில் நேற்று (09) நடைபெற்ற ஐக்கிய மக்கள் சக்தியின் பொதுக்கூட்டத்தில் கலந்துகொண்ட கீதா குமாரசிங்க, சஜித் பிரேமதாசவுக்கு தனது ஆதரவை வெளிப்படுத்தியுள்ளார்.

ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்தி காலி மாவட்டத்திலிருந்து தேசியப் பட்டியலினூடாக பாராளுமன்றத்துக்கு தெரிவித்த கீதா குமாரசிங்க, தற்போது பெண்கள் மற்றும் சிறுவர் இராஜாங்க அமைச்சராக கடமையாற்றி வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

# இன்றைய பலன்கள்

(10.09.2024)



கலாநிதி சிவஸ்ரீ இராமசந்திர குருக்கள் பாபு சர்மா
(ஸ்ரீ வித்யா ஜோதிட நிலையம் கொழும்பு)

**மேஷம்:**
சொந்த தொழிலில் புதிய வாடிக்கையாளர்களும் வந்து இணைவர். நினைத்த காரியங்களை தீவிர முயற்சியுடன் செய்து முன்னேறுவீர்கள்.

**ரிஷபம் :**
சொந்த தொழிலில் புதிய வாடிக்கையாளர்கள் வருகையும் அவர்களால் பொருளாதார முன்னேற்றமும் உண்டு.

**மிதுனம்:**
சொந்தத் தொழிலில் பரபரப்பாக வேலை நடைபெறும். ஓய்வின்றி உழைப்பீர்கள். எதிர்பார்க்கும் பணம் கைக்கு வந்து சேரும்.

**கடகம்:**
உறவினர்களிடமும் நண்பர்களிடமும் சுமூகமாக நடந்து கொள்வீர்கள். வெளிநாட்டு தகவலில் மகிழ்ச்சி ஏற்படும்.

**சிம்மம்:**
அவசரமாக செய்து முடிக்க வேண்டிய காரியங்களை திட்டமிடுவீர்கள். முக்கிய நண்பர்களின் துணை கொண்டு கடினமான பணிகளை செய்து முடிப்பீர்கள்.

**கன்னி:**
பொருளாதார முன்னேற்றம் ஏற்படும். சகல விடையங்களிலும் அதிக கவனம் செலுத்துவது நல்லது.

**துலாம்:**
அலுவலகத்தில் தங்கள் எதிர்பார்ப்புகளை அடைவதில் சிக்கல் ஏற்படலாம். செய்யும் காரியங்களில் கவனமும் நிதானமும் தேவை.

**விருச்சிகம்:**
வெளிநாட்டில் இருந்து நல்ல தகவல் கிடைக்கும். கொடுக்கல் வாங்கல்களில் நிதானமான முடிவை எடுங்கள்.

**தனுசு:**
சொந்தத் தொழிலில் எதிர்பார்க்கும் ஆதாயம் கிடைக்கும். வரவேண்டிய தன வரவுகள் தாமதம் இல்லாமல் வந்து சேரும்.

**மகரம்:**
எதிர்பார்க்கும் பண வரவு குறித்த காலத்தில் வந்து சேரும். எதிர்பார்த்திருந்த கடன் உதவியும் கிடைத்து மகிழ்வீர்கள்.

**கும்பம்:**
எதிர்பார்த்த பண வரவும் அலுவலகத்தின் மூலம் கிடைக்கப்பெறும். முயற்சியுடன் செயல்பட்டு காரியங்களில் வெற்றி அடைவீர்கள்.

**மீனம்:**
அனேக காரியங்களில் தீவிரமாக முயற்சி செய்தாலும் சில வற்றிலேயே எதிர்பார்க்கும் பலன்கள் கிடைக்கும்

# அவரகொட்டுவ சித்தி விநாயகர் ஆலயத்தில் சதுர்த்தி விழா






வத்தளை அவரகொட்டுவ அருள்மிகு சித்தி விநாயகர் ஆலயத்தில் ஆவணி சதுர்த்தி விழா வெகு விமரிசையாக கொண்டாடப்பட்டது. இதில் வத்தளை நகர சபையின் முன்னாள் உறுப்பினர் விஜேகுமார் அகரம் மன்றத்தின் தலைவர் சுரேஸ் ஆகியோர் கலந்து கொண்டனர்

# தெங்கு அபிவிருத்தி அதிகாரசபையின் பெயரை பயன்படுத்தி மோசடிச் செயல்!

தெங்கு அபிவிருத்தி அதிகார சபையின் பெயரைப் பயன்படுத்தி, சில போலி விற்பனையாளர்கள் தென்னை தொடர்பான பொருட்களை விற்பனை செய்து வருவதாக தெங்கு அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. இது தொடர்பான விளம்பரங்கள் முகநூல் மற்றும் பிற சமூக வலைத்தளங்களில் வெளியாகி வருவதாகவும் இதற்கு பொது மக்கள் ஏமாந்துவிட வேண்டாம் எனவும் குறித்த சபை அறிவுறுத்தியுள்ளது. எனவே, உயர்தர தென்னங்கன்றுகளை பெற்றுக் கொள்ள,அல்லது தெங்கு தொடர்பானஉற்பத்தி பொருட்களை பெற்றுக்கொள்ளவதற்கு 011 286 10 11 என்ற தொலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொண்டு தகவல்களை பெற்றுக்கொள்ள முடியும்.

## மனித உரிமை பேரவை...

நிறைவேற்றப்பட்டமையினால் அவற்றை நிராகரிப்பதாக இலங்கை தெரிவித்துள்ளது. இலங்கை பல தசாப்தகால மோதல்களினால் ஏற்பட்ட காயங்களை ஆற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொண்டுள்ளதாகவும் இலங்கை அரசாங்கத்தின் பிரதிநிதி தெரிவித்துள்ளார்.

## ஜனாதிபதி தேர்தலில் வாக்களிக்க...

அதிகாரி மூலமாக விண்ணப்பங்களை சமர்ப்பித்து மாவட்ட தேர்தல் அலுவலகத்தில் தற்காலிக வாக்காளர் அடையாள அட்டையை பெற்றுக் கொள்ள முடியும் என ஆணைக்குழு குறிப்பிட்டுள்ளது.

## வீடுகளுக்கு பேரணியாக செல்ல...

தெரிவித்த அவர், வீடுகளுக்கு பேரணியாகச் சென்று துண்டுப் பிரசுரங்களை விநியோகிக்க சட்டம் இடமளிக்கவில்லை எனவும் சுட்டிக்காட்டினார்.

மேலும் கருத்து தெரிவித்த அவர்,

வேட்பாளர்களின் பிரசார நடவடிக்கைகளுக்காக வாகனங்களில் ஸ்டிக்கர்கள் ஒட்டப்படுகின்றது. தேர்தலில் போட்டியிடும் வேட்பாளர்களின் வாகனங்களில் மட்டுமே ஸ்டிக்கர்களை ஒட்டமுடியும்.

மேலும், சம்பந்தப்பட்ட வேட்பாளரின் வாகனத்தை தவிர, ஏனைய வாகனங்களில் ஸ்டிக்கர் அல்லது வேறு பிரசாரங்களை காட்சிப்படுத்துவது சட்டவிரோதமானது என தேர்தல்கள் ஆணைக்குழுவின் தலைவர் குறிப்பிட்டார்.

## பாடசாலை மாணவர்களது...

கடந்த 6 மாதங்களுக்கு முன்னர் சமர்ப்பிக்கப்பட்ட பாடசாலை மாணவர்களுக்கான பருவச் சீட்டு நிவாரணம் வழங்கும் முறைமையை மாற்றியமைப்பது தொடர்பாக, சமர்ப்பிக்கப்பட்ட அமைச்சரவைப் பத்திரத்துக்கமைய குழுவொன்றை நியமித்த நிதி அமைச்சு, அக்குழுவினூடாக பெற்றுக்கொண்ட பரிந்துரைகளை அமைச்சரவைக்கு சமர்ப்பித்துள்ளதாகதாகவும் அமைச்சர் பந்துல குணவர்தன குறிப்பிட்டார்.

மேலும், ஏனைய பிரேரணைகள் உட்பட புதிய அமைச்சரவைப் பத்திரம் ஒன்று அமைச்சரவைக்கு சமர்ப்பிக்கப் படும் எனவும் அமைச்சர் மேலும் தெரிவித்தார்.

## வடக்கில் அநுரவின் உரைக்கு...

தெரிவித்துள்ள சி.வி. விக்னேஸ்வரன், வடக்கு, கிழக்கு தமிழ் பேசும் மக்கள் மீது மக்கள் விடுதலை முன்னணிக்கு எந்தவொரு நல்லெண்ணமும் கிடையாது. வடக்கு

கிழக்குப் பிரிவினைக்காக இணைந்து செயற்பட்ட அவர்கள், தமிழ் மக்கள் மீதும் கோபம் கொண்டுள்ளனர். வடக்கு, கிழக்கு தமிழர் பிரச்சினை குறித்து பாராளுமன்றத்தில் பல தடவைகள் கேட்டபோதும் அவர் சாதகமான பதிலை வழங்கவில்லை. இது வடமொழியில் அவர் ஆற்றிய உரையின் வெளிப்பாடு.

தமிழர்களின் பிரச்சினைக்கு தீர்வு காணும் சமஷ்டி முறைக்கு அவர்கள் ஒரு போதும் உடன்படப் போவதும் இல்லை. தீர்வை வழங்கப் போவதும் இல்லை. இதன் வெளிப்பாடே யாழ்ப்பாணத்தில் அநுரகுமார திஸாநாயக்க ஆற்றிய உரை என சி.வி. விக்னேஸ்வரன் தெரிவித்தார்.

தேசிய மக்கள் சக்தியின் தலைவர் அநுரகுமார திஸாநாயக்க வடபகுதிக்கு வந்து இனவாதத்தை தூண்டும் வகையில் கருத்துக்களை வெளியிட்டதாகவும் சுமந்திரன் வழமைபோன்று அதுகுறித்து தனது கருத்தை தெரிவித்துள்ளதாகவும் ஈ.பி.டி.பி.யின் தலைவரும் அமைச்சருமான டக்ளஸ் தேவானந்தா தெரிவித்தார்.

ஈபிடிபி கட்சி கடந்த காலங்களில் இனவாதத்துக்கு பதிலாக தேசிய ஒற்றுமையை கட்டியெழுப்ப அர்ப்பணிப்புடன் செயற்பட்ட கட்சி என்பதனால், பாராளுமன்ற உறுப்பினர் அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்துக்கு வந்தபோது இனவாதத்தை தூண்டும் வகையில் உரை நிகழ்த்துவதை ஏற்றுக்கொள்ள முடியாதெனவும் அவர் தெரிவித்துள்ளார். இதனிடையே, மக்கள் விடுதலை முன்னணியின் ஜனாதிபதி வேட்பாளர் அநுரகுமார திஸாநாயக்க ஆற்றிய உரை ஆத்திரமூட்டும் பேச்சு என முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் எம்.சந்திரகுமார், தெரிவித்துள்ளார். தமிழ் மக்களை முட்டாள்களாக கருதியே அவர் அவ்வாறான உரையை நிகழ்த்தியதாகவும், தமிழ் மக்களை எந்த வகையிலும் கட்டாயப்படுத்தி வாக்களிக்க முடியாதெனவும் ஜனநாயக ரீதியில் செயற்பட வேண்டும் எனவும் அவர் மேலும் தெரிவித்தார். அநுரகுமார திஸாநாயக்க யாழ்ப்பாணத்தில் ஆற்றிய உரை குறித்து, நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரனின் சாதகமான கருத்து தொடர்பாக வினவியபோது, அது தனது நிலைப்பாடாகும் எனவும், அதிகாரத்தை பயன்படுத்தி, அடக்குமுறைகளை பயன்படுத்தி தமிழ் மக்களிடம் வாக்குகளை பெறமுடியாது எனவும் அவர் குறிப்பிட்டார். இந்நிலையில், வடக்கு மக்களை அச்சுறுத்தும் அநுரவின் உரைக்கு மக்கள் பாடம் புகட்டுவார்கள் எனவும், மிரட்டல் மூலம் எதையும் செய்ய முடியாதெனவும் இராஜாங்க அமைச்சர் காதர் மஸ்தான் தெரிவித்துள்ளார்.

## ஊழலுக்கு எதிராக...

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து குருநாகல் மாவட்டத்தில் அண்மையில் நடைபெற்ற பிரசாரக் கூட்டங்களில் கலந்துகொண்டு கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் இதனை தெரிவித்தார்.

இதன்போது தொடர்ந்தும் உரையாற்றிய அவர் மேலும் தெரிவித்ததாவது,

பாராளுமன்ற உறுப்பினர்கள் ரவூப் ஹக்கீம் மற்றும் சுமந்திரன் ஆகியோர் நீதிமன்றத்தை நாடியமையினால் ஒன்லைன் விசா மோசடி முயற்சிகள் தடுத்து நிறுத்தப்பட்டுள்ளன. புற்றுநோய் மருந்துகளில் மோசடி இடம்பெற்ற குற்றச்சாட்டு தொடர்பாக முன்னாள் அமைச்சர் கெஹலிய ரம்புக்வெல்ல சிறையில் தடுத்து வைக்கப்பட்டுள்ளார். இம்மோசடி தொடர்பாக போராட்டம் நடத்தப்பட்டிருந்தது.

எனவே, நிறைவேற்று அதிகாரம் கொண்ட ஜனாதிபதியால்தான் ஊழல் மற்றும் மோசடிகளைத் தடுத்து நிறுத்த முடியும் என தேசிய மக்கள் சக்தி கருதக்கூடாது.

நாட்டில் ஊழலை ஒழிப்பதாகக் கூறும் அநுரகுமார திசாநாயக்க ஊழல்வாதிகளுக்கு எதிராக நீதிமன்றம் செல்லாதது ஏன்?. தவறைத் தண்டிப்பதற்கு அதிகாரம் தான் தேவை என்பதில்லை. கவர்ச்சியான பிரசாரங்களால் இளைஞர்களைத் திசைதிருப்புவதற்கு கையாளும் தந்திரங்களாகவே ஜே.வி.பியின் பிரசாரங்கள் காணப்படுகின்றன.

ஒரு தடவையாவது அதிகாரத்தை ஒப்படைக்குமாறு கோரும் இவர்களுக்கு அதிகாரம் பெறுவதற்கான எவ்வித அருகதையும் இல்லை. அனுபவமற்ற எம்.பிக்கள் ஆட்சியதிகாரத்துக்கு அவசரப்படுவதேன்? கோட்டாபயவின் காலத்தில் நிகழ்ந்தவற்றை நினைவில் வைத்துக்கொள்ளுங்கள்.

பொருளாதார நிபுணர்கள் எங்களது அணியிலேயே உள்ளனர். முன்னாள் ஜனாதிபதி ரணசிங்க பிரேமதாசவின் புதல்வரான சஜித், ஏழைகளின் துயரங்களைத் தெரிந்தவர். சிறுபான்மைச் சமூகங்களின் பாதுகாப்பை சஜித் பிரேமதாசவின் ஆட்சியே உறுதி செய்யும்" என அவர் தெரிவித்தார்.

## வரிசைகள் இல்லாத...

சிநேகபூர்வமாக உரையாடியபோதே ஜனாதிபதி இதனைக் குறிப்பிட்டார்.

எதிர்பாராதவிதமாக அந்த இடத்திற்குச் சென்ற ஜனாதிபதியை இளைஞர்கள் அன்புடன் வரவேற்றிருந்தனர். இளைஞர்கள் மத்தியில் அமர்ந்து அவர்களுடன் சிநேகபூர்வமாக உரையாடிய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, அவர்களின் கேள்விகளுக்கு சாதகமான பதில்களையும் வழங்கினார்.

இதன்போது, அரசாங்கத்திடமிருந்து என்ன எதிர்பார்க்கிறீர்கள் என ஜனாதிபதி அங்கிருந்த இளைஞர் ஒருவரிடம் கேட்டபோது, அதற்கு அந்த இளைஞன் மகிழ்ச்சியாக இருக்க வேண்டும் என கூறினார்.

இதற்கு, நாட்டின் இளைஞர்கள் மகிழ்ச்சியாக வாழ நல்லதொரு அரசாங்கம் அவசியம் எனவும் நாட்டின் இளைஞர்களுக்கு நல்லதொரு பொருளாதாரத்தை கட்டியெழுப்பும் பொறுப்பை தாம் எடுத்துக் கொள்வதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார்.

இதனிடையே, மீண்டும் வரிசையில் நிற்க முடியாது என இளைஞரொருவர் கூறியபோது, அதற்கு பதலளித்த பதிலளித்த ஜனாதிபதி, தனது ஆட்சியில் இந்த நாட்டின் இளைஞர்கள் சினிமா வரிசையில் மாத்திரமே நிற்க வேண்டி ஏற்படும் என தெரிவித்தார். .

இதன்போது, Netflix தேவை என இளைஞன் ஒருவர் கேட்டதற்கு ஜனாதிபதி இவ்வாறு பதிலளித்தார்.

" நெட்ஃபிலிக்ஸ் பெற்றுத் தருவேன். ஆனால் netflix இல் இலங்கை திரைப்படத்தை ஏன் யாராலும் போட முடியாதா? யாருக்கும் முடியாதா? squid game போன்ற ஒன்றைப் போட முடியாதா? அல்லது House of Cards அல்லது இன்னுமொன்று இருக்கின்றது. designated survivor. கடைசியாக முன்வந்தது யார்? எதிர்கட்சிகளைப் பார்க்கும்போது, நான் பார்ப்பது Chariots of Fire போடத்தான்" என தெரிவித்தார்.

இதேவேளை, இளைஞர் ஒருவரின் வேண்டுகோளுக்கிணங்க, தனது கடந்த கால அனுபவத்தை நினைவு கூர்ந்த ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க, "கல்வி அமைச்சராக தான் வெள்ளை அறிக்கையை சமர்ப்பித்தபோது, ஜனாதிபதி ஜே.ஆர். ஜயவர்தன, என்னை அழைத்து வெள்ளை அறிக்கை நல்லது தான், ஆனால் மறுசீரமைப்புகளை முன்னெடுப்பதாகக்கூறி அரசாங்கத்திற்கு ஆபத்தை ஏற்படுத்த வேண்டாம் என எச்சரித்திருந்தார். மேலும், அந்த மறுசீரமைப்புகளை செய்து தொழிலை இழக்க வேண்டாம் என்றும் ஜே.ஆர் ஜயவர்தன ஜனாதிபதி தமக்கு அறிவுறுத்தல்களை வழங்கினார். அந்த அறிவுறுத்தல்களுக்கமைய தான் இதுவரை செயற்பட்டேன். ஆனால், இம்முறை நாட்டின் பொறுப்பை ஏற்றுக்கொண்டதன் பின்னர் ,அவற்றுக்கு முரணாக நடக்கவேண்டியேற்பட்டது" என தெரிவித்தார்.

அத்துடன், இரண்டு வருடங்களுக்கு முன்னர் தாம் நாட்டைப் பொறுப்பேற்ற போது பொருளாதாரம் முற்றாக வீழ்ச்சியடைந்திருந்ததை நினைவுகூர்ந்த ஜனாதிபதி, கடன் சுமையுடன் தொடர்ந்தும் சென்றால் நாட்டின் பொருளாதாரம் வீழ்ச்சியடையும் என சர்வதேச நாணய நிதியம் தெரிவித்ததாகவும் சுட்டிக்காட்டினார்.

அதன் பிரகாரம், உள்நாட்டு வங்கிகள் ஊடாக கடன்பெற வேண்டாம் என்றும் பணத்தை அச்சிட வேண்டாம் எனவும் சர்வதேச நாணய நிதியம் அறிவுறுத்தியதாகவும், அந்த நிலையை கருத்திற்கொண்டே அரச வருமானத்தை ஈட்டுவதற்கு VAT வரியை அதிகரிக்க வேண்டியேற்பட்டதாகவும் ஜனாதிபதி மேலும் தெரிவித்தார்.

அந்த செயற்பாடுகள் முன்னெடுக்கப்படாவிட்டால் நாட்டை தற்போதைய நிலைக்கு கொண்டுவர முடியாது எனவும் ஜனாதிபதி ரணில் விக்ரமசிங்க இதன்போது சுட்டிக்காட்டினார். இதன்போது, இந்த இடத்திற்கு எதிர்பாராத விதமாக வருகை தந்தமைக்காக ஜனாதிபதிக்கு நன்றி தெரிவித்த இளைஞர்கள், தமது தேவைகள், எதிர்பார்ப்புகள் குறித்து ஜனாதிபதியுடன் நேரடியாகக் கலந்துரையாட முடிந்தமை தொடர்பாகவும் தமது மகிழ்ச்சியை வெளிப்படுத்தியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## ரிஷாத் பதியுதீனின்...

முன்னாள் உறுப்பினர்களான ஏ.ஆர். எம்.ரஸ்மின், ஹனீப் மக்பூல், எம்.எச்.எம். காமில், அஷ்ஷெய்க் அப்துர் ரஹ்மான் மற்றும் முசலி உலமா சபை முன்னாள் தலைவர் எம்.தௌபீக் உள்ளிட்ட கட்சி செயற்பாட்டாளர்கள் பலர் கொழும்பு பிளவர் வீதியில் அமைந்துள்ள ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் அரசியல் அலுவலகத்தில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைச் சந்தித்து தமது ஆதரவை வெளியிட்டனர்.

வடக்கிலுள்ள முக்கிய பிரதேச சபைகளில் ஒன்றான முசலி பிரதேச சபையின் ஒரே ஒரு அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் உறுப்பினரை தவிர, அனைத்து உறுப்பினர்களும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு வழங்கும் நிலைப்பாட்டையே கொண்டிருந்தாதாகவும், கட்சித் தலைவர் ரிஷாத் பதியுதீனும் அந்த நிலைப்பாட்டிலேயே இருந்ததாகவும் கட்சியின் முக்கியஸ்தர்கள் சுட்டிக்காட்டினர்.

எனினும், கட்சியிலுள்ள சிலரது அழுத்தம் காரணமாக அவர் வேறு வேட்பாளரை ஆதரிக்க முடிவு செய்ததாக அவர்கள் தெரிவித்தனர். ஏனைய வேட்பாளர்களுடன் ஒப்பிடுகையில், தற்போதைய நிலையில் நாட்டை ஏற்று முன்னேற்றக்கூடிய ஒரேயொரு தலைமை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கே உள்ளதாகவும் கட்சி அரசியலுக்கு அப்பால் அவரை ஆதரிப்பதே உகந்ததெனவும் அவர்கள் தெரிவித்தனர். எனவே, கட்சித் தலைமையும் தனது முடிவை மாற்றி, ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு தனது ஆதரவை வழங்க வேண்டும் என அவர்கள் வேண்டுகோள் விடுத்தனர். இதன்போது, புத்தளம் மன்னார் வீதியை திறப்பது மற்றும் வடக்கு முஸ்லிங்களின் பல பிரச்சினைகளை தாம் ஜனாதிபதியிடம் முன்வைத்ததாகவும் அவற்றுக்கு ஜனாதிபதி சாதகமான பதிலை வழங்கியதாகவும் இலங்கை மக்கள் காங்கிரஸின் மக்கள் பிரதிநிதிகள் தெரிவித்தனர்.

இதேவேளை, பொதுஜன பெரமுன ஆதரவு வழங்கிய சுயேட்சைக் குழு நகர சபை முன்னாள் மேயர் மஸாஹிம் மொஹமட் மற்றும் பொதுஜன பெரமுனவை பிரதிநிதித்துவப்படுத்திய வத்தளை மாபோல நகர சபை முன்னாள் மேயர் ஏ.எச்.எம். நௌசாத் உள்ளிட்ட ஐக்கிய மக்கள் சக்தி அமைப்பாளர்கள் மற்றும் செயற்பாட்டாளர்கள் ஜனாதிபதிக்கு ஆதரவு வழங்க முன்வந்துள்ளதுடன் ஜனாதிபதியின் வெற்றிக்காக அர்ப்பணிப்பதாகவும் தெரிவித்துள்ளனர். அகில இலங்கை மக்கள் காங்கிரஸ் பாராளுமன்ற உறுப்பினர் எஸ்.எம்.எம். முஷர்ரப், ஐக்கிய மக்கள் சக்தி பாராளுமன்ற உறுப்பினர் வைத்தியர் ராஜித சேனாரத்ன மற்றும் களுத்துறை நகர சபை முன்னாள் மேயர் ஆமிர் நாஸிர் ஆகியோரும் இந்த சந்திப்பின்போது கலந்துகொண்டமை குறிப்பிடத்தக்கது.

## வாழ்வாதாரம் பாதிக்கப்பட்ட... (03ஆம் பக்கத் தொடர்ச்சி)

ஹம்பாந்தோட்டை மற்றும் கொழும்பு துறைமுகங்களும் அபிவிருத்தி செய்யப்படும் சீனாவின் சோங்கிங்கிற்கு பயணிப்பதற்காக மியன்மாரில் நிர்மாணிக்கப்படும் புதிய துறைமுகத்துடன் வங்காள விரிகுடா பிராந்தியத்தை இணைக்கும் முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன. இதன்மூலம் இந்து சமுத்திரத்தின் மேற்கு மற்றும் கிழக்கு ஆகிய இரண்டு பிராந்தியங்களையும் கப்பல் போக்குவரத்துக்காக அபிவிருத்தி செய்ய முடியும். இதேவேளை, போதைப்பொருள் அச்சுறுத்தலைக் கட்டுப்படுத்த போதைப் பொருள் தடுப்புக் கட்டளை மையத்தை நிறுவ எதிர்பார்த்துள்ளோம். போதைப்பொருளால் பாதிக்கப்பட்டு தண்டனை பெற்றுள்ளவர்களின் மறுவாழ்வு உள்ளிட்ட அனைத்து நடவடிக்கைகளையும் இந்த நிறுவனத்தினூடாக மேற்கொள்ள எதிர்பார்க்கின்றோம்.

மேலும், போதைப்பொருள் கடத்தல்காரர்களுக்கு எதிராக தற்போதுள்ள சட்டங்களை விட கடுமையான சட்டங்களை அமுல்படுத்துவோம் என அவர் தெரிவித்தார்.

## மூளையை பாதிக்கும்...

இந்த வைரஸ் சில சந்தர்ப்பங்களில் நரம்பியல் நோயை ஏற்படுத்துவதாக அந்நாட்டு ஊடக அறிக்கைகள் சுட்டிக்காட்டுகின்றன.

வெட்லேண்ட் என்பது புதிதாக கண்டுபிடிக்கப்பட்ட வைரஸ் என்றாலும், மனிதர்கள் மற்றும் விலங்குகளை பாதிக்கும் திறன் கொண்டதும் ஆரோக்கியத்துக்கு ஆபத்தை ஏற்படுத்தக்கூடியதுமாகும்.

வைரஸின் பரவல் மற்றும் சாத்தியமான தாக்கம் தொடர்பாக மேலும் அறிந்துகொள்வதற்கு ஆராய்ச்சி இடம்பெற்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. இந்த வைரஸ் முதன்முதலில் 2019 ஆண்டு ஜூன் மாதம் ஜின்ஜோ நகரில் 61 வயதான நோயாளியிடம் அடையாளம் காணப்பட்டுள்ளது.

தி நியூ இங்கிலாந்து ஜெர்னல் ஆஃப் மெடிசினில் வெளியிட்ட அறிக்கையின்படி, ஒட்டுண்ணி கடித்த ஐந்து நாட்களுக்குப் பின்னர் குறித்த நபர் நோய்வாய்ப்பட்டதாகவும், அந்நபர் காய்ச்சல், தலைவலி மற்றும் வாந்தியினால் பாதிக்கப்பட்டதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

## நாகப்பட்டினம் இலங்கைக்கிடையிலான...

பயணிகள் கப்பல் சேவை, மீண்டும் சனிக்கிழமைகளிலும் இடம்பெறவுள்ளது.

நாகப்பட்டினம்இலங்கைக்கிடையிலான கப்பல் சேவையானது செப்டெம்பர் மாதம் 15 ஆம் திகதி வரை, செவ்வாய், வியாழன் மற்றும் ஞாயிற்றுக்கிழமை என வாரத்தில் மூன்று நாட்கள் மாத்திரம் இயங்கும் என முன்னதாக அறிவிக்கப்பட்டிருந்தது.

இந்நிலையில், எதிர்வரும் 21 ஆம் திகதி முதல், சனிக்கிழமைகளிலும் பயணிகளுக்கான இந்த கப்பல் சேவை இயங்கவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. அதன்படி, பயணங்களை மேற்கொள்வோர் படகு சேவை நிறுவனத்தின் www.sailindsri.com, என்ற இணையதளம் அல்லது 'Sail IndSri' app on Google Play Store மூலம் பயணச்சீட்டுக்களை முன்பதிவு செய்துகொள்ள முடியும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

## இலத்திரனியல் கடவுச்சீட்டு...

இலத்திரனியல் கடவுச்சீட்டு (EPassport) விலைமனு கோரல் காரணமாக, கடவுச்சீட்டு வழங்குவதில் குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்திற்குள் நெருக்கடி நிலைமை ஏற்பட்டுள்ளதாகவும் இதனால் தற்போது திணைக்களத்துக்கு முன்பாகவும் நீண்ட வரிசை காணப்படுவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. இந்நிலையில், இணையவழியூடாக கடவுச்சீட்டுக்காக முன்பதிவு செய்யும் பணியும் தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகின்றது.

எவ்வாறாயினும், புதிய வெளிநாட்டு கடவுச்சீட்டுகளின் தொகையொன்று ஒக்டோபர் 25 ஆம் திகதி கிடைக்கும் எனவும் இதனூடாக சுமார் 50,000 வெற்று கடவுச்சீட்டுகள் பெறப்படவுள்ளதாகவும் திணைக்கள வட்டாரங்கள் தெரிவித்துள்ளன. இரண்டு வாரங்களுக்குப் பின்னர் மேலும் 100,000 வெற்று கடவுச்சீட்டுகள் கிடைக்கவுள்ளதாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், புதிய வெற்று கடவுச்சீட்டுகள் கருப்பு முகப்பைக் கொண்டுள்ளதோடு அவை போலந்தில் தயாரிக்கப்படுவதாக குடிவரவு மற்றும் குடியகல்வு திணைக்களத்தின் கட்டுப்பாட்டாளர் நாயகம் ஹர்ஷ இலுக்பிட்டிய தெரிவித்துள்ளார். அதன்படி, இந்த வெளிநாட்டு கடவுச்சீட்டுகளின் உற்பத்தி செயல்முறையை ஆராய்வதற்காக குடிவரவு திணைக்களத்தின் பிரதிநிதிகள் குழுவொன்று போலந்தில் அமைந்துள்ள சம்பந்தப்பட்ட தொழிற்சாலைக்கு சென்றுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

## சஜித் ஆதரவு கூட்டத்தில்...

பொதுமக்கள் என 9 பேர் இவ்வாறு காயமடைந்துள்ளனர். சம்பவத்தில், தீக்காயங்களுக்குள்ளான 9 பேரும் சிகிச்சைக்காக கண்டி தேசிய வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கூட்டம் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த அரங்குக்கு ஜனாதிபதி கொண்டிருந்த சஜித் பிரேமதாச வருகைத் தந்துக் கொண்டிருந்தபோது, அவரின் ஆதரவாளர்கள் பொலிஸாரின் உத்தரவையும் மீறி நகரத்தின் மத்திய பகுதியில் பல இடங்களில் பட்டாசுக்களை வெடிக்க வைத்ததாக தெரிவிக்கப்படுகின்றது.

சகாயமடைந்தவர்கள் எவரும் ஆபத்தான நிலையில் இல்லை எனவும் அவர்கள் அவசர சிகிச்சைப் பிரிவில் சிகிச்சைப் அனுமதிக்கப்பட்டு சிகிச்சைப் பெற்று வருவதாகவும் கண்டி தேசிய வைத்தியசாலையின் பணிப்பாளர் டொக்டர் இரேஷா பெர்னாண்டோ தெரிவித்துள்ளார்.

# வடக்கு, கிழக்கு வாக்குகளை சிதறடிப்பதற்கு தந்திரங்கள்!



வடக்கு கிழக்கு மாகாண வாக்குகளை சிதறடிக்க பல யுக்திகள் நடைபெற்று வருவதாக யாழ். மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் அங்கஜன் இராமநாதன் தெரிவித்துள்ளார்.

நெல்லியடிப் பகுதியில் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவுக்கு ஆதரவு தெரிவித்து நடைபெற்ற தேர்தல் பிரசார கூட்டத்திலேயே அவர் இதனை தெரிவித்தார்.

இதுதொடர்பாக மேலும் அவர் கருத்துத் தெரிவிக்கையில்,

எம் கண்முன்னே உள்ள ஒரே தெரிவாக ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க காணப்படுகிறார். பொருளாதாரத்தை மீட்டெடுத்து எமக்கெல்லாம் நிம்மதி தந்த தலைவர் ரணில்.


வடக்கு கிழக்கு மாகாண வாக்குகளை சிதறடிக்க பல யுக்திகள் நடைபெறுகின்றன. குறிப்பாக இலங்கை தமிழரசுக்கட்சி பல வேடிக்கைகளை செய்து வருகிறது.

தமிழரசுக்கட்சி உறுப்பினர் சுமந்திரன் தமிழ் பொது வேட்பாளருடைய தேர்தல் விஞ்ஞாபனம் வெளிவர முன்னரே எதிர்கட்சித்தலைவருக்கு ஆதரவு கொடுத்துள்ளார்.

நான் கடந்த தடவை ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க யாழ்ப்பாணம் வந்திருந்த போது அவரை எனது அலுவலகத்திற்கு அழைத்து தமிழ் மக்களுடைய கோரிக்கைகளை தெரிவித்திருந்தேன். அதனை ஜனாதிபதி ஏற்றுக்கொண்டதால் தான் நான் அவருக்கு ஆதரவைக் கொடுத்தேன்.

இன்று எதிர்கட்சியில் ரிசாட் பதியுதீன் மற்றும் ஹக்கீம் ஆகியோர் நிபந்தனை அடிப்படையில் தான் எதிர்கட்சித்தலைவருக்கு ஆதரவளிக்கின்றனர். ஆனால் வடக்கில் மாத்திரம் தமிழரசுக் கட்சி எந்தவொரு நிபந்தனையும் இன்றி ஆதரவு வழங்குகின்றது. இது தமிழ் மக்களுக்குச் செய்கின்ற துரோகம். வடக்கு மக்களை புதைகுழிக்குள் தள்ளும் செயற்பாடு என அவர் மேலும் தெரிவித்தார்.

# "சிவப்பிரகாசம் கைலைநாதன் பெயருக்கு ஏற்ற மாதிரி சிவசம்பந்தமானவர்"



சிவத்திரு சிவப்பிரகாசம் கைலைநாதன் பெயருக்கு ஏற்ற மாதிரி சிவசம்பந்தமானவர். மூளாய் இந்து இளைஞர் மன்றத்தின் முன்னாள் தலைவரும் யாழ். மாநகரசபையின் முன்னாள் உறுப்பினரும் ஸ்ரீ சபரி யாத்திரைக் குழுவின் குருஸ்வாமியுமாகிய தங்க. முகுந்தன் இவ்வாறு தெரிவித்துள்ளார். அவர் இவரின் மறைவு தொடர்பாக விடுத்துள்ள அனுதாபச் செய்தியில் இவ்வாறு தெரிவித்துள்ளார். அதில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது,

சிவத்திரு சிவப்பிரகாசம் கைலைநாதனால் இரண்டு ஆலயங்கள் பரிபாலனம் செய்யப்பட்டு வந்தன. இந்த இரண்டு ஆலயங்களும் சிவத்தோடு சம்பந்தப்பட்டவர்களுடையது ஆகும். அதில் ஒன்று ஆதிசக்தி ஆலயம். மற்றையது நாராயணன் ஆலயம் ஆகும்.

அர்த்தநாரி சங்கரநாராயணர் என்ற இரு வடிவங்கள். இந்தியாவில் முக்கியமான கேரளத்தில் அம்பாள் ஆலயங்களில் பொதுவாக அம்பே நாராயணா! அல்லது தேவி நாராயணா! என்றே பக்தர்கள் தேவியை சத்தமாக கூவி அழைத்து வழிபாடு செய்வார்கள்! இந்த அறங்காவலர் ஐயா வழக்கம்பரை பதியுறை ஸ்ரீ முத்துமாரித் தாயாரின் ஆலயத்திற்கும், பொன்னாலையில் அரசாட்சி புரியும் பாரளந்த மாயவனுடைய கோவிலுக்கும் தலைவராக பணிசெய்தவர்!

இரண்டு ஆலயங்களிலும் முதல் வழிபாடு தந்தி முகத்தோனுக்கே! அவரது ஜன்ம நாளில் எங்கள் ஐயா பரமபதமடைந்தமை அவர் செய்த புண்ணியமே! அதேபோல நாராயணருக்குரிய நன்னாளில் அவரது தேகமும் அக்கினியோடு சங்கமித்தமை கூட தெய்வ சங்கற்பமே.

# கூரிய வாள்களுடன் ஆறு இளைஞர்கள் கைது

(சாவகச்சேரி விசேட நிருபர்)

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட மிருசுவில் பகுதியில் இரண்டு கூரிய வாள்களுடன் ஆறு இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

கடந்த 9ஆம் திகதி இரவு மிருசுவில் பகுதியில் இளைஞர் குழுவொன்று வாள்களுடன் நடமாடுவதாக இராணுவ புலனாய்வுப் பிரிவுக்கு கிடைக்கப்பெற்ற இரகசியத் தகவலின் அடிப்படையில் இவர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

இதுதொடர்பாக கொடிகாமப் பொலிஸாருக்கு தகவல் வழங்கப்பட்டு சந்தேகநபர்கள் கைதுசெய்யப்பட்டுள்ளனர்.

மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர்.



# பச்சிலைப்பள்ளியில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்ட பகுதிகள் விரைவில் கையளிப்பு

(பரந்தன் குறூப் நிருபர்)

கிளிநொச்சி பச்சிலைப்பள்ளியில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ள 1,142,563 சதுர மீற்றர் பகுதிகள் விரைவில் கையளிக்கப்படவுள்ளன.

பச்சிலைப்பள்ளி பிரதேசசெயலகப் பிரிவுக்குட்பட்ட இத்தாவில் மற்றும் முகமாலை கிராம அலுவலர் பிரிவுகளிலுள்ள 1,142,563 சதுரமீற்றர் பகுதியிலுள்ள கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ளதையடுத்து விரைவில் ஹலோ ட்ரஸ் நிறுவனத்தால் கையளிக்கப்படவுள்ளன. இந்நிலையில் கண்ணிவெடிகள் அகற்றப்பட்டுள்ள பகுதிகளை கடந்த புதன்கிழமை பச்சிலைப்பள்ளி பிரதேச செயலக பிரதி திட்டமிடல் பணிப்பாளர், ஹலோ ட்ரஸ் நிறுவன உத்தியோகத்தர்கள், இத்தாவில், முகமாலை கிராம அலுவலர்கள், முகமாலை பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர், மீள்குடியேற்ற உத்தியோகத்தர், அரசசார்பற்ற நிறுவன அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆகியோர் பார்வையிட்டனர்.

# மன்னாரில் கடற்றொழிலாளர் திடீர் மரணம்

(யாழ். விசேட நிருபர்)

மன்னார் கடற்பரப்பில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்த யாழ்ப்பாணத்தை சேர்ந்த கடற்றொழிலாளர் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த கிறிஸ்தோபர் ஜேசுதாஸன் (வயது 62) என்பவரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

யாழ்ப்பாணம் உதயபுரம் பகுதியிலிருந்து கடந்த சனிக்கிழமை இரவு கடற்றொழிலுக்காக மூன்று தொழிலாளிகள் படகில் சென்று மன்னார் கடற்பகுதியை அண்டிய பகுதியில் மீன்பிடியில் ஈடுபட்டிருந்தனர்.

இதன்போது, ஒருவர் தனக்கு நெஞ்சு வலிப்பதாக கூறி படகினுள் சுகவீனமுற்று இருந்துள்ளார்.

இதனையடுத்து படகினை கரைக்கு கொண்டுவந்து, யாழ். போதனா வைத்தியசலைக்கு கொண்டு சென்ற போதும் அவர் ஏற்கனவே உயிரிழந்து விட்டதாக வைத்தியர்கள் அறிக்கையிட்டனர்.

சம்பவம் தொடர்பில் அவருடன் தொழிலுக்கு சென்ற இரு கடற்றொழிலாளிகளிடமும் வாக்குமூலங்களை பெற்று மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துள்ளனர்.

# மாணவர்கள் கௌரவிப்பு

(புதுக்குடியிருப்பு விசேட நிருபர்)



வவுனியா சன்னாசி பரந்தன் கிராமத்திலிருந்து பல்கலைக்கழகத்துக்கு தெரிவான மாணவர்கள் கௌரவிக்கப்பட்டுள்ளனர். வவுனியா மாவட்டத்தில் புளியங்குளம் பிரதேசத்திலுள்ள சன்னாசி பரந்தன் கிராமத்தில் ஆதி விநாயகர் ஆலய திருவிழா அண்மையில் நடைபெற்றது.

இரவு கலை நிகழ்ச்சிகளுடன் நடைபெற்ற இந்நிகழ்வில் சன்னாசி பரந்தன் கிராமத்திலிருந்து பல்கலைக்கழகம், கல்வியற்கல்லூரிக்கு தெரிவான மாணவர்கள் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்தவர்கள், விளையாட்டில் மாகாண மட்டத்தில் சாதனை படைத்த மாணவர்கள் கௌரவிக்க்கப்பட்டதுடன் கலைஞர்களும் கௌரவிக்கப்பட்டனர்.

ரி.கே.வேணி தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் பிரதம விருந்தினராக வைத்தியகலாநிதி வவுனியா பல்கலைக்கழக மருத்துவர் ப.சத்தியலிங்கம் கலந்துகொண்டார். இதன்போது சன்னாசி பரந்தன் கிராமத்தைச் சேர்ந்த 33 மாணவர்கள் பல்கலை மற்றும் கல்வியியல் கல்லூரிக்கு தெரிவு செய்யப்யப்பட்டவர்கள் கிராமத்திலிருந்து புலமைபரிசில் பரீட்சையில் சித்தியடைந்த 08 மாணவர்களும் இதன்போது கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலை மாணவர்களின் கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றதுடன் வவுனியா கோவில் புளியங்குளம் முத்தமிழ்கலாமன்ற கலைஞர்களின் மாலைக்கு வாதாடிய மைந்தன் காத்தவராயன் புராண சரித்திர நாடகமும் அரங்கேற்றப்பட்டது.

# வீதி விபத்தில் இளைஞன் படுகாயம்

(யாழ். நிருபர்)

யாழ்ப்பாணம் அராலி பாலத்திற்கு அருகில் நேற்றுமுன்தினம் இரவு இடம்பெற்ற விபத்தில் இளைஞன் ஒருவர் படுகாயமடைந்துள்ளார். அராலி கிழக்கை சேர்ந்த லோ.கஜேந்திரன் (வயது 29) என்பவரே இவ்வாறு படுகாயமடைந்துள்ளார்.

ஓட்டுமடம் பகுதியிலிருந்து வட்டுக்கோட்டை நோக்கி பயணித்த வாகனம், அராலி பாலத்திற்கு அருகில் வீதியை கடக்க முயன்ற இளைஞனை மோதி விபத்துக்குள்ளானது.

விபத்தில் தலையில் படுகாயமடைந்த இளைஞனை மீட்டு , சிகிச்சைக்காக யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதித்துள்ளனர்.

சம்பவம் தொடர்பில் வட்டுக்கோட்டை பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர்.


ජාතික ලොතරැයි මණ්ඩලය
தேசிய லொத்தர் சபை
National Lotteries Board
ஞாயிறு 2024.09.08
உத்தியோகபூர்வ முடிவுகள்
www.nlb.lk
NLB

மஹஜன சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 5590
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.25,779,288.00
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 5 5 1 0 0 0

அத சம்பத
சீட்டிழுப்பு இலக்கம் 165
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 1 0 0 0

கொவிசெத
சீட்டிழுப்பு இலக்கம் 3832
சீட்டிழுப்பு திகதி 2024.09.08
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ.61,712,698.40
ஆங்கில எழுத்து C
வெற்றி இலக்கங்கள் 06 28 48 56
விசேட எழுத்து C
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 91854

Mega Power
சீட்டிழுப்பு இலக்கம் 1938
2024.09.08
30071
அடுத்த மெகா சுப்பர் பரிசு ரூ.445,495,434.00
ஆங்கில எழுத்து T
சுப்பர் இலக்கம் 26
வெற்றி இலக்கங்கள் 13 25 32 35
அடுத்த டபள் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00
அடுத்த கிராண்ட் சுப்பர் பரிசு ரூ. 10,000,000.00

VIP
திகதி 2024.09.08
சீட்டிழுப்பு இலக்கம் 416
ஆங்கில எழுத்து H
L7 எழுத்து H
வெற்றி இலக்கங்கள் 6 4 0 3 5 7
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.35,393,720.48

ராசி சுப பலன்
திகதி 2024.09.08
சீட்டிழுப்பு இலக்கம் 899
அடுத்த சீட்டிழுப்புக்கான சுப்பர் பரிசு ரூ.4,284,991.60
வெற்றி இலக்கினம் கடகம்
வெற்றி இலக்கங்கள் 09 33 41 54
தனயோக இலக்கம் 25214
நாளுக்கான விதி எண் 27

தன நிதானய
சீட்டிழுப்பு இலக்கம் 1620
2024.09.08
அடுத்த சீட்டிழுப்பின் சுப்பர் பரிசு ரூ. 111,110,025.04
ஆங்கில எழுத்து R
வெற்றி இலக்கங்கள் 06 08 20 43
விசேட எழுத்து R
இலட்சாதிபதி டபள் சான்ஸ் வெற்றி இலக்கம் 63013



## இலங்கை சுற்றுலா விருது 2024




சுற்றுலா தொழில்துறையில் சேவை வழங்குநர்கள் மற்றும் பங்குதாரர்களின் சிறப்பை பாராட்டும் வகையில் இலங்கை சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையினால் பத்தாவது முறையாக ஏற்பாடு செய்யப்பட்டிருக்கும் இலங்கை சுற்றுலா விருது வழங்கல் இந்த ஆண்டில் நடத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. இதன் பிரதான நோக்கங்களாக சுற்றுலா துறை சேவைகளின் தரத்தை மேம்படுத்தல், சிறந்த பயன்பாட்டை ஊக்குவித்தல் மற்றும் சுற்றுலா துறையில் புத்தாக்கத்தை ஊக்குவித்தல் ஆகியவையாகும்.

**உங்களது விண்ணப்பங்களை சமர்ப்பித்து சுற்றுலா துறையில் சிறந்தவர்கள் இடையே இணையுங்கள்!**

**விருது பிரிவுகள்**

1. **சாதாரண விருதுகள்**
   i. சுற்றுலா துறையின் முன்னோடிகளுக்கான விருது
   ii. சுற்றுலா தொழில்முயற்சி
2. **விசேட ஜூரி விருது**
   சுற்றுலா துறையில் இளைஞர்கள் பங்களிப்பு
   i. மாணவர்கள் (19 வயதுக்கு குறைந்தது)
   ii. இளைஞர் (20 தொடக்கம் 30 வயது)
   சர்வதேச விருது வென்றோர்
3. **சுற்றுலா தங்குமிடம்**
   சுற்றுலா ஹோட்டல் (வகைப்படுத்தப்பட்டது)
   i. ஐந்து நட்சத்திரம் (நகர்புறம்)
   ii. ஐந்து நட்சத்திரம் (Resort)
   iii. நான்கு நட்சத்திரம் (நகர்புறம்)
   iv. நான்கு நட்சத்திரம் (Resort)
   v. மூன்று நட்சத்திரம் (நகர்புறம்)
   vi. மூன்று நட்சத்திரம் (Resort)
   vii. இரண்டு நட்சத்திரம்
   viii. ஒரு நட்சத்திரம்
   ix. வேறு சுற்றுலா ஹோட்டல்கள்
   x. விருந்தோம்பல் இல்லங்கள் (A தரம்)
   xi. பாரம்பரிய ஹோட்டல், பங்களா, இல்லம்
   xii. ஆயுர்வேத ஹோட்டல்
   விசேட தங்குமிடம்
   i. புட்டிக் ஹோட்டல் (Boutique Hotel)
   ii. புட்டிக் வில்லா (Boutique Villas)
   மேலதிக சுற்றுலா தங்குமிடம்
   i. சுற்றுலா விருந்தோம்பல் இல்லம்
   ii. சுற்றுலா பங்களா
   இயற்கை, சுற்றுச்சூழல் மற்றும் வனவிலங்குகள்
   i. பாரிய தங்குமிட அலகு
   ii. சிறிய தங்குமிட அலகு
   (சுற்றுச்சூழல் தங்குமிடங்கள், நிலையான முகாம்கள், தள முகாம்கள், கூடாரங்கள்)
4. **பிரத்தியேக சுற்றுலா சேவைகள்**
   i. Spa & Wellness Center
   ii. சுற்றுலா நீர் விளையாட்டு நிலையங்கள்/ சேவை வழங்குநர்கள்
   iii. சாகச (Adventure) சுற்றுலா மேம்பாடு மற்றும்/ அல்லது வழங்குநர்கள்
   iv. சமூக அடிப்படையிலான சுற்றுலா திட்டங்கள்
5. **சுற்றுலா சேவைகளில் பேண்தகு பயன்பாடுகள்**
   i. சுற்றுலா ஹோட்டல்களில் சிறந்த பேண்தகு பயன்பாடுகள்
   ii. மேலதிக சுற்றுலா சேவைகளின் சிறந்த பேண்தகு பயன்பாடுகள்
   iii. பிரத்தியேக சுற்றுலா சேவைகளின் சிறந்த பேண்தகு பயன்பாடுகள்
   iv. சிறிய மற்றும் நடுத்தர அளவான பிரிவுகளின் சிறந்த பேண்தகு பயன்பாடுகள் (தங்குமிடம் - அறைகள் 10க்கு குறைவு) (ஊழியர்கள் 10க்குக் குறைவு)
6. **சுற்றுலா உணவகங்கள்**
   i. தொனிப் பொருளை அடிப்படையாகக் கொண்ட சுற்றுலா உணவகங்கள்
   ii. உள்நாட்டை அடிப்படையாகக் கொண்ட இலங்கை உணவகங்கள்
7. **சுற்றுலா மற்றும் சுற்றுலா செயற்பாட்டாளர்**
   சுற்றுலா முகவர் - (Inbound)
   i. பெரிய பிரிவு
   ii. நடுத்தர பிரிவு
   iii. சிறிய பிரிவு
   நம்பிக்கைக்குரிய பயண உதவியாளர் (வெளிநாட்டு சுற்றுலா செயற்பாட்டாளர்)
8. **விசேட அடையாளம் காணப்பட்ட விருதுகள் (நேரடி/ மறைமுகம்)**
   விமான சேவை மூலம் சுற்றுலாத் துறைக்கு ஆற்றும் பங்களிப்பை பாராட்டும் வகையில் வழங்கப்படும் விருது
   i. வருடத்தின் பட்டய விமான சேவை செயற்பாட்டாளர்
   ii. அட்டவணை (Scheduled) விமானசேவை (அங்கீகார விருது)
   iii. தேசிய விமான சேவை
   iv. சர்வதேச விமான சேவை
   v. குறைந்த செலவு கொண்ட விமான சேவை
9. **கப்பல் செயற்பாட்டாளர் (Cruise line)/ வழங்குநர்/ வசதிகள் வழங்குநர்**
10. **MICE சுற்றுலாத் துறை**
    i. தொழில்முறை MICE ஏற்பாட்டாளர்
    ii. MICE இடம் - கூட்டம், மாநாடு, கண்காட்சி
11. **டிஜிட்டல் சுற்றுலா மற்றும் சந்தைப்படுத்தல்**
    i. ஒருங்கிணைந்த டிஜிட்டல் பரப்புரை
    ii. இலங்கையை விளம்பரப்படுத்தும் சிறந்த வெளிநாட்டு ஊடகவியலாளர் (மின்னணு மற்றும் அச்சு)
    iii. சுற்றுலாத் துறை தொடர்பான செயலி (Apps)
    iv. தொழில்முயற்சி முகாமைத்துவ கட்டமைப்பு
    v. சுற்றுலாத் துறை சார்ந்த பல்வேறு தொழில்நுட்பங்கள்
12. **சுற்றுலா கல்வி மற்றும் பயிற்சி**
    i. பெரிய பிரிவு
    ii. சிறிய பிரிவு
    பயணம் மற்றும் சுற்றுலா சார்ந்த பயிற்சி நிறுவனங்கள்
    பயணம் மற்றும் சுற்றுலா முகாமைத்துவம் தொடர்பான கற்கைகளை நடத்தும் பல்கலைக்கழகங்கள்
    AITA/PATA போன்ற சர்வதேச அளவில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களினால் அங்கீகரிக்கப்பட்ட (accredited) நிகழ்ச்சிகளை மேற்கொள்ளல்.
13. **சேவையின் சிறப்பை அங்கீகரிப்பதற்கான விருது**
    i. தேசிய சுற்றுலா வழிகாட்டி விரிவுரையாளர்
    ii. ஓட்டுநர் சுற்றுலா வழிகாட்டி விரிவுரையாளர்
    iii. சிறந்து விளங்கும் சமையல் பங்களிப்பு
    iv. சிறந்த இயற்கை வழிகாட்டி

**விண்ணப்பங்களை சமர்ப்பிப்பது 2024 செப்டெம்பர் 24 ஆம் திகதி வரை திறந்திருக்கும்.**

**விண்ணப்பப் படிவம் மற்றும் அது சார்ந்த விபரங்களை www.tourismawards.lk என்ற இணையதளத்தில் இருந்து பெறவும்.**

**மேலதிக விபரங்களுக்கு**
**tourismawards2024@srilanka.travel**

## கடவுளின் குரலைக் கேட்பவர்கள்

# நலிவடைந்தவர்கள் குரலுக்கு கனிவுடன் செவிமடுப்பார்கள்

கிறிஸ்து இம்மையில் வாழ்ந்தபோது விண்ணரசைப்பற்றிய நற்செய்தியைப் பல்வேறு உவமைகள் வாயிலாகப் போதித்தார்.

ஆயினும் அவருடைய போதனையை மக்கள் உணரவில்லை; உணர்ந்து மனம் மாறவுமில்லை. அவருடைய போதனை செவிடன் காதில் ஊதிய சங்காயிற்று. எனவேதான் அவர் இறைவாக்கினர் எசாயாவை மேற்கோள்காட்டி அம்மக்களைப் பற்றிப் பின்வருமாறு கூறினார்:

“இம்மக்களின் நெஞ்சம் கொழுத்துப் போய்விட்டது. காதும் மந்தமாகிவிட்டது. இவர்கள் தம் கண்களை மூடிக் கொண்டனர்." *(மத் 13:15)*

பாவங்களிலெல்லாம் கொடிய பாவம் கடவுளுடைய வார்த்தையைக் கேட்டாலும் இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்வதாகும்.



எனவேதான், நீங்கள் இன்று கடவுளுடைய குரலைக் கேட்டால் உங்கள் இதயத்தைக் கடினப்படுத்திக் கொள்ளாதீர்கள் என்று எச்சரிக்கிறது பரிசுத்த வேதாகமத்தின் திருப்பாடல் 95:8. வசனம்.

கடவுளுடைய வார்த்தையைக் காதால் கேட்கவும் அவருடைய புகழை நாவால் அறிக்கையிடவும் கடந்த ஞாயிறு நற்செய்தி நம்மை அழைக்கின்றது.

ஞாயிறு முதல் வாசகம் மெசியாவின் காலத்தில் பார்வையற்றோர் பார்ப்பர்; காது கேளாதவர் கேட்பர் என அறிவிக்கின்றது (எசா 35:47). இறைவாக்கினர் எசாயாவை மேற்கோள்காட்டி, தாமே வரவிருக்கும் மெசியா என்பதற்குச் சான்றளித்தார் கிறிஸ்து; அதாவது, பார்வையற்றோர் பார்வை பெறுகின்றனர்: காது கேளாதோர் கேட்கின்றனர் (லூக் 7:22).

ஞாயிறு நற்செய்தியில் கிறிஸ்து, காது கேளாதவரும் திக்கிப் பேசுபவருமான ஒருவரைக் குணப்படுத்துகிறார், அவருக்குக் குணமளிக்கும் முன், அவரைக் கூட்டத்திலிருந்து தனியே அழைக்கிறார்; தம் விரல்களை அவர் காதுகளில் இடுகிறார்; உமிழ் நீரால் அவர் நாவைத் தொடுகிறார்; வானத்தை அண்ணாந்து பார்க்கிறார்; பெருமூச்சுவிடுகிறார். அதன் பிறகு, "திறக்கப்படு' என்று கூறி அவரைக் கேட்கும்படியும் பேசும்படியும் செய்கிறார்.

கிறிஸ்துவின் இத்தகைய பல்வேறு செயல்கள் அருளடையாளத் தன்மை கொண்டவை. அருளடையாளங்கள் நம்பிக்கையின் அருள் அடையாளங்கள். அருள் அடையாளங்கள் பயனளிக்க வேண்டுமென்றால் அதற்கு பலமான நம்பிக்கை தேவைப்படுகிறது.

எனவேதான் இயேசு கிறிஸ்து பல்வேறு செயல்களின் மூலம் படிப்படியாக அம்மனிதரிடத்தில் நம்பிக்கையை வளர்த்து அதன்பிறகே அவரைக் குணப்படுத்துகிறார்.

கிறிஸ்துவின் அதே வழிமுறையைத்தான் திருச்சபையும் பின்பற்றுகிறது. ஒவ்வொரு அருளடையாளத்திலும் முதலில் அருள்வாக்கு மூலமாக நமது நம்பிக்கையை வளர்த்து அதன்பிறகே அருளடையாளச் சடங்குகளை நிறைவேற்றுகிறது.

**அருட்தந்தை வை.இருதயராஜ்**

திருப்பலியிலும் அருள்வாக்கு வழிபாடு முடிந்தபின்பே நற்கருணை வழிபாடு தொடங்குகிறது.

திருமுழுக்குப் பெறுவோரின் காதையும் வாயையும் குருவானவர் தொட்டு ★செவிடர் கேட்கவும் ஊமையர் பேசவும் ஆண்டவர் செய்தருளினார். நீர் விரைவில் அவரது வார்த்தையைக் காதால் கேட்கவும், அவ்விசுவாசத்தை நாவால் அறிக்கையிடவும் செய்தருள்வாராக."என்று கூறுகிறார்.

நாம் கடவுளுடைய வார்த்தையைக் காதால் கேட்கவேண்டும், ஏனெனில் கேட்பதால்தான் நம்பிக்கை உண்டாகும், "அறிவிப்பதைக் கேட்டால்தான் நம்பிக்கை உண்டாகும்" (உரோ, 10:17), கேள்வியால் நாம் பெற்ற நம்பிக்கையை மற்றவர்களுக்கு எடுத்துரைக்க வேண்டும். "நாங்கள் கண்டதையும் கேட்டதையும் எடுத்துரைக்காமலிருக்க எங்களால் முடியாது" (திப 4:20) என்று துணிவுடன் கூறிய பேதுருவின் ஆர்வம் நம்மை ஆட்கொள்ள வேண்டும்.

கடவுளின் குரலைக் கேட்பவர்கள் மற்றவர்களின், குறிப்பாக, நலிவடைந்தவர்களின் குரலைக் கேட்பார்கள்,

துன்புறுவோரின் அபயக்குரலைக் கேட்டு ஆவன செய்யவில்லை என்றால், நாம் காது இருந்தும் கேளாத செவிடர்கள்.

நமது காதுகள் கூர்மையாக இருக்க வேண்டும். அவ்வாறே தமது பார்வையும் நேரிய பார்வையாக இருக்க வேண்டும். பணக்காரர்களை ஒருவிதமாகவும் ஏழைகளை வேறொருவிதமாகவும் பார்த்து. ஒருதலை சார்பாக நாம் நடக்காமல் இருக்கும்படி கடந்த ஞாயிறு இரண்டாம் வாசகத்தில் நம்மை எச்சரிக்கிறார் புனித யாக்கோபு. அன்றைய நற்செய்தியில், இயேசுவின் புதுமையைக் கண்ட மக்கள் "இவர் எத்துணை நன்றாய் யாவற்றையும் செய்து வருகிறார்" (மாற் 7:37) என்று வியப்படைந்தனர்.

கடவுள் உலகத்தைப் படைத்தபோது தாம் படைத்ததை உற்று நோக்கினார். அவர் படைத்தவை மிகவும் நன்றாக இருந்தன (தொ.நூ 1:31). இந்த முதல் படைப்பு பாவத்தால் சீரழிந்த நிலையில் கடவுள் தம் மகன் கிறிஸ்து வழியாக மீண்டும் உலகைப் படைக்கிறார். இப்புதுப்படைப்பு முதல் படைப்பை விடச் சிறந்ததாக உள்ளது என்ற ஆழமான இறையியல் உண்மையையும் இப்புதுமை உணர்த்துகிறது.

திருமுழுக்கினால் புதுப்படைப்பாக மாறியுள்ள நாம் கடவுளுடைய வார்த்தையைக் காதால் கேட்போம். அதன் எதிரொலியாக ஏழைகளின், ஒடுக்கப்பட்டவர்களின் குரலையும் கேட்டு அவர்களுக்கு உதவிக்கரம் நீட்டுவோம்.




# ஆயித்தியமலை சதா சகாயமாதா திருவிழா



மட்டக்களப்பு ஆயித்தியமலை புனித சதா சகாய மாதா திருத்தலத்தின் வருடாந்த திருவிழா கடந்த ஞாயிறு வெகு விமரிசையாகக் கொண்டாடப்பட்டது. திருவிழா திருப்பலி அன்றைய தினம் காலை மறை மாவட்டத்தின் ஓய்வுநிலை ஆயர் பேரருட்திரு ஜோசப் பொன்னையா ஆண்டகையின் தலைமையில் கூட்டுத் திருப்பலியாக நிறைவேற்றப்பட்டது.ஆலய பங்குத்தந்தை வின்சென்ட் ஜெரிஸ்டன் மற்றும் அருட் தந்தையர்கள் இணைந்து விசேட கூட்டுத் திருப்பலியை ஒப்புக்கொடுத்தனர். திருச்சொரூப பவனி, திருச்சொரூப ஆசீர்வாதமும் நடைபெற்று, கொடியிறக்கத்துடன் திருவிழா நிறைவு பெற்றது. திருவிழா திருப்பலி நிறைவில் ஓய்வுநிலை ஆயர் ஜோசப் பொன்னையா ஆண்டகை திருத்தல பங்கு சபையினரால் பொன்னாடை போர்த்தி கௌரவிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

(படங்கள்: கல்லடி குறூப் நிருபர்)

**இவ்வார புனிதர்**

## சமாதானத் தூதுவரான

# புனித நிக்கோலஸ்

டோலென்ட்டினோவின் புனிதர் நிக்கோலஸ் ஒரு ஆன்ம பலம் கொண்டவரும் இத்தாலிய புனிதரும் ஆவார். இவர், உத்தரியத்திலுள்ள ஆன்மாக்களின் பாதுகாவலர் என்றும் அறியப்படுகிறார்.



விலங்குகள், குழந்தைகள், படகோட்டிகள், கப்பல் பணியாளர்கள், நோயுற்ற மிருகங்கள், உத்தரிக்கும் ஆன்மாக்கள் ஆகியோரின் பாதுகாவலர் இவர்.

18 வயதில் துறவறம் பெற்ற நிக்கோலஸ், ஏழு வருடங்கள் கழித்தே குருத்துவம் பெற்றார். மறை போதகம் செய்வதில் கீர்த்தி பெற்றிருந்த இவர், சிறந்த ஒப்புரவாளருமாவார்.

கி.பி. 1274ல், தமது பிறந்த ஊருக்கு அருகிலுள்ள டோலேன்ட்டினோ’வுக்கு அனுப்பப்பட்டார். அங்கே இரு பிரிவினரிடையே கலவரம் நடந்து கொண்டிருந்தது. ஆயருக்கு பக்கபலமாக “கேல்ப்ஸ்” எனும் பிரிவினரும், ரோமப் பேரரசருக்கு ஆதரவாக “கிபெல்லின்ஸ்” எனும் பிரிவினரும் கலவரத்தில் ஈடுபட்டிருந்தனர். அங்கே அவர் சமாதான தூதுவராகப் பணி புரிந்தார்.

ஏழைகள் மற்றும் குற்ற செயல்களில் ஈடுபட்டிருந்தவர்களுக்கும் போதனை செய்தார். நோயுற்றோருக்காக புனித அன்னை கன்னி மரியாளிடம் ஜெபித்து அப்பம் வழங்கி அவர்களை குணமாக்கினார்.

அவருக்கு சம்மனசுக்களின் காட்சிகள் காணக் கிடைத்ததாகவும் கூறப்படுவதுண்டு. தொடர்ந்து நோன்புகள் நோற்கும் வழக்கம் கொண்ட நிக்கோலஸ், ஒருமுறை ஒரு வாரத்துக்கும் அதிகமாக நோன்பிருந்த வேளையில், அன்னை கன்னி மரியாளும், புனிதர் அகுஸ்தினாரும் காட்சியளித்து, சிலுவை அடையாளமிட்ட ரொட்டியை தண்ணீரில் நனைத்து உண்ணுமாறு கூறினர்.

நோன்புகளின் காரணமாக மிகவும் களைத்தும், பலவீனமாகவும் காணப்பட்ட நிக்கோலஸ், சிலுவை அடையாளமிட்ட ரொட்டிகளை தண்ணீரில் நனைத்து உண்டவுடன் புத்துணர்ச்சியும் புதிய பலமும் பெற்றார்.

ஏழைகளுக்கு உதவுவதிலும், சிறைச்சாலைகளுக்கு சென்று கைதிகளைக் கண்டு அவர்களுக்கு போதனைகள் செய்வதிலும் நோயுற்றோருக்காக கன்னி மரியாளிடம் ஜெபித்து ரொட்டி வழங்கி அவர்களை குணமாக்குவதிலும் வெற்றி கண்டார்.

அவருடைய இந்த வெற்றிகளுக்கான காரணம் என்னவென்று அவரிடம் கேட்கப்பட்டபோது, தாம் இறைவனின் ஒரு கருவியே என்றார்.

தமது இறுதி நாட்களில் நோயுற்று, அதிக வேதனையுற்ற நிக்கோலஸ், கி.பி. 1305ம் ஆண்டு, செப்டம்பர் மாதம், பத்தாம் தேதி மரணமடைந்தார். இவரது உடல் டோலென்ட்டினோ நகரிலுள்ள “புனித நிக்கோலஸ் திருத்தலத்தில்” பாதுகாக்கப்படுகின்றது.

# அன்பு அனைத்திலும் வலிமையானது

## பரிசுத்த பாப்பரசர் முதலாவது பிரான்சிஸ்

அன்பு அனைத்தையும்விட வலிமையானது. அதன் அழகு உலகை குணப்படுத்தும் என்பதை நினைவில் கொள்வோம், ஏனென்றால் அது கடவுளில் அதன் வேர்களைக் கொண்டுள்ளது. நாமும் அந்த அன்பை பரவச்செய்து பாதுகாப்போம் என திருத்தந்தை பிரான்சிஸ் தெரிவித்தார்.

கடந்த 8ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை திருத்தந்தை பிரான்சிஸ், பாப்புவா நியூ கினியின் வனிமோ மறைமாவட்டத்தின் விசுவாசிகளுக்கு அருளுரை வழங்கினார்.

நம்மைச் சுற்றியுள்ள கோவில்கள், பள்ளிகள், மருத்துவமனைகள், மறைபரப்புப் பணி மையங்கள் ஆகிய அனைத்தும் அனைவருக்கும் மீட்பைக் கொண்டு வருவதற்காக இயேசு கிறிஸ்து நம்மிடையே வந்தார் என்பதை சான்றுபகர்கின்றன.



உண்மையில், நமது நோக்கம் துல்லியமாக கிறிஸ்துவின் நற்செய்தியின் அழகை எல்லா இடங்களிலும் கடவுளையும் நமது சகோதரர் சகோதரிகளையும் அன்புசெய்வதன் வழியாக அறிவிப்பதாகும்.

முழு சமூகமும் இந்த முயற்சியை ஆதரிக்க வேண்டும், இதன் வழியாக நீங்கள் உங்கள் சேவையை அமைதியாக மேற்கொள்ள முடியும். குறிப்பாக, குடும்பப் பொறுப்புகளுடன் நற்செய்திப் பணியின் தேவைகளை நிறைவேற்ற வேண்டியிருக்கும் நிலையிலும் கூட உங்கள் பணி அமைதி நிறைந்ததாகவே இருக்கும்.

இருப்பினும், நாம் உதவக்கூடிய மற்றொரு வழியும் உள்ளது, அதுவே நாம் ஒவ்வொருவரும் நாம் வாழும் இடத்தில் மறைப்பணியாளர்களாக வாழ்வது அதாவது, இல்லத்தில், பள்ளியில், பணியிடத்தில், இயற்கையில், கிராமங்களில், நகரங்களில் என எல்லா இடங்களிலும் மறைப்பணியாளர்களாகத் திகழ்ந்திட முடியும்.

"நீங்கள் ஒருவர் மற்றவருக்குச் செலுத்தும் அன்பிலிருந்து நீங்கள் என் சீடர்கள் என்பதை எல்லாரும் அறிந்து கொள்வர்” (யோவான் 13:35; மத் 22:3540) என்று இயேசு தனது சீடர்களிடம் கூறியதுபோன்று நமக்கும் கற்பிக்கிறார் என்பதைப் புரிந்துகொள்வோம்.

அன்பு அனைத்தையும்விட வலிமையானது. மற்றும் அதன் அழகு உலகை குணப்படுத்தும் என்பதை நம் நினைவில் கொள்வோம். ஏனென்றால் அது கடவுளில் அதன் வேர்களைக் கொண்டுள்ளது.ஆகவே, நாமும் அந்த அன்பை பரவச்செய்து அதனைப் பாதுகாப்போம். அவ்வாறு செய்யும்போது கூட நம்மிடையே தவறான புரிதல்கள் மற்றும் எதிர்ப்புகள் ஏற்படலாம் என்பதையும் மனதில் நிறுத்துவோம்.

இந்த மண்ணின் மறைசாட்சியும் அருளாளருமான Peter To Rot அவர்கள், இந்த வலிமையான அன்பிற்குத் தனது வார்த்தையாலும் வாழ்வாலும் சான்று பகர்ந்தவர் ஆவார். குடும்பத்தின் அடித்தளத்தை குறைமதிப்பிற்கு உட்படுத்த விரும்பியவர்களிடம் அதன் ஒன்றிப்பைப் பாதுகாக்க வேண்டும் என்பதற்காகவே அவர் தனது இன்னுயிரைக் கையளித்தார்.



பாப்புவா நியூ கினியாவில் காணப்படும் இயற்கை வளங்களுக்கு மேலாக இங்கு வரும் நல்ல மனிதர்களைச் சந்திப்பதன் வழியாக அவர்களைப் புகழ்மிக்கவர்கள் ஆக்குவதே நீங்கள் அனைவருடனும் பகிர்ந்து கொள்ளக் கூடிய மிக விலையுயர்ந்த பரிசு.

குழந்தைகளே, எல்லோருக்கும் பரவச் செய்யக்கூடிய உங்களின் புன்னகையாலும், பொங்கிவழியும் மகிழ்ச்சியாலும் இதனை நீங்கள் செய்திட முடியும்.இங்கு வருகைதரும் சுற்றுலா பயணிகள் அனைவரும் தங்களுடன் எடுத்துச் செல்லக்கூடிய மற்றும் அவர்களின் இதயங்களில் வைத்திருக்கக்கூடிய மிக அழகான படம் நீங்கள்! அன்பான திருஅவையாக, உங்கள் இருத்தலைக் கொண்டு இந்த மகிழ்ச்சியான நிலத்தை தொடர்ந்து அழகுபடுத்த நான் உங்களை ஊக்குவிக்கிறேன். உங்களை நான் ஆசீர்வதிக்கிறேன், உங்களுக்காக இறைவேண்டல் செய்கிறேன் என்றும் திருத்தந்தை தெரிவித்தார்.

**செல்வராஜ் சூசைமாணிக்கம்**

# அறிவை வழங்கும் பல்கலைக்கழகமாக லேக்ஹவுஸ் நிறுவனத்தை மாற்றுவது காலத்தின் தேவை

## வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன





லேக்ஹவுஸ் நிறுவனத்தின் அமைவிடம், நிறுவனத்துக்கு சொந்தமான பௌதிக மற்றும் மனித வளங்களுக்கு அமைய உலகில் அங்கீகரிக்கப்பட்ட நாட்டில் உள்ள பல்கலைக்கழகத்துடன் இணைத்து ஊடகத்துறையில் அறிவை வழங்கும் பல்கலைக்கழகமாக லேக்ஹவுஸ் நிறுவனத்தை உயர்த்துவது குறித்து பரிசீலிக்க வேண்டியது அவசியம் என போக்குவரத்து, நெடுஞ்சாலைகள் மற்றும் வெகுஜன ஊடகத்துறை அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன தெரிவித்துள்ளார்.

டிஜிட்டல் மயமாக்கப்பட்ட உலகில் நாளிதழ்களை அச்சடித்து விற்பனை செய்வதன் மூலம் எதிர்காலத்தில் ஊடக நிறுவனத்தைத் தக்கவைக்க முடியாது என்றும்

e புத்தகம், eபேப்பர் போன்றவற்றையும் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் என்றார்.

கொழும்பு பண்டாரநாயக்க ஞாபகார்த்த சர்வதேச மாநாட்டு மண்டபத்தில் நேற்று (09) பிற்பகல் நடைபெற்ற லேக்ஹவுஸ் நிறுவன ஊடக அகடமியின் டிப்ளோமா வழங்கும் நிகழ்வில் கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

லேக்ஹவுஸ் மீடியா அகடமியால் ஏற்பாடு செய்யப்பட்ட ஊடகத் தொடர்பாடல் டிப்ளோமா பாடநெறி மற்றும் டிஜிட்டல் மீடியா தொடர்பாடல் டிப்ளோமா பாடநெறியை வெற்றிகரமாக முடித்த 20 மாணவர்களுக்கு டிப்ளோமா சான்றிதழ்கள் வழங்கப்பட்டன. ஊடக தொடர்பாடல் டிப்ளோமா பயின்ற 11 மாணவர்களும், டிஜிட்டல் மீடியா தொடர்பாடல் பாடநெறியை பயின்ற 09 மாணவர்களும் இதில் அடங்குவர்.

அங்கு மேலும் கருத்து தெரிவித்த அமைச்சர் கலாநிதி பந்துல குணவர்தன,

இந்த உலகில் மாற்றம் தவிர அனைத்தும் மாறுகிறது. ஒரே நிலையானது மாற்றம். உலகம் அதிவேகமாக மாறிக்கொண்டிருக்கும் போது, மாறிவரும் உலகத்தின் உண்மைகளை சமூகத்திற்குப் பரவலாகவும், விமர்சன ரீதியாகவும் பரப்பி, அதை பிரபலப்படுத்த ஒரு அறிவார்ந்த ஊடகக் கலாசாரம் தேவை. அந்தத் தேவையை நிறைவேற்றும் வகையில், எமது லேக்ஹவுஸ் மீடியா அகடமியின் ஆசிரியர்கள் மற்றும் பேராசிரியர்கள், பிள்ளைகளுக்குச் சரியான வழிகாட்டுதலை வழங்குகின்றனர். அனுபவத் தொகுப்பினைத் திரட்டி, டிப்ளோமா பட்டம் பெற்ற உங்கள் அனைவருக்கும் ஊடகவியலாளர்கள் வாழ்த்துக்களைத் தெரிவித்துக் கொள்கின்றனர் .

டி. ஆர்.விஜயவர்த்தன தலைமையிலான தேசபக்தர்கள் இந்த நாட்டின் விடுதலைப் போராட்டத்தை மக்களுக்குத் தெரிவிக்கும் பணிக்காக ஊடகங்களை அதிகளவில் பயன்படுத்தினார்கள். சுதந்திரத்தின் பின்னர், பல்வேறு பொருளாதாரப் பாதைகளின் ஊடாக மிகவும் சவாலான சூழ்நிலையை நாடு எதிர்கொண்டதால் இலங்கையின் பொருளாதாரம் வீழ்ச்சியடைந்தது. யதார்த்தமான மாற்றம் ஏற்பட வேண்டும் என்று நம்புகிறது. உலகின் பல்வேறு நாடுகளுடன் செய்து கொள்ளப்பட்ட ஒப்பந்தங்கள் ஒரு தேசிய கொள்கையாக இயற்றப்பட்டுள்ளது. 2024 ஆம் ஆண்டு முதல் 2048 ஆம் ஆண்டு வரை, தனிநபர் வருமானம் 20,000 டொலர்களுக்கு மேல் இருக்கும் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட, ஏற்றுமதி சார்ந்த பொருளாதாரப் பயணத்திற்கான தேசியக் கொள்கையாக இந்த நாடு பொருளாதார மாற்றச் சட்டத்தில் சேர்க்கப்பட்டுள்ளது.



தாங்கள் கற்றுக்கொண்டவற்றின் அடிப்படையில் அந்தப் பொறுப்பை நிறைவேற்ற முடியும் என்று நான் நம்புகிறேன். மேலும், லேக்ஹவுஸ் அமைந்துள்ள இடத்தின் அடிப்படையில் உலகில் உள்ள அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகத்துடன் இணைத்து ஊடகத்துறையில் பல்கலைக்கழகமாக லேக்ஹவுஸை தரமுயர்த்துவது சாத்தியமா என்ற கேள்வியையும் கருத்தில் கொள்ள விரும்புகின்றேன். ஏனென்றால் டிஜிட்டல் மயமாக்கப்பட்ட உலகில், செய்தித்தாள்களை அச்சடித்து விற்பதன் மூலம் எதிர்காலத்தில் ஒரு நிறுவனத்தை நடத்த முடியாது.

e புத்தகங்கள், eபேப்பர் போன்றவற்றின் மூலம் போன்களில் ஊடக கலாசாரம் நுழைந்துள்ளது. பெரும் இயந்திரங்கள் மற்றும் வளங்களைக் கொண்டு எதிர்காலத்தில் பெரிய முதலீட்டை ஈடுகட்ட முடியாது என்று நான் நினைக்கிறேன். எனவே, சர்வதேச உலகிற்கு ஏற்ற வகையில் பயிற்சி பெற்ற ஊடகவியலாளர்களுக்கு பயிற்சியளிக்கக் கூடிய பௌதீக மற்றும் மனித வளங்களைப் பயன்படுத்தி அவர்களை உலக மட்டத்திற்கு உயர்த்த உதவும் சர்வதேச தொடர்புகளைக் கொண்ட பல்கலைக்கழகமாக லேக்ஹவுஸ் நிறுவனத்தை மாற்றுவதற்கு ஒன்றிணைந்து செயற்படுவோம்.

**இங்கு உரையாற்றிய லேக்ஹவுஸ் நிறுவன தலைவர் பேராசிரியர் ஹரேந்திர காரியவசம்,**

லேக்ஹவுஸ் மீடியா அகடமியின் இரண்டாவது டிப்ளோமா வழங்கும் நிகழ்வு இன்று நடைபெறுகிறது. 'டிப்ளோமா இன் மீடியா கம்யூனிகேஷன்' மற்றும் டிஜிட்டல் மீடியாவுடன் இன்று சமூகத்தில் நுழையும் உங்களுக்கு வாழ்த்துக்கள்.

எதிர்காலத்தில் இந்த இரண்டு படிப்புகளுக்கு மேலதிகமாக, தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சி செய்தி தொகுப்பாளர்களுக்கான ஒரு நாள் பட்டறைகள் நடைபெறும். எனது பொருளியல் ஆசிரியர் கலாநிதி பந்துல குணவர்தன ஆவார். அன்று அவர் கற்பித்த தத்துவார்த்த அறிவை இன்று நடைமுறையில் பயன்படுத்துகிறோம். சுமார் முப்பத்தைந்து ஆண்டுகளுக்கு முன்பு நீங்கள் எனக்குக் கற்றுக் கொடுத்த பொருளாதாரம் மற்றும் வணிக அறிவு இன்றும் நடைமுறையில் பயன்படுத்தப்படலாம் என்பதையிட்டு நான் பெருமைப்படுகிறேன். லேக்ஹவுஸ் பற்றிய உங்கள் கனவுகளை நனவாக்க நாங்கள் கடமைப்பட்டுள்ளோம் என்றார்.

---

அம்பாறை மாவட்ட

## மக்களின் விருப்பத்துக்கமையவே எனது அரசியல் பயணம் தொடரும்

### கலை, கலாசாரத்தை தொலைத்துவிட்டு தமிழ்த் தேசியம் பேசுவதில் பயனில்லை - தவராசா கலையரசன் எம்.பி

துறைநீலாவணை நிருபர்

ஜனாதிபதித் தேர்தலில் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் யாருக்கு வாக்களிக்க வேண்டுமென்று நான் எவருக்கும் விரல் நீட்டமாட்டேன். மக்களின் விருப்பு வெறுப்புக்களுக்கு அமையவே எனது செயற்பாடு அமைந்திருக்கும் என தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் தவராசா கலையரசன் தெரிவித்தார்.

பாண்டிருப்பு மறுமலர்ச்சி சன சமூக நிலையத்தின் ஏற்பாட்டில் பாண்டிருப்பு பொது நூலக வளாகத்தில் சரஸ்வதி பூங்கா திறப்பு விழா உலக எழுத்தாளர் தமிழ்மணி உமா வரதராஜன் தலைமையில் அண்மையில் நடைபெற்றது.



இந்நிகழ்வில் பிரதம அதிதியாக கலந்துகொண்டு கருத்து தெரிவிக்கையிலேயே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் தொடர்ந்து கருத்து தெரிவிக்கையில்,

எனது அரசியல் பயணமானது அம்பாறை மாவட்ட தமிழ் மக்களின் விருப்பத்துக்கமையவே தொடரும். இதேவேளை எமது இருப்பு கலை கலாசாரம் என்பவற்றை தொலைத்துவிட்டு தமிழ்த் தேசியம் பேசுவதால் எந்த பலனும் இல்லை.

வடக்கு கிழக்கிலுள்ள எட்டு மாவட்டங்களில் தமிழ் மக்கள் வாழ்கின்றார்களாயினும் அம்பாறை மாவட்ட தமிழ் மக்கள் பல்வேறுபட்ட இன்னல்களுக்கு தொடர்ந்தும் முகங்கெடுத்து வருகின்றனர். நாம் சற்று அசந்து தூங்கினால் எமது இருப்பு கேள்விக்குறியாகி விடும்.

அம்பாறை மாவட்டத்திலுள்ள தமிழ் மக்களின் நிலங்கள் மாற்று சமூகத்தினரால் கபளீகரம் செய்யப்படும் நிலை தொடர்கின்றது. இதனால் நாம் விழிப்புடன் இருக்கவேண்டியுள்ளது. பொத்துவில், திருக்கோவில் போன்ற இடங்களில் வன இலாகாவினால் இரண்டாயிரத்து அறுபத்து மூன்று ஏக்கர் நிலம் கையகப்படுத்தப்பட்டபோது அதனை மக்களுக்கு மீட்டுக் கொடுத்துள்ளதாக அவர் தெரிவித்தார்.

---

## கிழக்கின் குரல்

ஜனாதிபதியை ஆதரித்து

### காத்தான்குடியில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுப்பு

புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்



ஜனாதிபதி வேட்பாளர் ரணில் விக்கிரமசிங்கவை ஆதரித்து காத்தான்குடியில் தேர்தல் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன.

காத்தான்குடி நகரில் பல இடங்களில் தேர்தல் விஞ்ஞாபனம், துண்டுப்பிரசுரம், மக்கள் சந்திப்பு என்பன இடம்பெற்று வருகின்றன.

ஸ்ரீ லங்கா முஸ்லிம் காங்கிரஸ் முன்னாள் கொள்கை பரப்பு செயலாளர் முபீன், ஐக்கிய தேசியக் கட்சியின், வலய அமைப்பாளர்களான முபாறக் ஷாபி மற்றும் உமர்லெவ்வை ஆகியோரின் வழிகாட்டலில் பிரசார நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டன. அதிகமான ஆதரவாளர்களும், தொண்டர்களும் பிரசாரப் பணிகளில் ஈடுபட்டனர்.

---

## கவிதை நூல் வெளியீட்டு விழா

சாய்ந்தமருது டொக்டர் எஸ்.நளிமுதீன் எழுதிய 'இஸ்லாமிய பொற்காலம்' கவிதை நூல் வெளியீட்டு விழா மாளிகைக்காடு பாவா ரோயல் வரவேற்பு மண்டபத்தில் அண்மையில் (7) நடைபெற்றது.

சட்டத்தரணி மர்யம் மன்சூர் நளிமுதீனின் நெறியாள்கையில் ஏ.ஆர்.மன்சூர் பௌண்டேஸன் ஏற்பாட்டில் நடைபெற்ற நூல் வெளியீட்டு நிகழ்வில் பிரதேசத்திலுள்ள இலக்கிய ஆர்வலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

இந்நூல் வெளியீட்டின் மூலம் கிடைத்த பண அன்பளிப்புகள் நாணல் பெண்கள் இலக்கிய வட்டத்திற்கு வழங்கி வைக்கப்பட்டது.

எம்.எம்.ஜெஸ்மின்

---

## குயவன் குள சூழலில் நிழல் மரங்கள் நடுகை

மூதூர் தினகரன் நிருபர்

மூதூர் பிரதேச செயலகப்பிரிவுக்குட்பட்ட ஜாயாநகர் கிராம சேவகர் பிரிவில் ‘குயவன்’ குளத்தை சூழ நீண்டகாலம் நிழல் தரும் மரங்கள் தற்போது நடுகை செய்யப்பட்டு வருகின்றன.

மேலும் மூதூர் நகர் மையப்பகுதியில் இக்குளம் அமைந்துள்ளது. இக்குளத்தை மூடியவாறு பெருமளவில் காணப்பட்ட நீர்த்தாவரங்கள் அண்மையில் மூதூர் பிரதேச சபையினால் முழுமையாக அகற்றப்பட்டு குளம் மிக அழகுடன் தூய்மைப்படுத்தப்பட்டன.

இந்நிலையில் இக்குளத்தை சூழவும், குளத்திற்கு அருகில் செல்லும் வீதி ஓரமாகவும் நீண்டகாலம் நிழல் தரும் பல்லின மரங்களை மூதூர் ஜாயாநகர் கிராம அபிவிருத்திச் சங்கத்தினர் நடுகை செய்து வருகின்றனர்.

---

## ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பு குழு மாவட்ட செயலாளருடன் விசேட சந்திப்பு

கல்லடி குறூப், புதிய காத்தான்குடி தினகரன் நிருபர்கள்



ஜனாதிபதி தேர்தலை முன்னிட்டு ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் கண்காணிப்பாளர்கள் மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரும் மாவட்ட தேர்தல் தெரிவத்தாட்சி அலுவலகருமான ஜஸ்டினா முரளிதரனை ஒல்லாந்தர் கோட்டையில் அமைந்துள்ள பழைய மாவட்ட செயலக கட்டடத்தில் சந்தித்து விசேட கலந்துரையாடலில் நேற்று ஈடுபட்டனர்.

இதன்போது ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் காண்காணிப்பாளர்களால் மாவட்டத்தில் இடம்பெற்ற தேர்தல் விதிமீறல்கள், தேர்தல் கள நிலவரங்கள் தொடர்பாக மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபருடன் கலந்துரையாடினர். இதுவரை மாவட்டத்தில் பாரிய தேர்தல் விதிமீறல்கள் இடம்பெறவில்லை தெரிவிக்கப்பட்டது. மேலும் ஜனாதிபதி தேர்தலுக்காக மேற்கொள்ளப்பட்டு வரும் முன்னாயத்த நடவடிக்கைகள் தொடர்பாக இதன்போது ஐரோப்பிய ஒன்றிய தேர்தல் காண்காணிப்பாளர்களுக்கு மட்டக்களப்பு மாவட்ட அரசாங்க அதிபரினால் விளக்கம் அளிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

ஐரோப்பிய ஒன்றியத்தின் தேர்தல் கண்காணிப்பு குழுவின் நீண்டகால மேற்பார்வையாளரான சிசிலியா கீவேனி கருத்து தெரிவிக்கையில்,

இம்முறையுடன் இலங்கையில் தாம் 7 தடவைகள் தேர்தல்கள் கண்காணிப்பில் ஈடுபட்டு வருவதாகவும் மேலும் தேர்தல் விதி மீறல்களை தலைமை காரியாலயத்திற்கு அறிக்கையிட்டு வருவதாக தெரிவித்ததுடன், பழைய மாவட்ட செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்ற தேர்தல்கள் தொடர்பாக உத்தியோகத்தர்களுக்கு விளக்கமளிக்கும் செயலமர்வை குறித்த குழுவினர் கண்காணிப்பு மேற்கொண்டிருந்தனர்.

---

## ஐ.ம.சக்தியின் தேர்தல் காரியாலய திறப்பு விழா





பாலமுனை தினகரன் நிருபர்

ஜனாதிபதி வேட்பாளர் சஜித் பிரேமதாசவை ஆதரித்து ஐக்கிய மக்கள் சக்தியின் தேர்தல் நடவடிக்கைகள் காரியாலய திறப்பு விழாவும் பொதுக்கூட்டமும் சாய்ந்தமருதில் நடைபெற்றது.

கல்முனை மாநகர சபையின் முன்னாள் முதல்வரும், ஸ்ரீ.மு.காங்கிரஸ் கட்சியின், சர்வதேச விவகாரப் பணிப்பாளருமான கலாநிதி சிராஸ் மீராசாஹிப் தலைமையில் அவருடைய இல்லத்தில் நடைபெற்றது.

இந்நிகழ்வில் கட்சியின் தலைவரும், பாராளுமன்ற உறுப்பினருமான ரவூப் ஹக்கீம் பிரதம அதிதியாவும், பாராளுமன்ற உறுப்பினர்களான எச்.எம்.எம். ஹரிஸ், பைசால் காசிம் கட்சியின் தவிசாளர் எம்.அப்துல் மஜீத் உட்பட பெரும் திரளான பொது மக்களும் கலந்து கொண்டனர்.

## இலங்கை முதலீட்டுச் சபை

### பெறுகை அறிவித்தல்

பின்வரும் பெறுகைக்கான விலைமனுக்களுக்கான அழைப்பு விளம்பரம் செப்டெம்பர் 10ஆம் திகதிய ''தினமின'' பத்திரிகையிலும் மற்றும் இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணையதளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ளன. (www.investsrilanka.com)

**"INVITATION FOR BIDS FOR TAILORING OF UNIFORMS TO THE SECURITY STAFFS OF BOI FOR THE YEAR 2024"**

**CONTRACT NO: BOI/S&S/Q/043/2024**

மேற்படி பெறுகைக்கு இயைபான கேள்விப் படிவங்கள் சிங்கள மொழியில் தயாரிக்கப்பட்டுள்ளன என்பதுடன் விலைமனுக்களைச் சமர்ப்பிக்க ஆர்வம் காட்டும் ஒப்பந்தக்காரர்கள் ''தினமின'' பத்திரிகையிலும் இலங்கை முதலீட்டுச் சபையின் உத்தியோகபூர்வ இணையதளத்திலும் பிரசுரிக்கப்பட்டுள்ள விளம்பரத்தின் பிரகாரம் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு இத்தால் அறிவிக்கப்படுகின்றது. (www.investsrilanka.com)

விலைமனுதாரர்கள் மேலதிக தகவல்களை 011-2543041/074-1531432 எனும் தொலைபேசி இலக்கங்களின் ஊடாக பிரதிப் பணிப்பாளர் (நிர்வாகம்) அவர்களிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம்.

**தலைவர்,**
**இலங்கை முதலீட்டுச் சபை.**

## பெறுகை அறிவித்தல்

### மருந்து உபகரணங்களை கொள்வனவு செய்தல் ஆதார வைத்தியசாலை, கம்பளை

கம்பளை ஆதார வைத்தியசாலைக்கு தேவையான மருத்துவ உபரணங்களை கொள்வனவு செய்வதற்காக என்னால் பிரசுரிக்கப்பட்ட 2024.09.06ம் திகதிய பெறுகை அறிவித்தல் பற்றியது.

அதன் பிரகாரம் குறித்த பெறுகை அறிவித்தலில் குறிப்பிடப்பட்டுள்ள பெறுகை திறக்கப்படும் திகதி மற்றும் கேள்வி ஆவணங்கள் விநியோகிக்கப்படும் நாட்களில் மாற்றமொன்று மேற்கொள்ளப்படுகிறது.

மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்தல் பற்றிய கேள்வி ஆவணங்கள் 2024.09.26 பி.ப. 2.00 வரை வைத்தியசாலையின் கணக்குப் பிரிவில் பெற்றுக்கொள்ளலாம்.

கேள்வி ஆவணங்கள் ஒப்படைத்தல் 2024.09.27 பி.ப. 12.30 வரை நீடிக்கப்படுவதுடன், அன்றே பி.ப. 12.30 இற்கு விலைமனுக்கள் திறக்கப்படும். மருத்துவ உபகரணங்கள் கொள்வனவு செய்தல் பற்றி என்னால் பிரசுரிக்கப்பட்ட 2024.09.06ம் திகதிய பெறுகை அறிவித்தலில் குறிப்பிடப்படும் ஏனைய நிபந்தனைகள் அவ்வாறே அமுலாகலாம் என்பதை தெரிவித்துக்கொள்கின்றேன்.

**தலைவர், பிரதேச பெறுகைக்குழு,**
**தள வைத்தியசாலை,**
**கம்பளை**

## முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக் கோரலுக்கான அழைப்பு

Highland MILCO

### மில்கோ (பிறைவட்) லிமிடட்

**(அரசுரிமை தொழில்முயற்சி)**

இலங்கையில் ''ஹைலண்ட்'' என்ற வர்த்தக நாமத்தின் கீழ் பால் உற்பத்திகளை தயாரித்தல், பால் பதனிடுதல் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றில் அரசு உரிமையுள்ள முதன்மையான அமைப்பே மில்கோ (பிறைவட்) லிமிடட் என்பதாகும். பின்வரும் உருப்படிகளை வழங்குதல் மற்றும் விநியோகிப்பதற்காக உற்பத்தியாளர்கள்/ வழங்குநர்கள் அல்லது அவர்களின் தர அங்கீகாரம் பெற்ற முகவர்களிடமிருந்து மில்கோ (பிறைவட்) லிமிடட்டின் கேள்விக் குழுவின் தலைவரினால் முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| | உருப்படி /விபரங்கள் | முத்திரையிடப் பட்ட கேள்வி இல. | முடிவுறுத்தல் திகதி மற்றும் நேரம் | மீளளிக்கப் படாத ஆவணக் கட்டணம் | விலைக் கோரல் பிணை முறி ரூபா |
|---|---|---|---|---|---|
| 1 | நெய் இடுவதற்கான மூடியுடனான கண்ணாடி போத்தல்களை வழங்குதல் மற்றும் விநியோகித் தல் (300ml மற்றும் 500ml) | SQ/2024/P/263 | 2024-09-25 பி.ப. 3.00 மணிக்கு | ரூபா 2,000.00 | ரூபா 100,000.00 |
| 2 | UTH பால் உற்பத்திகளுக்காக UTH Aseptic Multy Layer Film வழங்குதல் மற்றும் விநியோகித் தல் (180ml, 450ml மற்றும் 900ml) | SQ/2024/P/264 | 2024-09-25 பி.ப. 3.00 மணிக்கு | ரூபா 3,000.00 | ரூபா 300,000.00 |
| 3 | ஐஸ்கிறீமுக்கான பேப்பர் டியூப் களை வழங்குதல் மற்றும் விநியோகித்தல் (500ml) | SQ/2024/P/265 | 2024-09-25 பி.ப. 3.00 மணிக்கு | ரூபா 2,000.00 | ரூபா 100,000.00 |

மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை பின்வரும் வங்கி விபரங்களின் பிரகாரம் மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் ரொக்கப் பணமாக வைப்புச் செய்தல் வேண்டும். (எக்காரணம் கொண்டும் ரொக்கப் பணம் ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது)

**வங்கிக் கணக்கின் பெயர்** : மில்கோ (பிறைவட்) லிமிடட்
**கணக்கிலக்கம்** : 004100180210331
**வங்கி மற்றும் கிளை** : மக்கள் வங்கி கோப்பரேட் வங்கிப் பிரிவு
**காரணம்** : SQ/2024/P/......... கேள்விக்கான மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம்

**பொது நிபந்தனைகள்**

1) முழு விபரங்களுடன் கூடிய கேள்விப்பத்திர ஆவணங்கள்/ விபரங்கள், ஆகியவற்றை மில்கோ (பிறைவட்) லிமிடட்டின் கொள்வனவுப் பிரிவான ஐந்தாம் மாடி, இல. 345, காலி வீதி, கொழும்பு-3, என்ற முகவரியில் 2024-09-10ஆம் திகதி முதல் 2024-09-24ஆம் திகதி வரையான வேலை நாட்களில் மு.ப. 9.30 முதல் பி.ப. 4.00 மணி வரையில் மேற்கூறிய முகவரிக்கு எழுத்துமூலமான விண்ணப்பமொன்றுடன் மேற்குறிப்பிட்ட மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை செலுத்தியதற்கான வங்கி வைப்புத் துண்டைச் சமர்ப்பிப்பதன் பேரில் பெற்றுக்கொள்ளலாம். முத்திரையிடப்பட்ட கேள்வி ஆவணங்கள் அல்லது வேறு ஆவணங்கள் என்பன கோரிக்கைக் கடிதம் இல்லாமல் வழங்கப்படமாட்டாது.
2) 90 நாட்கள் வரையில் செல்லுபடியாகும் வகையில் மேற்கூறப்பட்ட பெறுமதிக்கு இலங்கையில் அங்கீகரிக்கப்பட்ட வர்த்தக வங்கியொன்றிலிருந்து பெற்றுக்கொண்ட சலுகையுடன் கூடிய விலைக் கோரல் பிணை முறி சமர்ப்பிக்கப்படல் வேண்டும்.
3) முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் மில்கோ (பிறைவட்) லிமிடட்டின் கொள்வனவுப் பிரிவில் 2024-09-25ஆம் திகதி பி.ப. 3.00 மணிக்கு முடிவுறுத்தப்பட்டு உடன் திறக்கப்படும். விலைமனுதாரர்கள் அல்லது அவர்களது பிரதிநிதிகள் விலைமனுக்களைத் திறக்கும் நேரத்தில் அங்கு சமுகமளித்திருக்கலாம்.
4) முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட கேள்வி ஆவணங்களை கொள்வனவுப் பிரிவில் இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.
5) எக்காரணமும் காட்டாமல் எந்தவொரு கேள்வியையும் அல்லது சகல கேள்விகளையும் ஏற்றுக்கொள்ளும் அல்லது நிராகரிக்கும் உரிமையை கேள்விக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.
6) மில்கோ நிறுவனத்தின் ஊழியர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய உறவினர்கள் இந்த முத்திரை பொறிக்கப்பட்ட கேள்வியில் பங்குபற்ற முடியாது.

இந்த கேள்வி கோரல் பற்றிய மேலதிக தகவல், அல்லது முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட அறிவித்தல் பற்றிய தெளிவுபடுத்தல்கள் தேவைப்படின் மில்கோ (பிறைவட்) லிமிடட்டின் கொள்வனவு முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் 011-4500530-4.

**தலைவர் - கேள்விக்குழு**
**மில்கோ (பிறைவட்) லிமிடட்**
**ஐந்தாம் மாடி,**
**இல. 345, காலி வீதி, கொழும்பு-03.**

Sri Lanka
YOU'LL COME BACK FOR MORE

## இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு
## சுற்றுலாத்துறை மற்றும் காணி அமைச்சு
## இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம்

### விலைமனுக்கோரல்

### தேசிய போட்டிமுறையிலான ஏலம் (NCB)

**கொள்முதலின் பெயர் - 2024/2025 ஆம் ஆண்டுக்கான சர்வதேச ஊடகங்களை ஒழுங்கமைப்பதற்காக ஊக்குவிப்பாளர்கள், திரைப்பட முகாமையாளர்கள் மற்றும் பிற வர்த்தகங்களை சுற்றுலா நோக்காககொண்ட முகாமைத்துவ நிறுவனத்தை தேர்வுசெய்தல்**

1. SLTPB இன் திணைக்களத்தின் கொள்முதல் குழுவின் தலைவரினால் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்திற்கு பணியமர்த்துவதற்காக 2024/2025 ஆம் ஆண்டுக்கான சுற்றுலா பயணங்களை ஏற்பாடு செய்வதற்காக இலக்கு முகாமைத்துவ நிறுவனத்தை (DMC) தெரிவு செய்வதற்கான முத்திரையிடப்பட்ட மனுக்கள் கோரப்படுகின்றன.
2. மனுதாரர்கள் பின்வரும் தகுதிகளையும் அனுபவத்தையும் பெற்றிருக்க வேண்டும். கேள்வி மனுவுடன் மனுதாரர் பின்வரும் தேவைகளை சமர்ப்பிக்க வேண்டும்.
   i. 2024 ஆம் ஆண்டு உட்பட கடந்த 10 வருடங்களுக்குள் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தில் (SLTDA) பதிவு செய்யப்பட்ட சுற்றுலா நிறுவனமாக இருக்க வேண்டும்.
   (2024 ஆம் ஆண்டு உட்பட கடந்த 10 வருடங்களுக்கான இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தில் (STDA) பதிவு செய்வதற்கான உரிமங்களின் பிரதிகளை இணைக்கவும்).
   ii. இங்கே கொடுக்கப்பட்ட சமர்ப்பிக்கப்பட்ட படிவம் C இன் படி (2014 முதல் ஒப்பந்த ஒப்பந்தத் தகவலை மட்டும் கருத்தில் கொள்ளுங்கள்) உட்பட முக்கிய ஆதார மூல சந்தைகளில் இருந்து முன்னணி / புகழ்பெற்ற சர்வதேச சுற்றுலா செயற்பாட்டு நிறுவனங்களுடன் தற்போதைய பரிவர்த்தனைகள் (நிறுவனங்களின் பெயர்களை) குறிப்பிடவும்.
   iii. வெளிநாட்டு VIP பிரதிநிதிகள், சர்வதேச ஊடகங்கள் மற்றும் பிற அரசு நிறுவனங்கள், துறைகளுக்கான பயணச் செல்வாக்கு செலுத்துபவர்களைக் கையாள்வதில் முந்தைய அனுபவம்- 'விருதுக் கடிதம்', ஒப்பந்தங்கள், சேவை பாராட்டுக் கடிதங்கள் (நிறுவனத் தலைவரால் கையொப்பமிடப்பட்டது) போன்ற சான்றுகளை வழங்கவும்.
   iv. உள்ளூர் சுற்றுலா சங்கங்களின் உறுப்பினராக இருத்தல் (சான்றிதழ் அல்லது ஆதாரத்திற்கான ஏதேனும் சான்றுகளை வழங்கவும்)
   v. பிற தேவைகள் - உள்நாட்டு அல்லது சர்வதேச சுற்றுலா விருதுகளை வைத்திருப்பது கூடுதல் தகுதியாக இருக்கும் (சான்றிதழ்கள் அல்லது பிற சான்றுகளை வழங்கவும்)
3. தேசிய கொள்முதல் வழிகாட்டி 2006 ன் கீழ் தேசிய போட்டி ஏல முறையை பின்பற்றி ஏலம் நடாத்தப்படும். **https://www.treasury.gov.lk/web/procurement-guidelines-and-manuals/section/procurement%20guidelines**.
4. ஆர்வமுள்ள மனுதாரர்கள் **procurement@srilanka.travel** என்ற முகவரிக்கு கோரிக்கை ஒன்றினை அனுப்புவதன் மூலம் இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் கொள்முதல் குழுவில் மேலதிக தகவல்களை பெற்றுக்கொள்ளலாம்.
5. ஆர்வமுள்ள மனுதாரர்கள் மனு ஆவணங்களை **www.srilanka.travel** எனும் இணையத்தளதினூடாக எவ்வித கட்டணமுமின்றி இலவசமாக பரிசீலனை செய்துக்கொள்ளலாம்.
6. எழுத்துப்பூர்வ விண்ணப்பத்தை **2024.09.27 ஆம் திகதிக்கு** முன்னர் மீளச்செலுத்தப்படாத **ரூ.20,000/=** (இருபதாயிரம் ரூபாய்) மீள்செலுத்தப்படாத **கட்டணத்துடன் இலங்கை வங்கி - கூட்டுறவு கிளை 007119985 எனும் கணக்கிலக்கத்தில்** இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகத்தின் பெயரில் எனும் பெயரில் வைப்பிலிட்ட இரசீதின் அசல் பிரதியுடன் மனு ஆவணத்தை **procurement@srilanka.travel** எனும் மின்னஞ்சல் முகவரிக்கு சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியில் அச்சிடப்பட்ட விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ள முடியும்.
   - மனுதாரரின் பெயர்
   - தொடர்புகொள்ள வேண்டிய நபரின் பெயர் மற்றும் மனுதாரரின் தொடர்பு விபரங்கள்.
   - தொடர்புகொள்ள வேண்டிய நபரின் மின்னஞ்சல் முகவரி.
7. கேள்வி மனுக்களை தலைவர், திணைக்களத்தின் பெறுகைக்குழு, இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம், இல 80, காலி வீதி, கொழும்பு 03 சமர்ப்பித்தல் வேண்டும், மனுக்கள் கொள்முதல் பிரிவு (கீழ்மாடி), இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம், இல 80, காலி வீதி, கொழும்பு 03 எனும் முகவரிக்கு **2024.09.30 ஆம் திகதி பி.ப.02.00** ஆம் திகதிக்கு முன்னர் கிடைக்குமாறு அனுப்பி வைத்தல் வேண்டும். மனுக்கோரல் நேரம் முடிவடைந்த பின்னர் அதே முகவரியில் உடனடியாக மனுக்கள் மனுதாரர்களால் நியமிக்கப்பட்ட பிரதிநிதிகள் முன்னிலையில் திறக்கப்படும்.
8. அனைத்து விலைமனுக்களும் நிபந்தனைகளற்று மனுப்பத்திரத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிணைத்தொகையுடன் காணப்படுவதோடு பத்திரத்தில் உள்ளவாறு முகாமைத்துவ பணிப்பாளர், இலங்கை சுற்றுலாத்துறை மேம்படுத்தல் பணியகம், இல.80, காலி வீதி, கொழும்பு 03 க்காக இலங்கை ரூபா ஐந்து இலட்சம் பெறுமதியான **(ரூ.5,00.000.00)** தொகை இலங்கையில் பதிவினையுடைய A தர கொமர்ஷல் வங்கியிலிருந்து வெளியிடப்பட்டதாக காணப்பட வேண்டும்.
9. மனு ஆவணங்களை மாற்ற முடியாது.
10. மேலதிக விபரங்களுக்கு கொள்முதல் தலைவரிடம் **(procurement@srilanka.travel) , 0112426800** ஊடாக அலுவலக நேரத்தில் தொடர்புகொள்ளலாம்.
11. விலைமனுக்கோரல் அல்லது மனுக்கோரலை நிறுத்துதல் போன்ற அனைத்து அதிகாரமும் வழங்கல் சபைக்கு உண்டு.

**தலைவர்,**
**அமைச்சின் கொள்முதல் குழு,**
**இலங்கை சுற்றுலா மேம்பாட்டு பணியகம்,**
**இல-80, காலி வீதி,**
**கொழும்பு 03.**

SEL ACINE

### பெயர் மாற்றம்

தலைவர் வீதி, அக்கரைப்பற்று - 8/3, வசிக்கும் தர்மதாச கம்மெத்தகே சினத் சமிந்த ஆகிய நான், பனங்காடு பிரிவில் 90 ஆம் இலக்கத்தில் 1995.02.20 ஆம் திகதியில் பதிவு செய்யப்பட்ட எனது பிறப்புச் சான்றிதழில் உள்ள கம்மெத்தகே டினத் சமிந்த எனும் பெயரை கம்மெத்தகே சினத் சமிந்த என மாற்றிக் கொண்டுள்ளேன் என்பதை இலங்கை ஜனநாயக சோஷலிசக் குடியரசுக்கும் மக்களுக்கும் தெரிவித்துக் கொள்கிறேன்.

**தகவல் : கம்மெத்தகே சினத் சமிந்த**

Replies to Classifieds & Casual Advertisements published C/o the Daily News should only be sent by ordinary post. Replies sent under registered cover will not be accepted.

## கேள்வி அறிவித்தல்

## அம்பலந்தொட்ட பிரதேச சபை

அம்பலந்தொட்ட பிரதேச சபைக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் குறிப்பிடப்படும் சொத்துக்களை 2025ஆம் ஆண்டிற்கு குத்தகைக்கு விடுவதற்காக என்னால் கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும்

**அட்டவணை**

| தொடர் இல. | குத்தகை விடயம் | குறைந்த பட்ச கேள்வி (ரூ) | மீளளிக்கப் படும் கேள்விப் பிணை (ரூ.) | படிவக் கட்டணம் (ரூ) |
|---|---|---|---|---|
| 01. | அம்பலந்தொட்ட வார சந்தை மற்றும் மீன் சந்தை | 4,300,000.00 | 30,000.00 | 1,500.00 |
| 02. | பரவகும்புக்க வார சந்தை | 3,601,000.00 | 30,000.00 | 1,500.00 |
| 03. | மாமடல வார சந்தை | 275,000.00 | 15,000.00 | 1,500.00 |
| 04. | ஹங்கம் வார சந்தை மற்றும் மீன் சந்தை | 252,000.00 | 10,000.00 | 1,500.00 |
| 05. | பரவகும்புக மீன் சந்தை | 210,000.00 | 10,000.00 | 1,500.00 |
| 06. | அம்பலந்தொட்ட வாகன நிறுத்துமிடம் மற்றும் சைக்கிள் நிறுத்துமிடம் | 150,000.00 | 5,000.00 | 1,500.00 |
| 07. | வாதுருப்ப தென்னை விளைச்சல் | 35,000.00 | 5,000.00 | 1,500.00 |
| 08. | அம்பலந்தொட்ட பொது மலசலகூடம் | 96,000.00 | 5,000.00 | 1,500.00 |
| 09. | வியன்கஸ் தோட்ட சுற்றுலா பூங்கா அருகில் வைக்கப்படும் கை வண்டி | 54,000.00 | 2,000.00 | 500.00 |
| 10. | நோனகம வோட்டர் பார்க் பூங்காவில் வைக்கப்படும் கை வண்டி | 24,000.00 | 2,000.00 | 500.00 |
| 11. | முரவசிஹேன சில்லறை பொதுச் சந்தை | 20,340.00 | 5,000.00 | 500.00 |
| 12. | பல்லேரோட்டா சில்லறை பொதுச் சந்தை | 6,560.00 | 2,000.00 | 500.00 |
| 13. | நோனகம பொது மலசலகூடம் | 1,000.00 | 500.00 | 250.00 |
| 14. | அம்பலந்தொட்ட மரகஸ் அருகில் பொது மலசலகூடம் | 6,000.00 | 1,000.00 | 500.00 |
| 15. | அம்பலாந்தோட்டை சபை பிரதேசத்தில் வீதியின் இருபுறமும் உள்ள தினசரி வர்த்தகர்களிடம் வரிப்பணம் அறவிடல் | 202,500.00 | 10,000.00 | 1,000.00 |
| 16. | ஹங்கம் பொது மலசலகூடம் | 3,890.00 | 1,000.00 | 500.00 |

**கேள்விப் பத்திரங்கள் விநியோகித்தல் :-** 2024.09.12 முதல் 2024.10.02 பி.ப. 3.00 வரை தேசிய அடையாள அட்டை/ சாரதி அனுமதிப்பத்திரம்/ செல்லுபடியாகும் கடவுச்சீட்டு மற்றும் கிராம அதிகாரி சான்றிதழை சமர்ப்பித்து அம்பலந்தொட்ட பிரதேச சபை அலுவலகத்தில் பெற்றுக் கொள்ளலாம்.

**கேள்விப் பத்திரங்கள் ஏற்றுக் கொள்ளல்** :- 2024.10.07 மு.ப. 10.00 வரை
**கேள்வி பத்திரங்கள் திறத்தல்** :- 2024.10.07 மு.ப. 10.30
கேள்வி நிபந்தனைகள் :- கேள்விப் படிவங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது

கேள்விப் பத்திரங்கள் பதிவுத் தபாலில் அல்லது பிரதேச சபை அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் குறித்த தினம் அல்லது அதற்கு முன் அனுப்புதல் வேண்டும்.

மேலதிக விபரங்களுக்கு தொடர்பு கொள்ளுங்கள்: 047-2223275

2024.09.05
**அம்பலந்தொட்ட பிரதேச சபை அலுவலகத்தில்**

**செயலாளர்,**
**அம்பலந்தொட்ட**
**பிரதேச சபை.**

Looking for Your Life Partner..,
Gather with, SUNDAY OBSERVER
Marriage Proposals
Decades of Trusted Service
Pay online and save your precious time
WE ACCEPT
BANK OF CEYLON BOC Acc. No. 000000377 Corporate Branch
E-mail or WhatsApp - classified@lakehouse.lk / 077 7 270 067
077 7 278 948/ 011 2 429 347 | 011 2 429 383 | 011 2 429 342/ 343

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல்

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 01 | எம்பிலிபிட்டிய - மித்தெனிய வீதியில் (B486) ஹுலந்த ஓயா ஊடாக 4/4 ஆம் இலக்க பாலத்தினை மீள்கட்டுமானம் செய்தல் |

தேசிய மனு கோரல் போட்டி முறைக்கமைய மேற்குறிப்பிடப்பட்டுள்ள சேவையினை வழங்குவதற்கான விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2024.09.10 ஆம் திகதி முதல் 2024.09.30 ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையதளம் **www.rda.gov.lk** இனை பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

SELACINE

முன்மொழிவுகளுக்கான கோரிக்கை

Highland

## மில்கோ (பிறைவட்) லிமிடட்

(அரசுரிமை தொழில்முயற்சி)

MILCO

## உள்ளக கணக்காய்வு சேவைகளை வழங்குதல்

**கேள்வி இலக்கம்: M/PUR/TEN/2024/06**

மில்கோ (பிறைவட்) லிமிடட் 1987ஆம் ஆண்டின் 07ஆம் இலக்க கம்பனிகள் சட்டத்தின் கீழ் ஒன்றிணைக்கப்பட்ட அரசுரிமையான பொறுப்பு வரையறுக்கப்பட்ட கம்பனியாகும். 2024 செப்டெம்பர் 25ஆம் திகதி பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன் முழுமையான விபரங்கள் மற்றும் குறிப்புகளுடன் விண்ணப்பிக்குமாறு தகுதி வாய்ந்த கணக்காய்வு நிறுவனங்களிடமிருந்து அழைக்கப்படுகின்றன.

மேற்கூறிய முகவரிக்கு மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்திற்கான வைப்புத் துண்டுடன் எழுத்து மூலமான வேண்டுகோள் ஒன்றைச் சமர்ப்பிப்பதன் பேரில் 2024-09-24ஆம் திகதி வரையான சாதாரண வேலை நாட்களில் மு.ப. 9.00 மணி மற்றும் பி.ப. 4.00 மணிக்கிடையில் கொழும்பு-03, இல. 345, காலி வீதி, 05ஆம் மாடி, மில்கோ (பிறைவட்) லிமிடட்டின் கொள்வனவுப் பிரிவிலிருந்து RFP ஆவணங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணத்தை பின்வரும் வங்கி விபரங்களின் பிரகாரம் மக்கள் வங்கியின் எந்தவொரு கிளையிலும் ரொக்கப் பணமாக வைப்புச் செய்தல் வேண்டும்.

| | | |
|---|---|---|
| **வங்கிக் கணக்கின் பெயர்** | : | மில்கோ (பிறைவட்) லிமிடட் |
| **கணக்கிலக்கம்** | : | 004100180210331 |
| **வங்கி மற்றும் கிளை** | : | மக்கள் வங்கி கோப்பரேட் வங்கிப் பிரிவு |
| **காரணம்** | : | **M/PUR/TEN/2024/06** கேள்விக்கான மீளளிக்கப்படாத ஆவணக் கட்டணம் |

இந்த கேள்வி கோரல் பற்றிய மேலதிக தகவல், அல்லது முத்திரைக் குறி பொறிக்கப்பட்ட அறிவித்தல் பற்றிய தெளிவுபடுத்தல்கள் தேவைப்படின் மில்கோ (பிறைவட்) லிமிடட்டின் கொள்வனவு முகாமையாளரிடமிருந்து பெற்றுக்கொள்ளலாம். தொலைபேசி இலக்கம் 011-4500530-4.

**தலைவர் - கேள்விக்குழு**
**மில்கோ (பிறைவட்) லிமிடட்**
**ஐந்தாம் மாடி,**
**இல. 345, காலி வீதி, கொழும்பு-03.**

தென் மாகாண கல்வி அமைச்சு

## விலைமனு அழைத்தல்

### கணனிகள் மற்றும் துணை உறுப்புக்களைக் கொள்வனவு செய்தல்

சாதாரணக் கல்வியை நவீன மயமாக்கல் செயற்றிட்டத்தின் (GEMP) கீழ், மாகாணத்தின் வலயக் கல்வி அலுவலகங்கள் மற்றும் பாடசாலைகளுக்கு பெற்றுக் கொடுப்பதற்காக கீழ்க் குறிப்பிடப்படும் கணனிகள் மற்றும் ஏனைய உபகரணங்களைக் கொள்வனவு செய்து கொள்வதற்காக தென் மாகாண கல்வி அமைச்சின் பெறுகைக் குழுவின் தலைவரினால் தேசிய போட்டி ரீதியிலான பெறுகை முறைமையின் கீழ் தகைமையுள்ள வழங்குநர்களிடமிருந்து விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| தொ. இல | விபரம் | எண்ணிக்கை | மீளளிக்கப்படாத படிவக் கட்டணம் ரூபா | விலைமனுப் பிணைத் தொகை ரூபா |
|---|---|---|---|---|
| 01 | Desktop Computers & UPS | 280 | 12,500.00 | 700,000.00 |
| 02 | Tablet Computers | 30 | | |
| 03 | Mathematical Equipment Kits | 11 | 2,000.00 | 40,000.00 |

தொழில்நுட்ப விபரக் குறிப்புக்கள் மற்றும் ஏனைய விபரங்கள் விலைமனுப் படிவங்களில் உள்ளடக்கப்பட்டுள்ளன.

02. தேசிய போட்டி கேள்வி முறைமையின் அடிப்படையில் கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும். ஒப்பந்தங்கள் வழங்கும் போது தகைமை பெறும் சித்திகரமான கேள்விதாரர்கள் கீழே தரப்பட்டுள்ள தகைமைகளைப் பூர்த்தி செய்திருத்தல் வேண்டும்.
    - i. இலங்கைக்குள் பதிவு செய்த வியாபாரமாக இருத்தல் வேண்டும்.
    - ii. இலங்கைக்குள் சேவை வழங்கக் கூடிய உற்பத்தியாளர்கள் அல்லது வழங்குநர் ஒருவரால் கேள்விகளை சமர்ப்பித்தல் வேண்டும்.
    - iii. கணணி துணைப்பாகங்களை விநியோகித்தல் மற்றும் சேவை வழங்குதல் சம்பந்தமாக குறைந்த பட்சம் 05 வருட அனுபவம் இருத்தல் வேண்டும்.
    - iv. கேள்விதாரர் அபகீர்த்தியானோர் பட்டியல் படுத்தப்படாது இருத்தல் வேண்டும்.
    - v. முழுமையான பொறுப்புக் காலத்திற்குள் 48 மணித்தியாலத்திற்குள் தேவையான தொழில்நுட்ப உதவி மற்றும் சேவைகளை வழங்கக் கூடியதாக இருத்தல் வேண்டும்.

03. கேள்வி விண்ணப்பங்களை 2024.09.10 முதல் 2024.09.30 பி.ப. 3.00 வரை லபுதுவ, தக்ஷின பாய, தென் மாகாண கல்வி காணி மற்றும் காணி அபிவிருத்தி நெடுஞ்சாலைகள் மற்றும் தகவல் அமைச்சின் (தரைமாடியில்) பெற்றுக் கொள்ளலாம். இவ் அமைச்சின் 091 - 2030700/ 091 - 2030702 தொ.பே.இலக்கத்திற்கு வேலை நாட்களில் மட்டும் அழைத்து மேலதிக விபரங்களை பெற்றுக் கொள்ளலாம்.

04. கேள்வியுடன் சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பிணை இலங்கை வணிக வங்கியிலிருந்து தென் மாகாண கல்வி காணி மற்றும் காணி அபிவிருத்தி நெடுஞ்சாலைகள் மற்றும் தகவல் அமைச்சின் - செயலாளர் பெயரில் பெற்றுக் கொண்ட 2024.10.01 முதல் 2024.12.27 வரை செல்லுபடியாகுமாறு கேள்விப் பிணையொன்றை அல்லது தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி, நெடுஞ்சாலைகள் மற்றும் தகவல் அமைச்சின் கணக்குப் பிரிவிற்கு காசு செலுத்திய பின்னர் வழங்கப்படும் காசுப் பற்றுச் சீட்டின் பிரதியொன்றை கேள்விப் பத்திரத்துடன் சமர்ப்பித்தல் வேண்டும். காசோலை அல்லது வங்கிப் பிணைமுறியாக சமர்ப்பிக்கப்படும் கேள்விப் பிணைமுறி நிராகரிக்கப்படும்.

05. பொறியிடப்பட்ட விலைமனுக்கள் 2024.10.01 அன்று மு.ப. 10.00 இற்கு முன்னர் கிடைக்கக் கூடியவாறு செயலாளர், தென் மாகாண கல்வி அமைச்சு, தரைமாடி, தக்ஷினபாய அமைச்சு கட்டிடத் தொகுதி, "லபுதுவ" என்ற முகவரிக்குப் பதிவுத் தபாலில் அல்லது அன்றைய தினம் அதே நேரம் பிந்தாமல் இவ் அமைச்சின் கணக்குப் பிரிவில் வைக்கப்பட்டுள்ள பெறுகைப் பெட்டியிற் சேர்த்தல் வேண்டும். தாமதமாகக் கிடைக்கும் கேள்விகள் நிராகரிக்கப்படும்.

06. கேள்விகள் திறத்தல் 2024.10.01 மு.ப. 10.00 இற்கு தென் மாகாண கல்வியமைச்சின் பெறுகைக் குழுவின் தலைவரின் தலைமையில் அமைச்சில் இடம்பெறுவதுடன் அவ் வேளையில் கேள்விதாரர் அல்லது கேள்விதாரரின் அதிகாரம் பெற்ற ஒரு பிரதிநிதிக்கு சமுகமளிக்கலாம்.

07. குறித்த கேள்விகள் இரு பிரதிகளுடன் சமர்ப்பிக்கப்பட வேண்டியதுடன் அதன் மூலப் பிரதியில் "மூலப்பிரதி" என்றும் நகல்பிரதி "நகல்பிரதி" என்றும் குறிப்பிடுதல் வேண்டும்.

08. குறைபாடுகளுடனான கேள்விப் பத்திரங்கள் நிராகரிக்கப்படும். இப்பெறுகை பற்றிய பெறுகைக் குழுவின் தீர்மானம் இறுதித் தீர்மானமாகும் என்பதை கவனித்தல் வேண்டும்.

09. பெறுகைக்கு முன்னரான கூட்டம் 2024.09.18 மு.ப. 10.00 இற்கு இவ் அமைச்சு கேட்போர் கூடத்தில் நடத்துவதற்கு தீர்மானிக்கப்பட்டுள்ளதுடன் அதற்காக இது பற்றி ஆர்வம் காட்டுகின்ற தரப்பினர்களுக்கு இதற்காக சமுகமளிக்கலாம்.

**ரஞ்சித் யாப்பா,**
**பெறுகைக் குழுவின் தலைவர்,**
**தென் மாகாண கல்வி, காணி மற்றும் காணி அபிவிருத்தி,**
**நெடுஞ்சாலைகள் மற்றும் தகவல் அமைச்சு,**
**தக்ஷினபாய, லபுதுவ, காலி,**

## சிறு விளம்பரம்

மோட்டார் வாகனங்கள்

YT - 7488 BAJAJ 2011, HO - 5593, BAJAJ 2003, JO - 0707 B AJAJ 2 004 Threew heel அதியுயர் விலைக்கு வெலி பல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி கொழும்பு - 03 தொலைபேசி: 0711210810/ 0705999163 061807

122

மோட்டார் சைக்கிள், திரீவீலர்கள் விற்பனைக்கு

BIF - 5874 Yamaha Ray ZR 2019, Motor Cycle அதியுயர் விலைக்கு வெலிபல் பினான்ஸ் பிஎல்சி இல. 310, காலி வீதி கொழும்பு - 03 தொலைபேசி : 0711210810 061815

Repeat Your ad For Better Offers

Visit - www.adz.lk
SUNDAY OBSERVER
adz it's what you want

தினகரன் வாரமஞ்சரி
திருமண சேவைகள்
உங்கள் எதிர்கால கனவுகளை பூர்த்தி செய்வதற்கான சிறந்த வழி.
உங்கள் பணக்கொடுப்பனவை செலுத்துவதற்கான இலகுவான வழி.
முதல் 15 சொற்களுக்கு 600/- ரூபா
இலங்கை வங்கி கணக்கிலக்கம் (லேக்ஹவுஸ் கிளை) - 000000377
ஒன்லைன் மூலமாகவும் செலுத்தலாம்.
*ஒவ்வொரு மேலதிக சொல்லுக்கும் 25 ரூபா
*ஆகக்கூடிய சொற்களின் எண்ணிக்கை 65

புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகம்
சுற்றாடல் அமைச்சு

## களுத்துறை பிரதேச அலுவலகத்திற்கான கட்டிடமொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெறல்

புவிச்சரிதவியல் அளவை சுரங்கங்கள் பணியகத்தின் களுத்துறை பிரதேச அலுவலகத்திற்காக கட்டிடமொன்றை வாடகைக்கு அல்லது குத்தகைக்கு பெறுவதற்கு தேவைப்பட்டுள்ளது. அது பற்றிய மேலதிக விபரங்கள் www.gsmb.gov.lk என்ற இணையதளத்தில் பதிவிறக்கம் செய்து கொள்ளலாம்.

இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசு
போக்குவரத்து மற்றும் நெடுஞ்சாலைகள் அமைச்சு
வீதி அபிவிருத்தி அதிகாரசபை

## விலைமனுக்கோரல் (IFB)

| இல. | ஒப்பந்தத்தின் பெயர் |
|---|---|
| 01 | வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் பாலம் பராமரிப்பு மற்றும் கிராமிய பாலம் கட்டுமான பிரிவுக்கான அத்திடிய களஞ்சியசாலைக்கான பாதுகாப்பு சேவை.<br>**ஒப்பந்த இலக்கம்:** RDA/DPR/PRO/SE/NCB/BMRBC/2024/101 |

மேற்குறிப்பிடப்பட்ட சேவைக்காக தேசிய மனுக்கோரல் போட்டி முறையின் கீழ் விலைமனுக்கள் கோரப்படுகின்றன. ஆர்வமுள்ள மனுதாரர்கள் 2024.09.10 ஆம் திகதி முதல் 2024.10.01 ஆம் திகதி வரை வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் இணையத்தளத்தை **www.rda.gov.lk** பார்வையிடுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**தலைவர்,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் கொள்முதல் குழு,**
**வீதி அபிவிருத்தி அதிகாரசபை.**

SELACINE

## விலைமனுக்களுக்கான அழைத்தல்

நீர்ப்பாசன அமைச்சு

### நீர்ப்பாசன திணைக்களம் – மன்னார் பிராந்தியம்

1. கீழே குறிப்பிட்டுள்ள தகுதித்தன்மை தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்துள்ள தகுதியும் தகைமையுமுள்ள விலைமனுதாரர்களிடமிருந்து முருங்கன், சிலாவத்துறை மற்றும் வவுனியா ஆகிய நீர்ப்பாசன பொறியியலாளர்களின் பிரிவுகளிலுள்ள பின்வரும் வேலைகளுக்காக முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்களை பிராந்திய பெறுகைக் குழுவின் சார்பாக மன்னார் பிராந்திய நீர்ப்பாசன பணிப்பாளர் அழைக்கின்றார்.

| Item No | Description of Works | Eligibility Requirement (CIDA Grade & Category) | Period of Construction | Bid Security | Site Visit - Date,Time & Location | Engineer's Estimate in Million Rs. |
|---|---|---|---|---|---|---|
| 01 | Improvements to the regulator gates along the Sinnaudaippu Main Canal in Gaints tank scheme in Murunkan Division **DI/MN/MUN-NCB/2024/01** | C7 or C6 Irrigation & Drainage Canals | 2 Months | Rs. 130,000.00 | 19/09 /2024 At 09:00 hrs. Divisional Irrigation Engineer's Office Irrigation Department Murunkan. | 6.40 |
| 02 | Rehabilitation of 12th mile Main Canal from 6+450 to 8+900 in Gaints tank scheme in Murunkan Division **DI/MN/MUN-NCB/2024/02** | C7 or C6 Irrigation & Drainage Canals | 2 Months | Rs. 170,000.00 | | 8.48 |
| 03 | Improvements to Irrataikulam Main Canal from 0+000 to 0+025 & from 2+075 to 2+430 in Gaints tank scheme in Murunkan Division. **DI/MN/MUN-NCB/2024/03** | C7 or C6 Irrigation & Drainage Canals | 2 Months | Rs. 90,000.00 | | 5.02 |
| 04 | Improvements to Thandikulam Drainage Canal in Akathimurippu scheme in Silawaththurai Division. **DI/MN/SWT-NCB/2024/01** | C7 or C6 Irrigation & Drainage Canals | 2 Months | Rs. 125,000.00 | 19/09 /2024 At 09:00 hrs. Divisional Irrigation Engineer's Office Irrigation Department Veppankulam, Silawaththu-rai. | 6.03 |
| 05 | Construction of retaining wall at 11+095 and Improvements to existing hume pipe culvert at 18+879 in Akathimurippu inlet canal of Akathimurippu scheme in Silawaththurai Division. **DI/MN/SWT-NCB/2024/02** | C7 or C6 Irrigation & Drainage Canals | 2 Months | Rs. 145,000.00 | | 7.02 |
| 06 | Providing D/S &U/S protection to 04 bay Canal Spill (02Nos.) in Inlet Canal at 0+879 and 5+256 in Viyadikulam scheme in Silawaththurai Division. **DI/MN/SWT-NCB/2024/03** | C7 or C6 Irrigation & Drainage Canals | 2 Months | Rs. 115,000.00 | | 5.68 |
| 07 | Improvements to RB Main Canal at Pavatkulam scheme in Vavuniya Division. **DI/MN/VAV-NCB/2024/01** | C7 or C6 Irrigation & Drainage Canals | 2 Months | Rs.160,000.00 | 19/09 /2024 At 09:00 hrs. Divisional Irrigation Engineer's Office Irrigation Department Kandy road, Vavuniya. | 7.97 |
| 08 | Improvements to LB Main canal at Pavatkulam scheme in Vavuniya division. **DI/MN/VAV-NCB/2024/02** | C7 or C6 Irrigation & Drainage Canals | 2 Months | Rs.140,000.00 | | 6.84 |

2. ஒப்பந்தத்தை கையளிப்பதற்கான தகுதிக்காக, எதிர்பார்க்கும் விலைமனுதாரர்கள் தகுதி நீக்கம் செய்யப்பட்டவர்களின் பட்டியலில் சேர்க்கப்பட்டவர்களாகவும் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டவாறான CIDA பதிவுத் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்திருத்தலும் வேண்டும்.
3. தகைமைத் தேவைப்படுத்தல்கள்:
    - அ. நீர்ப்பாசனம் மற்றும் தரை வடிகாலமைப்பு வேலைகளில் விஷேட அனுபவம்.
    - ஆ. தேவைப்படும் தொழில்சார் தகைமையுள்ள பணியாளர் குழாம்.
4. மேலேயுள்ள அட்டவணையில் உத்தேசிக்கப்பட்டவாறு விலைமனுக்கோரல் ஆவணத்தில் குறிப்பிட்டவாறு கட்டுப்பாடுகளுக்கு உட்பட்டதாகவும் CIDA பதிவின் தேவைப்படுத்தல்களை பூர்த்தி செய்வதற்குமான விருப்பத்துடன் செயலாற்றும் அனைத்து தகுதியுள்ள விலைமனுதாரர்களும் இந்த விலைமனுவில் பங்குபற்றலாம். மேலும் ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை முருங்கன் மன்னார் வீதி, நீர்ப்பாசன திணைக்களம், நீர்ப்பாசன பணிப்பாளரிடமிருந்து பெற்று வேலை நாட்களில் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் அலுவலக நேரங்களில் அதே முகவரியில் விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சிக்கலாம். (தொலைபேசி: 023-2050351)
5. 2024.09.10 ஆம் திகதியிலிருந்து 2024.10.01 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணியிலிருந்து பி.ப. 3 மணி வரையும் மீளளிக்கப்படாத கட்டணமான 3,000 ரூபாவை ஒவ்வொரு ஆவணத்திற்கும் செலுத்திய பின்னர் முருங்கன், மன்னார் பிராந்தியம், நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலகம், நீர்ப்பாசன பணிப்பாளருக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கிலத்திலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்று ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யலாம். அலுவலகம், கணக்கிடல் பிரிவில் ரொக்கப் பணத்தில் செலுத்தப்படல் வேண்டும்.
6. **2024.09.19** ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு முருங்கன், மன்னார் பிராந்தியம், நீர்ப்பாசனப் பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனு முன்னோடிக் கூட்டம் நடைபெறும். சமுகமளித்தல் கட்டாயமானதல்ல ஆனால் ஆர்வமுள்ள விலைமனுதாரர் சமுகமளிப்பதற்கு ஊக்கமளிக்கப்படுகின்றனர். விலைமனுதாரர் மேலேயுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு விலைமனுக்கூட்டத்திற்கு முன்னராக அவர்களின் சொந்த தள விஜயத்திற்கான வருகையை மேற்கொள்ளல் வேண்டும்.
7. 2024.10.02 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு பிந்தாமல் கீழே வழங்கப்பட்டுள்ள முகவரியில் விலைமனுக்கள் ஒப்படைக்கப்படல் வேண்டும். முருங்கன், மன்னார் பிராந்தியம், நீர்ப்பாசன பணிப்பாளரின் அலுவலகத்தில் விலைமனுக்கள் அவைகளை மூடிய பின்னர் உடனடியாகவே திறக்கப்படும். விலைமனுதாரர் அல்லது சட்டபூர்வமாக அதிகாரம் பெற்ற விலைமனுதாரரின் பிரதிநிதிகள் விலைமனுக்களை திறக்கும் வேளையில் சமுகமளிப்பதற்கு அனுமதிக்கப்படுவர். இலத்திரனியல் மூலமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாது என தயவு செய்து கவனிக்கவும்.
8. எந்தவொரு சூழ்நிலையிலும் தாமதமான விலைமனுக்கள் ஏற்றுக் கொள்ளப்பட மாட்டாதென்பதையும் அவைகள் விலைமனுதாரரின் எழுத்து மூலமான விண்ணப்பத்தின் பேரிலும் அவரது ஆகுசெலவிலும் திருப்பி அனுப்பப்படுமென்பதையும் விலைமனுதாரர்கள் அறிந்து கொள்ளவும். மேலேயுள்ள அட்டவணையில் கூறப்பட்டவாறு அனைத்து விலைமனுக்களும் கேள்விப் பிணையொன்றுடன் இணைக்கப்பட்டிருத்தல் வேண்டும்.
9. நீர்ப்பாசன திணைக்கள பிராந்திய பெறுகைக் குழுவின் தீர்மானமே இறுதியும் முடிவானதாகும். நீர்ப்பாசன திணைக்கள பெறுகைக் குழுவானது தனியொரு, எந்தவொரு அல்லது அனைத்து விலைமனுக்களையும் நிராகரிப்பதற்கான அதிகாரத்தை அதனது சுயவிருப்பத்தில் கொண்டுள்ளது.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகம்,**
**மன்னார் பிராந்தியம்,**
**முருங்கன்.**

**திகதி: 10.09.2024**

www.adz.lk
it's what you want

# பெறுகை (கேள்வி) அறிவித்தல் — 2025

## நாத்தாண்டிய பிரதேச சபை

1. நாத்தாண்டி பிரதேச சபையிடம் உள்ள கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டிருக்கும் வாரச் சந்தை, இறைச்சிக் கடை, மீன் கடை, வாகன தரிப்பிடம் மற்றும் பொதுக் காணிகளில் தெங்கு அறுவடை 2025.01.01 ஆம் திகதி தொடக்கம் 2025.12.31 ஆம் திகதி வரையான காலத்திற்கு குத்தகைக்கு விட என்னால் விலைமனுக்கள் கோரப்படுகின்றன.
2. அந்த ஆதனங்களை பெறுவதற்காக மீளளிக்கப்படும் விலைமனு பிணை வைப்புத் தொகை மற்றும் மீளளிக்கப்படாத கேள்விமனு விண்ணப்பப் படிவத்தை செலுத்திய பின், விலைமனு விண்ணப்பங்கள் மற்றும் கேள்விமனு நிபந்தனைகளை 2024.09.10 ஆம் திகதி தொடக்கம் 2024.10.02 ஆம் திகதி வரை மு.ப. 09.00 தொடக்கம் பி.ப. 03.00 வரை அரச வேலை நாட்களில் நாத்தாண்டிய பிரதேச சபை பிரதான அலுவலகத்தில் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.
3. 2024.10.03 ஆம் திகதி மு.ப. 09.30 வரை விலைமனு விண்ணப்பங்கள் ஏற்கப்படுவதோடு அன்றைய தினத்திலேயே மு.ப. 10.00க்கு விலைமனுக்கள் திறப்பது நாத்தாண்டி பிரதேச சபை தலைமை அலுவலகத்தில் மேற்கொள்ளப்படும். அந்த சந்தர்ப்பத்திற்கு விலைமனுதாரர்களுக்கு அல்லது அவர்தம் பிரதிநிதிகளுக்கு பங்கேற்க முடியும்.
4. விலைமனு விண்ணப்பங்களை "செயலாளர், பிரதேச சபை நாத்தாண்டி" என்ற முகவரிக்கு விலைமனுக்கள் ஏற்கும் இறுதி நேரத்திற்கு முன் கிடைக்குமாறு பதிவுத் தபாலில் அனுப்புவதற்கு அல்லது கொண்டுவந்து ஒப்படைப்பதற்கு முடியும்.
5. விலைமனு விண்ணப்பங்களை சமர்ப்பிக்கும்போது கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் 2025 ஆம் ஆண்டுக்கு விலைமனுக்கள் சமர்ப்பித்தல் என்றும் விண்ணப்பிக்கும் ஆதனத்தின் பெயரையும் குறிப்பிடுதல் வேண்டும். ஒவ்வொரு ஆதனத்தையும் குத்தகைக்கு பெறுவதற்காக வெவ்வேறாக விலைமனு விண்ணப்பங்களை சமர்ப்பித்தல் வேண்டும்.
6. அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெற்றுள்ள குத்தகைதாரர்களுக்கு அல்லது அவர்தம் பிரதிநிதிகளுக்கு விலைமனு விண்ணப்பம் வழங்கப்படமாட்டாது. மேலும் எந்த ஒரு விலைமனுவையும் ஏற்பது அல்லது நிராகரிக்கும் உரிமை நாத்தாண்டிய பிரதேச சபை கேள்விமனு குழு வசமானது.
7. குறைந்தபட்ச விலைமனுவுக்கு குறைவாக சமர்ப்பிக்கும் விலைமனு விண்ணப்பங்கள் நிராகரிக்கப்படுவதோடு, அவர்களின் மற்றும் விண்ணப்பப் படிவத்தை பெற்று விலைமனுவை சமர்ப்பிக்காத நபர்களின் பிணைத் தொகை சபைக்கு உரித்தாக்கப்படும்.
8. மேலதிக விபரங்களை அலுவலக நேரங்களில் நாத்தாண்டிய பிரதேச சபை செயலாளரிடம் இருந்து பெற்றுக்கொள்ள முடியும்.

**செயலாளர்,**
**பிரதேச சபை நாத்தாண்டி.**

**2024.09.06 அன்று,**
**பிரதேச சபை அலுவலகம்,**
**நாத்தாண்டி**
**தொலைபேசி இலக்கம்: 0322254276**
**மின்னஞ்சல்: naththandiyaps@yahoo.com**
**தொலைநகல்: 032-2254275**

## 2025 ஆண்டின் கேள்வி அடிப்படையில் குத்தகை வழங்குவதற்கு எதிர்ப்பார்க்கும் ஆதனங்கள் பட்டியல்
### (2025 ஆம் ஆண்டில் குறைந்தபட்ச விலைமனு, விலைமனு விண்ணப்பக் கட்டணம், விலைமனு பிணை வைப்புடன்)

அட்டவணை

**01. இறைச்சிக் கடை**

| வரிசை இலக்கம் | ஆதனம் | 2025 ஆம் ஆண்டின் குறைந்தபட்ச விலைமனு பெறுமதி (ரூபா) | விலைமனு விண்ணப்பக் கட்டணம் (ரூபா) | விலைமனு பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | கொட்ராமுல்ல கோழியிறைச்சிக் கடை | 331,200.00 | 2,000.00 | 26,440.00 |
| 2 | மாரவில பொதுச் சந்தை மாடு, பன்றி மற்றும் ஆட்டிறைச்சிக் கடை | 457,000.00 | 2,000.00 | 36,500.00 |
| 3 | தெமட்டபிட்டிய சந்தி மாடு, பன்றி மற்றும் ஆட்டிறைச்சிக் கடை | 170,000.00 | 2,000.00 | 13,600.00 |
| 4 | கட்டுநேரிய தேவாலய சந்தி மாடு மற்றும் ஆட்டிறைச்சிக் கடை | 300,010.00 | 2,000.00 | 24,000.00 |
| 5 | கட்டுநேரிய தேவாலய சந்தி பன்றி இறைச்சிக் கடை | 88,600.00 | 1,500.00 | 8,850.00 |
| 6 | மஹவெவ நகரத்தின் கோழியிறைச்சிக் கடை | 25,000.00 | 750.00 | 1,980.00 |
| 7 | ஹால்பன்வில பொது சந்தையின் பன்றி மற்றும் ஆட்டிறைச்சிக் கடை | 300,000.00 | 2,000.00 | 24,000.00 |
| 8 | கொட்ராமுல்ல மாடு மற்றும் ஆட்டிறைச்சிக் கடை | 1,035,000.00 | 2,000.00 | 34,900.00 |
| 9 | நாத்தாண்டிய நகர கோழி இறைச்சிக் கடை | 117,000.00 | 2,000.00 | 9,245.00 |
| 10 | மஹவெவ மாடு மற்றும் ஆட்டிறைச்சிக் கடை | 57,200.00 | 1,500.00 | 5,720.00 |
| 11 | ஹால்பன்வில பொது சந்தை மாட்டிறைச்சிக் கடை | 71,500.00 | 1,500.00 | 7,150.00 |
| 12 | மஹவெவ பன்றி இறைச்சிக் கடை | 104,600.00 | 2,000.00 | 8,360.00 |
| 13 | நாத்தாண்டிய நகரின் பன்றி இறைச்சிக் கடை | 486,420.00 | 2,000.00 | 38,915.00 |

**02. மீன் கடை**

| வரிசை இலக்கம் | ஆதனம் | 2025 ஆம் ஆண்டின் குறைந்தபட்ச விலைமனு பெறுமதி (ரூபா) | விலைமனு விண்ணப்பக் கட்டணம் (ரூபா) | விலைமனு பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | நாத்தாண்டிய நகரின் இலக்கம் 01 மீன் கடை | 36,000.00 | 750.00 | 3,300.00 |
| 2 | மஹவெவ நகரின் இலக்கம் 01 மீன் கடை | 14,850.00 | 750.00 | 1,485.00 |
| 3 | மஹவெவ நகரின் இலக்கம் 02 மீன் கடை | 14,850.00 | 750.00 | 1,485.00 |
| 4 | மஹவெவ நகரின் இலக்கம் 03 மீன் கடை | 14,850.00 | 750.00 | 1,485.00 |
| 5 | மஹவெவ நகரின் இலக்கம் 04 மீன் கடை | 14,850.00 | 750.00 | 1,485.00 |
| 6 | தெமட்டபிட்டிய சந்தை தொகுதியின் மீன் கடை | 35,750.00 | 1,000.00 | 3,575.00 |
| 7 | கொட்ராமுல்ல பொது சந்தை மீன் கடை | 10,000.00 | 750.00 | 1,000.00 |

**03. வாரச் சந்தை**

| வரிசை இலக்கம் | ஆதனம் | 2025 ஆம் ஆண்டின் குறைந்தபட்ச விலைமனு பெறுமதி (ரூபா) | விலைமனு விண்ணப்பக் கட்டணம் (ரூபா) | விலைமனு பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | மஹவெவ வாரச் சந்தை மற்றும் வாகனத் தரிப்பிடம் | 1,400,133.33 | 2,500.00 | 70,000.00 |
| 2 | நாத்தாண்டியய ஞாயிறு வாரச் சந்தை | 5,401,500.00 | 2,500.00 | 216,000.00 |
| 3 | ஹால்பன்வில வியாழக்கிழமை வாரச் சந்தை மற்றும் வாகனத் தரிப்பிடம் | 201,000.00 | 2,500.00 | 15,600.00 |
| 4 | மாரவில வாரச் சந்தை | 3,780,000.00 | 2,500.00 | 151,200.00 |

**04. சிற்றுண்டிச்சாலை**

| வரிசை இலக்கம் | ஆதனம் | 2025ஆம் ஆண்டின் குறைந்தபட்ச விலைமனு பெறுமதி (ரூபா) | விலைமனு விண்ணப்பக் கட்டணம் (ரூபா) | விலைமனு பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | தப்போவ சிறுவர் பூங்காவின் சிற்றுண்டிச்சாலை | 170,000.00 | 2,000.00 | 10,400.00 |
| 2 | பாரு எல அருகாமை சிற்றுண்டிச்சாலை | 580,800.00 | 2,000.00 | 46,465.00 |

**05. வாகனத் தரிப்பிடம்**

| வரிசை இலக்கம் | ஆதனம் | 2025 ஆண்டின் குறைந்தபட்ச விலைமனு பெறுமதி (ரூபா) | விலைமனு விண்ணப்பக் கட்டணம் (ரூபா) | விலைமனு பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | நாத்தாண்டிய ஞாயிறு வார சந்தை அன்று இலகு மற்றும் கனரக வாகன தரிப்பிடம் | 260,500.00 | 2,000.00 | 20,840.00 |
| 2 | நாத்தாண்டிய ஞாயிறு வார சந்தை அன்று சைக்கிள் மற்றும் மோட்டார் சைக்கிள் வாகனத் தரிப்பிடம் | 101,000.00 | 2,000.00 | 8,040.00 |

**06. பொதுக் காணிகளில் தெங்கு அறுவடை**

| வரிசை இலக்கம் | ஆதனம் | 2025 ஆம் ஆண்டின் குறைந்தபட்ச விலைமனு பெறுமதி (ரூபா) | விலைமனு விண்ணப்பக் கட்டணம் (ரூபா) | விலைமனு பிணை வைப்பு (ரூபா) |
|---|---|---|---|---|
| 1 | துன்கன்னாவ மதுராவலவத்த (I தோட்டம்) பொது காணி 01 (தென்னை மரம் 01) | 1,250.00 | 500.00 | 125.00 |
| 2 | துன்கன்னாவ மதுராவலவத்த (I தோட்டம்) பொது காணி 02 (தென்னை மரம் 02) | 2,050.00 | 500.00 | 205.00 |
| 3 | சுமனகுசும்கம நூலகக் காணி | 1,500.00 | 500.00 | 150.00 |
| 4 | கல்லமுன மையவாடி காணி | 18,900.00 | 750.00 | 1,890.00 |
| 5 | பிச்சவட்டானவல மையவாடி காணி | 12,500.00 | 500.00 | 1,250.00 |
| 6 | துன்கன்னாவல டன்கன் சிட்டி கட்டம் II | 4,750.00 | 500.00 | 475.00 |
| 7 | தம்மிக்ககம ரோயல் கார்டன் காணி | 4,650.00 | 500.00 | 465.00 |
| 8 | மாவில சந்தசெவனவத்த பொதுக் காணி | 18,750.00 | 750.00 | 1,875.00 |
| 9 | பிளாகட்டுமுல்ல வலஹாபிட்டிய எஸ்டேட் பொதுக் காணி | 10,500.00 | 500.00 | 1,050.00 |
| 10 | மேற்கு வீரஹேன ஆசிறி உயன பொதுக் காணி | 7,200.00 | 500.00 | 720.00 |
| 11 | மே/ வீரஹேன கம மெத வீதி ஹன்ச லாண்ட் பொதுக் காணி | 5,200.00 | 500.00 | 520.00 |
| 12 | முதுகட்டுவ போவத்த பொதுக் காணி | 26,500.00 | 1,000.00 | 2,650.00 |
| 13 | லன்சிகம பொன்சேகா வத்த பொதுக் காணி | 15,500.00 | 750.00 | 1,550.00 |
| 14 | தல்வில சந்தி பொதுக் காணி | 43,500.00 | 1,000.00 | 4,350.00 |
| 15 | வீரஹேன கொக்வலமுல்ல பொதுக் காணி | 51,000.00 | 1,500.00 | 5,100.00 |
| 16 | மஹவெவ மாளிகாவத்த பெலஸ் கிரோ பொதுக் காணி | 60,050.00 | 1,500.00 | 6,005.00 |
| 17 | துன்கன்னாவ சம்பத்வத்த பொதுக் காணி | 3,300.00 | 500.00 | 330.00 |
| 18 | கீனகெலே மிலேனியம் பார்க் பொதுக் காணி | 9,000.00 | 500.00 | 900.00 |
| 19 | முதுகட்டுவ யாயவத்த (ரோமன் பார்க்) துண்டு 02 கட்டம் 1 | 27,825.00 | 1,000.00 | 2,226.00 |
| 20 | முதுகட்டுவ யாயவத்த (ரோமன் பார்க்) துண்டு 02 கட்டம் 2 | 30,450.00 | 1,500.00 | 2,436.00 |
| 21 | முதுகட்டுவ ரோமன் பார்க் காணி | 19,950.00 | 750.00 | 1,596.00 |
| 22 | தம்புவ வத்த சிங்ஹபுர வத்த பொதுக் காணி | 6,400.00 | 500.00 | 640.00 |
| 23 | தப்போவ மஹவத்த லிலீ பார்க் பொதுக் காணி | 4,500.00 | 500.00 | 400.00 |
| 24 | முதுகட்டுவ நடை பாதை காணி | 9,020.00 | 500.00 | 902.00 |
| 25 | மாரவில பண்டிதசேகர மாவத்தை தி பினான்ஸ் பொதுக் காணி | 8,167.50 | 500.00 | 8016.75 |
| 26 | துன்கன்னாவ சம்பத்வத்த விளையாட்டு மைதான காணி | 3,000.00 | 500.00 | 300.00 |
| 27 | துன்கன்னாவ I வத்த முதல் கட்டம் 01 பொதுக் காணி | 3,700.00 | 500.00 | 370.00 |
| 28 | துன்கன்னாவ சமகி வத்த (H வத்த) பொதுக் காணி | 3,600.00 | 500.00 | 360.00 |
| 29 | லெச்சம்வத்த பொதுக் காணி | 2,000.00 | 500.00 | 200.00 |
| 30 | தப்போவ மஹவத்த பொதுக் காணி | 4,000.00 | 500.00 | 400.00 |
| 31 | தப்போவ மஹவத்த பொதுக் காணி (08 தென்னை மரம் ) | 8,000.00 | 500.00 | 800.00 |
| 32 | லெச்சம்வத்த கெகுலாவாடிய பொதுக் காணி | 9,000.00 | 500.00 | 900.00 |
| 33 | புஞ்சிபாலம விளையாட்டு மைதான காணி (01 தென்னை மரம்) | 1,000.00 | 500.00 | 100.00 |
| 34 | கொரககஹவத்த மொரகேலே பொதுக் காணி | 4,000.00 | 500.00 | 400.00 |
| 35 | மாவில லக்கிஹோம் பொதுக் காணி | 1,000.00 | 500.00 | 100.00 |
| 36 | மாவில இத்தாலியன் கேட் பொதுக் காணி | 1,000.00 | 500.00 | 100.00 |
| 37 | லன்சிகம கட்டுனேரிய அடப்பரவத்த காணி | 26,100.00 | 1,000.00 | 2,610.00 |
| 38 | வீரஹேன ஆசிரி உயன II ஒழுங்கை பிரஜா மண்டப காணி | 14,400.00 | 500.00 | 1,440.00 |
| 39 | முதுகட்டுவ ரோமன் பார்க் பிரஜா மண்டப பொதுக் காணி | 9,500.00 | 500.00 | 950.00 |
| 40 | முதுகட்டுவ கீனகெலே வத்த கட்டம் 6 | 7,000.00 | 500.00 | 700.00 |
| 41 | தப்போவ பிரதேச சபை களஞ்சியக் காணி | 7,700.00 | 500.00 | 770.00 |
| 42 | பனங்கொட ஹெவன ஸ்டேட் பொதுக் காணி | 6,250.00 | 500.00 | 600.00 |
| 43 | தலைமை அலுவலகத்தின் தம்பிலி அறுவடை | 2,200.00 | 500.00 | 220.00 |
| 44 | குருலு உயன லேக்சிட்டி பிரஜா மண்டப காணி | 25,600.00 | 1,000.00 | 2,560.00 |
| 45 | கட்டுனேரிய ஒனெல்டா வத்த பொதுக் காணி | 45,200.00 | 1,500.00 | 4,520.00 |
| 46 | குடாவெவ மோல வத்த பொதுக் காணி | 15,600.00 | 1,000.00 | 1,560.00 |
| 47 | முதுகட்டுவ போவத்த பொதுக் காணி (எட்லக் நிறுவனம்) | 3,900.00 | 500.00 | 390.00 |
| 48 | கீனகெலே லொட் 5/c பொதுக் காணி | 28,700.00 | 1,500.00 | 2,870.00 |
| 49 | லன்சிகம அடப்பர வத்த B (புளு மவுன்டன்) பொதுக் காணி | 5,000.00 | 1,000.00 | 500.00 |
| 50 | கீனகெலே மாவிலக் காணி (சமகி தேபல) பொதுக் காணி | 18,200.00 | 1,000.00 | 1,820.00 |
| 51 | முதுக்கட்டுவ கீனகெலே வத்த 2 ஆம் கட்ட பொதுக் காணி | 29,040.00 | 1,500.00 | 2,900.00 |
| 52 | துன்கன்னாவ டன்கன்சிட்டி 3 ஆம் கட்ட பொதுக் காணி | 49,610.00 | 1,500.00 | 4,960.00 |
| 53 | துன்கன்னாவ டன்கன்சிட்டி 4 ஆம் கட்ட பொதுக் காணி | 15,730.00 | 1,000.00 | 1,575.00 |
| 54 | மாரவில சுஹந்த மாவத்தை நின்பாவில பொதுக் காணி | 9,665.00 | 500.00 | 966.00 |
| 55 | திப்போவ கந்தெட்டிய வத்த பொதுக் காணி | 26,136.00 | 1,000.00 | 2,615.00 |
| 56 | துன்கன்னாவ I வத்த முதல் கட்டம் 02 பொதுக் காணி | 4,416.00 | 500.00 | 450.00 |
| 57 | இ/ கொட்ராமுல்ல பாத்திமா வத்த பொதுக் காணி | 7,200.00 | 750.00 | 580.00 |
| 58 | கொஸ்வத்த தெற்கு கஹட்டகஹா வத்த கஜு கஹவத்த பொதுக் காணி | 4,800.00 | 750.00 | 400.00 |
| 59 | லேச்சுமி வத்த தம்புவ முகலான பொதுக் காணி 1 | 11,330.00 | 1,000.00 | 1,135.00 |
| 60 | லேச்சுமி வத்த தம்புவ முகலான பொதுக் காணி 2 | 2,530.00 | 250.00 | 253.00 |

**செயலாளர்,**
**பிரதேச சபை நாத்தாண்டிய**

# சுற்றுலா தளங்களை அபிவிருத்தி செய்ய திட்டம்

*(மாத்தளை சுழற்சி நிருபர்)*

மத்திய மாகாணத்தில் காணப்படும் சுற்றுலா தளங்களை அபிவிருத்தி செய்து மேம்படுத்துவதற்கான வேலைத்திட்டமொன்று மத்திய மாகாண வர்த்தக வாணிப சுற்றுலாத்துறை திணைக்களத்தினால் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இந்நாட்டிற்கு வரும் சுற்றுலா பயணிகளின் எண்ணிக்கையை எதிர்வரும் 2030 ஆம் ஆண்டளவில் 5 மில்லியன் வரை அதிகரிப்பதற்கான அரசினால் முன்னெடுக்கப்படும் திட்டத்திற்கமைய இவ் வேலைத்திட்டம் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

இதற்கமைய, மத்திய மாகாணத்தின் மாத்தளை, கண்டி, நுவரெலியா ஆகிய மாவட்டங்களில் காணப்படும் சுற்றுலா தலங்கள் மற்றும் சுற்றுலாப் பயணிகளை கவரும் பிரதேசங்களை இனங்கண்டு அபிவிருத்தி செய்யப்படவுள்ளன.

இவ் வேலைத்திட்டம் மத்திய மாகாண ஆளுநர் லலித் யூ கமகேயின் வழிகாட்டலுக்கு அமைய இதற்காக கமிட்டியொன்று நியமிக்கப்பட்டு இத் திட்டம் மேற்கொள்ளப்படவுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

# மக்களின் கஷ்டங்களை அறிந்த ஒரே தலைவர் சஜித் பிரேமதாச

பாராளுமன்ற உறுப்பினர் பழனி திகாம்பரம்

*(பொகவந்தலாவ நிருபர்)*



நாட்டு மக்களின் கஷ்டங்களை அறிந்த ஒரே தலைவர் சஜித் பிரேமதாச என தமிழ் முற்போக்கு கூட்டணியின் பிரதித் தலைவரும் நுவரெலியா மாவட்ட பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம் தெரிவித்தார்.

தலவாக்கலையில் இடம் பெற்ற தேர்தல் பிரசார கூட்டத்தில் கலந்து கொண்டு மக்கள் மத்தியில் உரையாற்றும் போதே அவர் இதனைத் தெரிவித்தார். தொடர்ந்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், நல்லாட்சி அரசாங்கத்தில் நாங்கள் பாரிய அபிவிருத்தித் திட்டங்களை முன்னெடுத்தோம். நாங்கள் ஐந்து வருடங்களாக எதிர்க் கட்சியினை பிரதிநிதித்துவம் செய்து வருகிறோம்.

இன்னும் பத்து நாட்களில் அடுத்த ஜனாதிபதியாக சஜித் பிரேமதாச வரவுள்ளார்.

இந்திய அரசாங்கம் தற்போதுள்ள அரசாங்கத்திற்கு பத்தாயிரம் வீடமைப்புத் திட்டங்களை வழங்கிய போதும், அதில் ஒரு வீட்டைக்கூட கட்டவில்லை. ஆனால் எங்களது அரசாங்கத்தின் ஊடாக வழங்கப்பட்ட பத்தாயிரம் வீடமைப்பு திட்டத்தை மூன்று வருடங்களில் அமைத்து, மக்கள் பாவனைக்கு கையளிப்போம். இதற்கான அனுபவம் என்னிடம் மாத்திரமே உள்ளது என்றார்.

# நுரைச்சோலை தே. பாடசாலை இரு மாணவிகள் சாதனை



*(புத்தளம் தினகரன் நிருபர்)*

யாழ். சிதம்பரக் கல்லூரியால் ஏற்பாடு செய்யப்பட்ட கணிதப் போட்டியில் கலந்து கொண்ட நுரைச்சோலை தேசிய பாடசாலை மாணவிகளான ஆர். றஸா மனால் மற்றும் எம். ஹம்தா மனால் ஆகிய மாணவிகள் மூன்றாம் இடங்களை பெற்றுள்ளனர்.

அண்மையில் யாழ் சிதம்பரக் கல்லூரியில் நடைபெற்ற பரிசளிப்பு விழாவில் இம்மாணவிகள் இருவரும் வெண்கலப் பதக்கம் அணிவித்து கௌரவிக்கப்பட்டனர்.

பாடசாலைக்கு பெருமை சேர்த்த இவ்விரு மாணவிகளும் பாடசாலையில் அண்மையில் (6) நடைபெற்ற நிகழ்வொன்றின்போது பாடசாலை அதிபர் எம்.ஐ.எம். இம்ரான்கான் மற்றும் கணிதப் பிரிவிற்கு பொறுப்பான ஆசிரியர்களினால் சான்றிதழ்கள் வழங்கி கௌரவிக்கப்பட்டனர்.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழக மொழிபெயர்ப்பு கற்கைகள் துறை மாணவி எம்.எம். பி. நதா எழுதிய "இலங்கையின் வீட்டுத் தோட்டங்களும் வீட்டு உணவு உற்பத்தியும்" என்ற நூலின் மொழிபெயர்ப்பு விழா அண்மையில் நடைபெற்றது. இதன்போது, யாழ்ப்பாண பல்கலைக்கழக துணைவேந்தர் பேராசிரியர் எஸ். ஸ்ரீ சற்குணராஜா நூலாசிரியரின் தந்தையான சீ.எம்.எம். மன்சூருக்கு நூலின் பிரதியை வழங்கி வைப்பதை படத்தில் காணலாம்.

இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## ரூ.290,000 மில்லியன் திறைசேரி முறிகளை வழங்கல்

10.75%2028 'B' தொடர்களின் கீழ் ரூ. 100,000 மில்லியனையும் 11.75%2029 ‘A’ தொடர்களின் கீழ் ரூ. 150,000 மில்லியனையும் 10.25%2034 ‘A’ தொடர்களின் கீழ் ரூ. 40,000 மில்லியனையும் கொண்ட திறைசேரி முறிகள் 2024 செப்டெம்பர் 12 ஆம் திகதி இடம்பெறும் ஏலங்களின் அடிப்படையில் வழங்கப்படவுள்ளன.

**இத்திறைசேரி முறிகளின் விபரங்கள் கீழே தரப்படுகின்றன.**

| தொடர்கள் | 10.75%2028 'B' | 11.75%2029 ‘A’ | 10.25%2034 ‘A’ |
|---|---|---|---|
| ISIN* | LKB00428B156 | LKB00529F152 | LKB01534I155 |
| முன்வைக்கப்பட்ட தொகை | ரூ.100,000 மில்லியன | ரூ.150,000 மில்லியன் | ரூ.40,000 மில்லியன் |
| நறுக்கு வீதம் | 10.75% ஆண்டொன்றிற்கு | 11.75% ஆண்டொன்றிற்கு | 10.25% ஆண்டொன்றிற்கு |
| வழங்கப்பட்ட திகதி | 2024 பெப்ரவரி 15 | 2024 ஜூன் 15 | 2029 செப்டெம்பர் 15 |
| முதிர்வுத்திகதி | 2024 பெப்ரவரி 15 | 2029 ஜூன் 15 | 2034 செப்டெம்பர் 15 |
| நறுக்கு கொடுப்பனவுகள் செலுத்தப்படும் திகதிகள் | 15 பெப்ரவரி & 15 ஓகஸ்ட் | 15 யூன் & 15 டிசெம்பர் | 15 மார்ச் & 15 செப்டெம்பர் |
| ஒன்று சேர்ந்த வட்டி வீதம் | ரூ.100 இற்கு ரூ. 0.9932 | ரூ. 100.00 இற்கு ரூ. 3.0499 | ரூ. 100 இற்கு ரூ. 0.0849 |
| ஏலவிற்பனைத் திகதி | 2024 செப்டெம்பர் 12, வியாழக்கிழமை | | |
| விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கப்படுவதற்கான இறுதித் திகதியும் நேரமும் | 2024 செப்டெம்பர் 12, வியாழக்கிழமை, மு.ப.11.00 மணி | | |
| தீர்ப்பனவுத் திகதி | 2024 செப்டெம்பர் 18 | | |
| விலைக்குறிப்பீட்டின் ஆகக் குறைந்த தொகை | ஐந்து மில்லியன் ரூபாய்கள் (ரூ. 5,000,000/-) அத்துடன் ஒரு மில்லியன் ரூபாய்களின் (ரூ. 1,000,000/-) பெருக்கங்களிலிருந்து | | |

முதனிலை வணிகர்களிடமிருந்து உண்மையான விலைகளின் (இறுதி நறுக்குக் கொடுப்பனவுத் திகதியிலிருந்து தீர்ப்பனவு செய்யும் நாள் வரையான ஒன்றுசேர்ந்த வட்டி நீங்கலாக) அடிப்படையில் விலைக்குறிப்பீடுகள் கோரப்படுகின்றன. விலைக்குறிப்பீடுகள் இலங்கை மத்திய வங்கியால் வழங்கப்பட்ட இலத்திரனியல் விலைக்குறிப்பீடு சமர்ப்பிக்கின்ற வசதியினூடாக மாத்திரமே மேற்கொள்ளப்படல் வேண்டும். முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் (பொதுமக்கள் அல்லது எவரேனும் வேறு முதலீட்டாளர்) மேலே குறிப்பிட்டவாறு விலைக் குறிப்பீடொன்றின் குறைந்தபட்ச தொகையுடன் இணங்கியொழுகி பின்வரும் முதனிலை வணிகர்களூடாக ஏலத்திற்கு விலைக் குறிப்பீடுகளை சமர்ப்பிக்கலாம்.

**முதனிலை வணிகர்களின் பட்டியல்**

| | | | |
|---|---|---|---|
| அக்குயிட்டி செக்குரிட்டீஸ் லிமிடட் | 2206297 | என்எஸ்பீ பன்ட் மனேஜ்மன்ற் கம்பனி லிமிடட் | 2425010 |
| இலங்கை வங்கி | 2541938 | மக்கள் வங்கி | 2206783 |
| கெப்பிட்டல் எலையன்ஸ் பிஎல்சி | 2317777 | சம்பத் வங்கி பிஎல்சி | 2305842 |
| கொமர்ஷல் பாங் ஒப் சிலோன் பிஎல்சி | 2332319 | செலான் வங்கி பிஎல்சி | 2456340 |
| ப்பெஸ்ட் கெப்பிட்டல் ட்ரெஸரீஸ் பிஎல்சி | 2639883 | வெல்த்றஸ்ற் செக்குரிட்டீஸ் லிமிடட் | 2675096 |

ஒவ்வொரு தொடர்கள்/ஐஎஸ்ஐஎன் தொடர்பிலும், சந்தை நிலைமைகளுக்கமைய, இலங்கை மத்திய வங்கி, முன்வைக்கப்படுகின்ற தொகையினை விஞ்சாத ஏதேனும் தொகையினை ஏற்றுக்கொள்ளக்கூடும்.

முதலீட்டாளர்களாக வரக்கூடியவர்கள் இரண்டாந்தரச் சந்தையில் முதனிலை வணிகர்களிடமிருந்தும் அல்லது ஏதேனும் வேறு உரிமம்பெற்ற வங்கியிடமிருந்தும் திறைசேரி உண்டியல்களை கொள்வனவு செய்யலாம்.

* பன்னாட்டு பிணையங்கள் அடையாள இலக்கம்

**என். டி. வை. சி. வீரசிங்க**
**பொதுப்படுகடனின் கண்காணிப்பாளர்/பதிவாளர்**

**பொதுப்படுகடன் திணைக்களம்,**
**இலங்கை மத்திய வங்கி,**
**30, சனாதிபதி மாவத்தை, கொழும்பு-1.**
**தொலைபேசி: 2477011, தொலைநகல்: 2477687**
**வெப்தளம் : www.cbsl.gov.lk**

## பிரசித்த ஏல விற்பனை

4ம், 5ம் ஜுலை 2023, 29ம், 30ம் ஜனவரி 2024, 26ம், 27ம் பிப்ரவரி 2024, 27ம், 28ம் மார்ச் 2024, 29ம், 30ம் ஏப்ரல் 2024, 30ம், 31ம் மே 2024, 27ம், 28ம் ஜுன் 2024, 29ம், 30ம் ஜுலை 2024, 29ம், 30ம் ஆகஸ்ட் 2024 இல் “மௌபிமா, தினகரன் மற்றும் சிலோன் ருடே” ஆகிய பத்திரிகைகளில் பிரசுரிக்கப்பட்ட விளம்பரம் தொடர்பானது. எல்.பி.பினான்ஸ் பிஎல்சி இன் தங்கநகை பாதுகாப்புக்களில் வைக்கப்பட்டு பெறப்பட்ட கடன்தொகை உடன்படிக்கையினுள் நிச்சயிக்கப்பட்ட கொடுப்பனவுகள் செலுத்த தவறிய காரணங்களினால் ஏல விற்பனைக்கு தீமானிக்கப்பட்டுள்ளது. தங்க நகைகள் கீழே தரப்பட்டுள்ள திகதிகளின் கீழ் அந்த கிளைகளில் பிரசித்த ஏல விற்பனையில் காலை 10 மணிக்கு விற்பனை செய்யப்படும் என்பதனை கடன்பெற்றோருக்கும் மற்றும் பொது மக்களுக்கும் அறியத்தருகின்றோம்.

| கிளைகள் | திகதி |
|---|---|
| எல்பிட்டிய, பிட்டிகல, ஹொரண, பண்டாரகம, மத்துகம, பதுரலிய, பலாங்கொடை, ரத்தினபுரி, அவிசாவளை, எஹலியகொட, ஹன்வெல்ல, வெள்ளவத்தை, வெள்ளவத்தை நகர கிளை, தெஹிவளை, மொறட்டுமுல்லை, மொறட்டுவ, கெசல்வத்த, வாட்டுவ, தெஹிவளை நகர கிளை, அத்திடிய, பொரலஸ்கமுவ, பிலியந்தலை, தர்கா நகர், பாணந்துறை, கல்கிச, ரத்மலான ,நகர அலுவலகம், அளுத்கம, பேருவளை, களுத்துறை, டெல்கந்த, கிருலப்பனை, நுகேகொடை, கோட்டே, பத்தரமுல்லை, எம்பிலிப்பிட்டிய, திஸ்ஸமஹாராம, கொலன்னாவ, பதுளை நகர கிளை, பதுளை, அம்பலாந்தோட்டை, பண்டாரவளை | 24 செப்டம்பர் 2024 |
| நுவரெலியா, மஹியங்கனை, மொனராகலை, வெலிமடை, தெஹியத்தகண்டி, குருநாகல் நகர கிளை, குருநாகல் பிறீமியர் நிலையம், குருநாகல், குளியாபிட்டிய, நாரம்மல, கலேவேல, பிலிமத்தலாவை, கண்டி, கண்டி நகர கிளை, கடுகஸ்தோட்டை, நாவலப்பிட்டிய, மாத்தளை, கெலிஓயா, ஆனமடுவ, புசல்லாவை, கம்பளை, கம்பளை நகர கிளை, ஹட்டன், மஸ்கெலிய, திகனா, தம்புள்ளை, புத்தளம், கொட்டாஞ்சேனை, அளுத்மாவத்தை கொழும்பு 15, மட்டக்குளிய, மோதறை, கிராண்ட்பாஸ் சுலைமான் கொழும்பு 14, கணேமுல்ல, சிலாபம், கொச்சிக்கடை-நீர்கொழும்பு, நீர்கொழும்பு, நீர்கொழும்பு நகர கிளை, வென்னப்புவ, மாரவில, கட்டுநாயக்க-அவிரிவத்த, வத்தளை, கந்தானை, ராகம, ஜா-எல,எலகந்த, கல்பிட்டிய, கெக்கிரவ, அனுராதபுர நகர கிளை, அனுராதபுரம், மதவாச்சிய, தம்புத்தேகம, நொச்சியகம, பொலன்னறுவை, மெதிரிகிரிய, கந்தலை, ஜம்பெட்டா, கிராண்ட்பாஸ் | 25 செப்டம்பர் 2024 |
| கொத்தாடுவ புதிய நகரம், தெமட்டகொட, தொட்டலங்க, ராஜகிரிய, நாரஹேன்பிட்டி, ஹோமாகம, மஹரகம நகர கிளை, மஹரகம, கொட்டாவ, அதுருகிரிய, அம்பலாங்கொட, கராபிட்டிய, காலி, தங்காலை, சங்கராஜ மாவத்தை-கொழும்பு 10, மாளிகாவத்த, செட்டியார் தெரு, கொகுவல, டாம் வீதி, டீன்ஸ் வீதி கிளை, மருதானை, பொறளை, பொறளை நகர கிளை, மாத்தறை, மாத்தறை நகர கிளை, தெனியாய, நெலுவ, அக்குரஸ்ஸ, மாலபே, கிரிபத்கொடை, தெல்கொடை, கடவத்தை, களனி, கடுவெல, கிரிபத்கொடை-மாகொல, பிறீமியர் கொழும்பு 07, கொம்பனித் தெரு, கார்ப்பரேட் அலுவலகம், தலைமை அலுவலகம் கொழும்பு 07, மாவனல்ல, மினுவங்கொட, கேகாலை, திஹாரிய, வரக்காபொல, நிட்டம்புவ, கம்பஹா, திவுலபிட்டிய | 26 செப்டம்பர் 2024 |
| யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம் பிறீமியர், யாழ்ப்பாண நகரம், கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லைத்தீவு, திருநெல்வேலி, மானிப்பாய், சுன்னாகம், அச்சுவேலி, நெல்லியடி, மல்லாவி, வட்டுக்கோட்டை, கோப்பாய், கொடிகாமம், பருத்தித்துறை, சாவகச்சேரி, தெல்லிப்பளை, வவுனியா, பேசாலை, சங்கானை, மன்னார், மருதங்கேணி, வல்வெட்டித்துறை, பண்டத்தரிப்பு, கைதடி, செங்கலடி, வாழைச்சேனை, கிண்ணியா, திருகோணமலை, கொக்கட்டிச்சோலை, ஆரையம்பதி, மட்டக்களப்பு, களுவாஞ்சிக்குடி, கல்முனை, ஏறாவூர், வஹரை, சேருநுவர, கிரன், திருகோணமலை நகரம், வவுணதிவு, சாய்ந்தமருது, சம்மாந்துறை, அட்டாளைச்சேனை, மத்திய முகாம், அம்பாறை, பொத்துவில், அக்கரைப்பற்று, திருக்கோவில் | 05 அக்டோபர் 2024 |

எந்தவொரு முன்னறிவித்தலும் இன்றி ஏலத்தை நிறுத்தவோ, பின்தள்ளி போடவோ எல்.பீ. ∴பினான்ஸ் பி.எல்.சி. நிறுவனத்திற்கு உரிமம்

LB FINANCE
உதவி பொது மேலாளர் - தங்கக் கடன் பிரிவு
275Æ75, பேராசிரியர் ஸ்டான்லி விஜேசுந்தர மாவத்தை, கொழும்பு 07.

## அறிவித்தல்
### சபரகமுவ மாகாண சபை

### 2025ஆம் ஆண்டிற்கான வாகன தகைமைச் சான்றிதழ் பத்திரங்களை விநியோகிக்கும் முகமாக கராஜ்களை பதிவு செய்தல்

பஸ் மற்றும் லொறி போன்ற மக்கள் சேவைகளில் ஈடுபடும் வாகனங்களுக்காக தகைமைச் சான்றிதழ் பத்திரங்கள் விநியோகிக்கும் வேலையைப் பொறுப்பேற்பதற்கு சபரகமுவ மாகாண சபை அதிகாரப் பிரதேசத்திற்குள் அமைந்துள்ள அரச துறை கராஜ்களில் இருந்து, வ/ப சபரகமுவ பஸ் கம்பனிக்குச் சொந்தமான பஸ் டிப்போக்களில் இருந்து மற்றும் வியாபார பதிவுச் சான்றிதழ் அல்லது கம்பனிகள் பதிவு செய்யும் சான்றிதழுடன் தனியார் துறையின் கராஜ்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்ற.

**01. விண்ணப்பங்கள் விநியோகித்தல்**
சபரகமுவ மாகாண சபையின் மாகாண திறைசேரிக்கு வருகை தந்து ரூ. 2000/- மீளளிக்கப்படாத விண்ணப்பப்படிவக் கட்டணத்தைச் செலுத்தி விண்ணப்பத்தை பெற்றுக்கொள்ளல் வேண்டும். விண்ணப்பங்கள் 2024.09.10 முதல் 2024.10.09 வரை அரச வேலை நாடகளில் மு.ப. 9.00 முதல் பி.ப. 3.00 வரை விநியோகிக்கப்படுவதுடன் கட்டணம் செலுத்தாமலேயெ மேற்படி விபரம் பத்திரங்களை அக் காலஎல்லையில் பரீட்சிக்கலாம். விண்ணப்பத்துடன் ஏனைய விபரங்களுடன் விபரப் பத்திரங்கள் வழங்கப்படும்.

**02. விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல்**
விண்ணப்பங்களை முறையாகப் பூர்த்தி செய்து 2024.10.10ம் திகதிக்கு முன்னர் மாகாண திறைசேரி, சபரகமுவ மாகாண சபை, புதிய நகரம், இரத்தினபுரி என்ற முகவரிக்கு பதிவுத்தபாலில் அல்லது கையோடு கொண்டுவந்து ஒப்படைக்கலாம். விண்ணப்பங்கள் உள்ளிடும் உறையின் இடதுபக்க மேல் மூலையில் “தகைமைச் சான்றிதழ் பத்திரங்களை விநியோகிப்பதற்கான கராஜ்களை பதிவுச் செய்தல் - 2025” என்று குறிப்பிடுதல் வேண்டும்.

**மேலதிக விபரங்களை 045-2233962 மற்றும் 045-2222893**
**தொ.பே இலக்கங்களில் விசாரியுங்கள்**

**மஹிந்த எஸ். வீரசூரிய,**
**பிரதம செயலாளர்,**
**சபரகமுவ மாகாண சபை.**
**2024 செப்டம்பர் 09ஆம் திகதி**

## அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கி
### அரச ஈட்டு மற்றும் முதலீட்டு வங்கியில் தொழில் வாய்ப்புகள்

SMIB

SMIB, தேசத்தின் முதன்மையான வீடமைப்பு வங்கியாக, வங்கியின் செயற்பாட்டை மறுசீரமைக்கும் பணியில் ஈடுபட்டுள்ளது, இது வாடிக்கையாளர்களுக்கு மிகவும் திருப்திகரமான மற்றும் பல்வேறு சேவைகளை வழங்கும் நிறுவனமாகும். அதுபோல, பின்வரும் தலைமைத்துவப் பதவிகளுக்கான பொருத்தமான தகுதிகள் மற்றும் அனுபவத்துடன் வணிக இலக்குகளை அடைவதற்கு ஆற்றல் மிக்க தலைமைப் பாத்திரங்களை வெளிப்படுத்தி முழு அர்ப்பணிப்புடன் செயற்படும் அபேட்சகர்களிடமிருந்து விண்ணப்பங்களை நாங்கள் அழைக்கிறோம்.

**இணக்க அதிகாரி**
**Compliance Officer**

இது வங்கியின் (பிரதான முகாமையாளர் நிலை) ஒரு முக்கிய பதவியாகும் என்பதுடன் இலங்கை மத்திய வங்கியின் சுற்றறிக்கை, அறிவுரைகள் மற்றும் உள்ளக தரநிலைகளின் பிரகாரம் ஒருங்கிணைந்த இடர் முகாமைக்குழுவின் ஊடாக (BIRMC) நேரகாலத்தில் பணிப்பாளர் சபைக்கு அறிக்கையிடுவதன் மூலம் வங்கி அதன் வெளிவாரி ஒழுங்குபடுத்தல் தேவைகள் மற்றும் உள்ளக கொள்கைகளுக்கு அமைவானவை என உறுதிப்படுத்துதல், வங்கியின் இணக்க அபாயத்தைக் கண்டறிதல் மற்றும் முகாமைத்துவம் செய்தல் மற்றும் வங்கியின் இணக்க முயற்சிகளை கண்காணித்தல் மற்றும் அறிக்கையிடல் என்பவற்றுக்குப் பொறுப்பு கூறுதல்.

**தகைமைகள்**
வங்கியியல், வர்த்தகம், வணிகம், பொருளியல், கணக்கியல், சட்டம் அல்லது சட்டத்தரணி துறையில் அங்கீகரிக்கப்பட்ட பல்கலைக்கழகம் ஒன்றின் இளமாணிப் பட்டம்

**அத்துடன்**

இலங்கை பட்டய கணக்காளர் நிறுவனம் (ICASL)/ ஐக்கிய இராச்சியத்தின் முகாமைத்துவ கணக்காளர்களின் பட்டய நிறுவனம் (CIMA UK)/ பட்டய சான்றளிக்கப்பட்ட கணக்காளர்கள் சங்கம் (ACCA UK) அல்லது AIB (இலங்கை வங்கியாளர்கள் நிறுவனம்) நிறுவனத்தின் பகுதி தகைமைகள் அல்லது அங்கீகரிக்கப்பட்ட நிறுவனத்திலிருந்து பெற்றுக்கொண்ட ஏனைய தொடர்புடைய தொழில்சார் தகைமைகள் (வங்கி ஒழுங்குமுறை இணக்கத்தில் உள்ள வேறு ஏதாவது தகைமைகள் விரும்பத்தக்கது.)

**வேலை அனுபவம்**
வங்கி அல்லது நிதி நிறுவனம் ஒன்றில் ஒட்டுமொத்தமாக 10 ஆண்டுகள் அனுபவத்தை பெற்றிருப்பதுடன் அதில் குறைந்தது 05 ஆண்டுகள் முகாமைத்துவ தரத்தில் அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். அபேட்சகர் இணக்க செயற்பாட்டில் அனுபவம் மற்றும் முழுமையான அறிவு, ஒழுங்குமுறை இணக்கம், பணச்சலவை தடுப்பு நடைமுறைகள், கூட்டிணைந்த ஆளுகை மற்றும் நெறிமுறைகளில் போதுமான அறிவை பெற்றிருத்தல் வேண்டும்.

**சம்பளம்**
சம்பள அளவு: ரூபா 211,260 - 5,490 x 12-277, 140 ஒரு மாதத்திற்கு வங்கியினால் அங்கீகரிக்கப்பட்ட கொடுப்பனவுகள் சகிதம். (வாழ்க்கைச் செலவுப்படி, வாடகை மற்றும் 10% கொடுப்பனவு) மாதச் சம்பளம் ஏறத்தாழ 347,000.00 ரூபாவாகவிருக்கும்.

வயது: 50 வயதிற்கு மேற்படாமல் இருத்தல் வேண்டும். (எவ்வாறாயினும் ஏற்கனவே ஒரு அரசு துறை நிறுவனத்தில் வேலை செய்பவர்களுக்கு உச்ச வயதெல்லை ஏற்புடையதல்ல.)

**உதவி முகாமையாளர் - தரவுதள நிர்வாகம்**
**Assistant Manager-Database Administration**

**முக்கிய பொறுப்புகள்**
அனைத்து தரவுத்தள சேவையகங்களையும் அதன் சேவைகளையும் நிர்வகிப்பதற்கான பொறுப்புகூறல் மற்றும் வழக்கமான காப்புப்பிரதிகளை எடுப்பது, சமீபத்திய இணைப்புகளைப் பயன்படுத்துதல், செயற்றிறன் கண்காணிப்பு மற்றும் சரிசெய்தல். அனைத்து முக்கியமான தரவுத்தளங்களும் எந்த தடங்கலும் இல்லாமல் இயங்குவதை உறுதிசெய்து, சுமை சமநிலை, HA (அதிக கிடைக்கும்) மற்றும் DR (இடர் மீட்பு) நுட்பங்களுடன் அதிக கிடைக்கும் தன்மையை வழங்க வேண்டும். அனைத்து தரவுத்தள சேவையகங்களுக்கும் ஒழுங்குமுறை, இணக்கம் மற்றும் பாதுகாப்புத் தேவைகள் முழுமையாக நிரப்பப்பட வேண்டும்.

**தகைமைகள்**
தகவல் தொழில்நுட்பத்தில் பட்டம்

தரவுத்தள முகாமைத்துவம் சார்ந்த தொழில்சார் சான்றழிப்புகள் மேலதிக தகைமையாகும்.

**அனுபவம்**
ஒட்டுமொத்தமாக 4 வருட அனுபவம் இதில் வங்கி மற்றும் நிதித் துறையில் தரவுத்தள நிர்வாகத்தில் குறைந்தபட்சம் 2 ஆண்டுகள் நிர்வாக நிலை. Postgre SQL/Enterprise DB வெளிப்பாடு இருப்பது சாதகமாகும்.

**பொது நிபந்தனைகள்**
தேர்வு முறை - வங்கியின் ஆட்சேர்ப்பு கொள்கை மற்றும் நடைமுறைக்கு ஏற்ப விண்ணப்பங்கள் அழைக்கப்படும்.

விண்ணப்பங்களைச் சமர்ப்பிப்பதற்கான இறுதி நாள் - 2024-09-23

**விண்ணப்பிக்கும் முறை**
ஆர்வமுள்ள தகுதி வாய்ந்த விண்ணப்பதாரர்கள் தங்கள் சுய விபரங்களுடன் கல்வி/ தொழில்சார் சான்றிதழ்களின் பிரதிகள் மற்றும் இரண்டு தொழில்சார் உறவினரல்லாத சான்றுபகர்வோரின் பெயர்கள், முகவரிகள் மற்றும் தொடர்பு எண் என்பவற்றை பின்வரும் மின்னஞ்சல் ஊடாக அனுப்ப வேண்டும்.

அனைத்து விண்ணப்பங்களும் மிகவும் இரகசியமாகப் பேணப்படும் என்பதுடன் எந்த விதமான ஆதரவு பெற முயல்தல் தகுதியற்றதாக கருதப்படும். ஆட்சேர்ப்பு தெரிவை ஒத்திவைத்தல் அல்லது இரத்துச் செய்தல் அல்லது வேறு எந்த நடவடிக்கையும் மற்றும்/அல்லது இந்த ஆட்சேர்ப்புக்கான தேர்வு மூலப் பிரமாணங்களை மாற்றும் உரிமையை வங்கி தன்னகத்தே கொண்டுள்ளது. பணிப்பாளர் சபையின் தீர்மானம் இறுதியானதாகவும் மற்றும் உறுதியானதாகவும் இருக்கும்.

விண்ணப்பங்கள் Careers@smib.lk மூலமாக மட்டுமே அனுப்பப்படல் வேண்டும்.

## இலங்கை பிக்ஷு பல்கலைக்கழகம்
### அநுராதபுரம்

## விலைமனுக்களுக்கான அழைத்தல்
### இலங்கை பிக்ஷு பல்கலைக்கழகத்திற்கு தோட்ட பராமரிப்பு மற்றும் நிலசீரமைத்தல் சேவைகளை வழங்கல் - 2024/2025
### (ஒப்பந்த இல.: BUSL/GAS/17/08-I)

ஒரு (1)வருட காலத்திற்கு இந்த பல்கலைக்கழகத்திற்கு தேசிய போட்டிரீதியிலான விலைமனுக்கோரல் நடைமுறையின் கீழ் 2024/2025 ஆம் ஆண்டிற்காக பதிவு பெற்ற வர்த்தக அமைப்புகளிலிருந்து இலங்கை பிக்ஷு பல்கலைக்கழக, பல்கலைக்கழக பெறுகைக் குழுத் தலைவரினால் முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் அழைக்கப்படுகின்றன.

ஆர்வமுள்ள விலைமனுதாரர் வேலைநாட்களில் 2024.09.30 ஆம் திகதியன்று வரையும் மு.ப. 9 மணிக்கும் பி.ப. 2 மணிக்குமிடையில் இலங்கை பிக்ஷு பல்கலைக்கழகத்திற்கு தோட்ட பராமரிப்பு மற்றும் நிலசீரமைத்தல் சேவைகளை வழங்குவதற்காக மீளளிக்கப்படாத கட்டணமாக 3,000 ரூபாவை பல்கலைக்கழக சிறாப்பரிடம் செலுத்தி வழங்கப்பட்ட பற்றுச்சீட்டுக்களை சமர்ப்பிப்பதன் மூலம் இலங்கை பிக்ஷு பல்கலைக்கழக உதவி பதிவாளரிடமிருந்து (பொதுநிருவாகம்) விலைமனுக்கோரல் ஆவணங்களை பெற்றுக் கொள்ளலாம். விலைமனுக்கோரல் ஆவணங்கள் பொதுநிருவாகப் பிரிவிற்கு அழைத்தலொன்றை மேற்கொள்வதன் மூலம் அல்லது **www.busl.ac.lk** என்ற பல்கலைக்கழக இணையதளத்திலிருந்து 2024.09.10 ஆம் திகதியிலிருந்து விலைமனுக்கோரல் ஆவணங்களை பரீட்சிக்கலாம்.

முத்திரைக்குறியிடப்பட்ட விலைமனுக்கள் இரு பிரதிகளில் தலைவர், பல்கலைக்கழக பெறுகைக் குழு, இலங்கை பிக்ஷு பல்கலைக்கழகம், புத்தளம் வீதி, அனுராதபுரம் என முகவரியிடப்பட்டு பதிவுத் தபாலில் 2024.10.01 ஆம் திகதியன்று பி.ப. 2 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கும் வகையில் அனுப்பப்படல் வேண்டும் அல்லது பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் சேர்க்கப்படல் வேண்டுமென்பதுடன் விலைமனு ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ள கேள்விப்பிணைத் தொகையுடன் அனுப்பப்படல் வேண்டும். (கேள்விப்பிணைத் தொகையானது விலைமனுக்கோரல் ஆவணத்தில் வழங்கப்பட்டுள்ளது) விலைமனுக்களை அடக்கியுள்ளடி தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ‘‘Invitation for Bids - Provision of Garden Maintenance and Landscaping Services at Bhiksu University of Sri Lanka 2024/2025” என குறிப்பிடப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் நிராகரிக்கப்படும்.

விலைமனுக்கள் அவைகளின் மூடும் நேரத்தின் பின்னர் நேரடியாக சமுகமளித்திருக்கும் விலைமனுதாரரின் அல்லது விலைமனுதாரரின் பிரதிநிதிகளின் முன்னிலையில் 2024.10.01 ஆம் திகதியன்று அநுராதபுரம், இலங்கை பிக்ஷு பல்கலைக்கழக பதிவாளரின் அலுவலகத்தில் திறக்கப்படும்.

விலைமனுக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024.09.24 ஆம் திகதியன்று மு.ப. 10.30 மணிக்கு இலங்கை பிக்ஷு பல்கலைக்கழக பேரவை அறையில் நடைபெறுமென்பதுடன் விலைமனுதாரர் விலைமனுக்கோரல் முன்னோடிக் கூட்டத்திற்கு அவர்களின் சொந்த செலவிலேயே சமுகமளிக்கலாம்.

மேலதிக தகவலை 025-2050695 என்ற தொலைபேசி இலக்கத்தினூடாக வேலைநாட்களில் இலங்கை பிக்ஷு பல்கலைக்கழக பொதுநிருவாகத்திற்கான உதவவ பதிவாளரிடமிருந்து பெற்றுக் கொள்ளலாம்.

**தலைவர்,**
**பல்கலைக்கழக பெறுகைக் குழு,**
**இலங்கை பிக்ஷு பல்கலைக்கழகம்,**
**புத்தளம் வீதி, அநுராதபுரம்.**
**10.09.2024.**

OBSERVER adz · வாரமஞ்சரி

Promotional Rates for Classified Advertisements
(Only 15 Words)

| Any Single Newspaper | Two Newspapers | Three Newspapers |
|---|---|---|
| Rs. 800/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,000/- (Expect Thinakaran Vaaramanjari) | Rs. 1,300/- |

Kurunegala District

Kurunegala - 077 0 325 625
6217 - Sampath Advertising - No. 15/6, Convent Lane, Kurunegala.

Kurunegala - 077 3 512 600
6163 - Athugala Media Center - No. 21A, Uthuru Wewa Road, Kurunegala.

Kuliyapitiya - 037 22 832 88
6101 - Sasthrodaya Book Shop - No. 11, Mihindu Mawatha, Kuliyapitiya.

Nikaweratiya - 077 6 064 640
6154 - Kumuditha Book Shop - No. 101/C, Puththalam Road, Nikaweratiya.

Wariyapola - 037 22 672 58
6188 - Kalugamuwa Road, Wariyapola.

Giriulla - 077 9 542 492
6233 - Chathura Book Shop - No. 49, Giriulla.

Pannala - 076 7 861 313
6118 - Miyumi Book Shop - No. 7, Negombo Road, Pannala.

Alawwa - 037 22 78 189
6145 - Gunasiri Welandasela - No.52, Main Street, Alawwa.

Narammala - 037 22 49 211
6155 - Sisira Stores & Pharmacy - Negombo Road, Narammala.

Ibbagamuwa - 037 22 59 508
6202 - Hiriyala Agencies - Dehelgamuwa, Ibbagamuwa.

Polgahawela - 071 6 375 293
6119 - Sagara Stores - Kurunegala Road, Polgahawela.

Galle District

Galle - 091 3 021 001
3117 - C. S. Munasingha - New Aradana Traders, No. 83, Main Street, Galle.

Galle - 075 9 699 402
3222 - J. A. S. Jayakodi - 28, P&J City, Gamini Mawatha.

Ambalangoda - 091 22 557 44
3132 - H. D. Mendis - 264, Cooperative Building, Main Street, Ambalangoda.

Badulla & Nuwaraeliya District

ADZ HOTLINE - 011 2 429 369
CALL - 011 2 429 342/ 343

# பலாங்கொட நகர சபை

# கேள்வி மற்றும் பெறுகை அறிவித்தல்

2024 நவம்பர் 01 முதல் 2025 ஒக்டோபர் 31ம் திகதி வரை ஒரு வருட காலத்திற்கு கீழ்க்காணும் உருப்படி 02 இற்காக பாலங்கொட நகர சபையின் செயலாளர் எஸ்.எச்.ஏ. கருணாரத்ன ஆகிய என்னால் 2024 ஒக்டோபர் 08ம் திகதி மு.ப. 10.00 வரை கேள்விப் பத்திரங்கள் ஏற்கப்படும். மேலதிக விபரங்களை வாரத்தின் வேலை நாட்களில் தொ.பே. இல. 045-4930830ஐ அழைத்து அல்லது info@blaangoda.uc.gov.lk இடம் பெற்றுக் கொள்ளலாம்.

02) 2024 ஒக்டோபர் 07 பி.ப. 3.00 வரை கேள்விப் பத்திரங்கள் பலாங்கொட நகர சபை அலுவலகத்தில் விநியோகிக்கப்படுவதுடன் 2024 ஒக்டோபர் 08 மு.ப. 10.30 இற்கு கேள்விப் பத்திரங்கள் திறக்கப்படும். இவ் வேளையில் கேள்வி விண்ணப்பதாரிக்கு அல்லது அவர்களது அதிகாரமளிக்கப்பட்ட பிரதிநிதியொருவருக்கு சமுகமளிக்கலாம்.

| தொடர் இலக்கம் | கேள்வி கோரப்படும் சேவையின் தன்மை | மீளளிக்கப்படும் கேள்வியின் பிணை வைப்புத் தொகை ரூ. | விண்ணப்பப் படிவக் கட்டணம் ரூ. | குறைந்தபட்ச மாதாந்த கேள்வித் தொகை ரூ. |
|---|---|---|---|---|
| கேள்வி 01 | பலாங்கொட பஸ் நிறுத்துமிடம் ஆண்/ பெண் பொது மலசலகூடம் மற்றும் மக்கள் சந்தை பொது மலசலகூடம் பராமரித்தல், சுத்திகரித்தல் கட்டணங்களை அறிவிட்டு நடாத்திச் செல்லல் | 25,000.00 | 2500.00 | 154,220 + அரசு அனுமதித்த வரி |
| பெறுகை 02 | பலாங்கொட நகர சபையின் அனுமதித்த வேலை திட்டமிடலின் பிரகாரம் நகரின் அழுக்கு குப்பைகளை சேகரித்தல் சுத்திகரித்தல் வேலை திட்டமிடல் கேள்விப் பத்திரத்துடன் வழங்கப்படும் | 50,000.00 | 2500.00 | - |

2024 செப்டெம்பர் 04
பலாங்கொட நகர சபையில்.

எஸ். எச். ஏ. கருணாரத்ன,
செயலாளர்,
பலாங்கொட நகர சபை.

## கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்
## கண்டி வீதி, யக்கல, இலங்கை

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## நிர்வாகக் கட்டிடத்திற்கான பயணிகள் மின்தூக்கியின் வடிவமைப்பு, வழங்கல், விநியோகம், நிறுவுதல், சோதனை, செயற்படவைத்தல் மற்றும் பராமரிப்பு

**IFB NO: GWUIM/FAD/SUP/AC/08/NCB/24/01**

1. பின்வரும் உருப்படியின் பெறுகைக்காக தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், திணைக்கள பெறுகைக் குழு, தலைவரினால் முத்திரை பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| கூறுகள் | உருப்படிகள் | விபரம் | அளவு | விலைமனு பிணைத் தொகை (ரூபா) மற்றும் செல்லுபடிக் காலம் |
|---|---|---|---|---|
| 1 | 1 | நிர்வாகக் கட்டிடத்திற்கான பயணிகள் மின்தூக்கியின் வடிவமைப்பு, வழங்கல், விநியோகம், நிறுவுதல், சோதனை, செயற்படவைத்தல் மற்றும் பராமரிப்பு | 01 | 150,000/- 2025.01.21 அன்று வரை |

2. தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB) நடைமுறை மூலம் விலைக்கேட்பு நடத்தப்படும்.

3. ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், நிர்வாகக் கட்டிடம், தரைத் தளம், நிதி நிர்வாகப் பிரிவு, உதவி நிதியாளரிடம் (வழங்கல்கள்) இருந்து மேலதிக விபரங்களை பெறலாம் என்பதோடு (தொ.: 033 2226109/ 033 2222740 அல்லது 033 2222748 – நீடிப்பு 113, மின்னஞ்சல்: supplies@gwu.ac.lk) அலுவலக நேரங்களில் மேல் தரப்பட்டுள்ள முகவரியில் கட்டணம் இன்றி விலைமனு ஆவணங்களை பரீட்சிக்க முடியும் அதேபோன்று 033 2231681 – யக்கல, கண்டி வீதி, கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், பராமரிப்புப் பிரிவு, பணிகள் பொறியியலாளரிடம் இருந்து தொழில்நுட்ப தெளிவுகளை பெற முடியும்.

4. தகைமைகள் மற்றும் தேவைகளில் உள்ளடங்குவன:

   (i) விலைமனுதாரர்கள் அரச கூட்டுத்தாபனங்கள், சட்டரீதியான சபைகள் அல்லது புகழ்பெற்ற நிறுவனங்களுக்காக பயணிகள் மின்தூக்கியை வழங்கியதில் குறைந்தது 10 ஆண்டுகள் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு செல்லுபடியான வர்த்தகப் பதிவை பெற்றிருத்தல் வேண்டும் மற்றும் அபகீர்த்தியானோர் பட்டியலில் இடம்பெறாதிருத்தல் வேண்டும். பயணிகள் மின்தூக்கியின் உற்பத்தியாளர்கள் உலகெங்கும் பயணிகள் மின்தூக்கிகளை வடிவமைத்தல், தயாரித்தல், நிறுவுதல் மற்றும் செயற்படவைத்தல் மற்றும் பராமரித்தலில் குறைந்தது பதினைந்து (15) ஆண்டுகள் அனுபவத்தை பெற்றிருத்தல் வேண்டும்.

   (ii) விலைமனுதாரர்கள் மின்னியல் மற்றும் இயந்திர சேவைகளுக்காக CIDA (ICTAD) பதிவு மூலம் பிரத்தியேக ஒப்பந்ததாரர்கள் பதிவு ஒன்றுக்கான பதிவு, தொடர்புடைய அரச நிர்வாகத்தினால் வழங்கப்படும் வர்த்தகப்பதிவை பெற்றிருத்தல் வேண்டும் என்பதோடு விலைமனுதாரர்கள் பயணிகள் மின்தூக்கி தொடர்பில் உற்பத்தியாளர்களின் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ் மற்றும் ISO சான்றிதழை பெற்றிருத்தல் வேண்டும்.

   (iii) 2023 ஆம் ஆண்டு முடிவுற்ற கடந்த 05 ஆண்டு காலத்தில், விலைமனு ஆவணத்தில் கூறுவிலையிடப்பட்ட தொகைக்கு மேல் அல்லது இணையான குறைந்தது இரு தனிப்பட்ட திட்டங்களை பூர்த்தி செய்திருத்தல் வேண்டும். மேலதிக விபரங்கள் விலைமனு ஆவணங்களில் தரப்பட்டுள்ளது.

5. 2024.09.11ஆம் திகதி தொடக்கம் 2024.10.07 ஆம் திகதி வரை மு.ப. 9.00 மற்றும் பி.ப. 3.00 இற்கு இடையே கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழக, சிறாப்பருக்கு மீளளிக்கப்படாத கட்டணமாக 12,500 ரூபாவை செலுத்தி கீழுள்ள முகவரிக்கு நிறுவனம்/ அமைப்பின் முகவரி அச்சிடப்பட்ட கடிதத் தாளில் எழுத்துமூல விண்ணப்பம் ஒன்றை சமர்ப்பித்து ஆர்வமுடைய விலைமனுதாரர்கள் மூலம் ஆங்கில மொழியில் கிடைக்கப்பெறும் விலைமனு ஆவணங்களின் முழுமையான தொகுதி ஒன்றை கொள்வனவு செய்யலாம். கீழுள்ள 7ஆவது பந்தியில் தரப்பட்டுள்ளவாறு விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கான இறுதித் திகதிக்கு ஒரு நாளைக்கு முன்னர் வரை ஆவணங்களை கொள்வனவு செய்யலாம்.

6. விலைமனுக்களை அசல் மற்றும் நகல் என இரு பிரதிகளில் சமர்ப்பித்தல் வேண்டும் என்பதோடு ஒவ்வொன்றும் முத்திரை பொறிக்கப்பட்ட கடித உறைகளில் வெவ்வேறாக மூடப்பட்டு "அசல்" மற்றும் "நகல்" என குறிப்பிடுதல் வேண்டும். அசல் மற்றும் பிரதியைக் கொண்ட இரு கடித உறைகளும் பின்னர் ஓர் ஒற்றை உறையில் மூடப்பட்டு அந்தக் கடித உறையின் இடது பக்க மேல் மூலையில் "நிர்வாகக் கட்டிடத்திற்கான பயணிகள் மின்தூக்கியின் வடிவமைப்பு, வழங்கல், விநியோகம், நிறுவுதல், சோதனை, செயற்படவைத்தல் மற்றும் பராமரிப்பு - GWUIM/FAD/SUP/AC/08/NCB/24/01" என்று குறிப்பிடவும்.

7. விலைமனுக்களை 2024.10.08 ஆம் திகதி பி.ப. 02.30 அல்லது அதற்கு முன்னர் கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், நிர்வாகக் கட்டிடம், இரண்டாவது மாடி, பதிவாளரின் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள "விலைக்கேட்புப் பெட்டியில்" விலைமனுதாரர் மூலம் இடுதல் அல்லது மேலுள்ள இறுதித் திகதிக்கு முன்னர் தலைவர், திணைக்கள பெறுகைக் குழு, கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம், கண்டி வீதி, யக்கல என்ற முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்புதல் வேண்டும்.

8. தாமதிக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். மேல் குறிப்பிடப்பட்ட இடத்தில் நேரடியாக பங்கேற்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகள் முன்னிலையில் 2024.10.08 ஆம் திகதி பி.ப. 2.30க்கு விலைமனுக்களை ஏற்கும் நேரம் முடிவுற்ற பின்னர் விலைமனுக்கள் உடன் திறக்கப்படும். அனைத்து விலைமனுக்களும் BDS இல் குறிப்பிடப்பட்டவாறு விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும்.

9. அனைத்து விலைமனுதாரர்களும் விலைமனுக்களை சமர்ப்பிப்பதற்கு முன்னர் தேவையெனில், தளத்தை பரீட்சிப்பது மற்றும் அளவீடுகளை பெறுவதற்கு உறுதியான அறிவுறுத்தல் வழங்கப்படுகிறது. வேலையை ஆரம்பிப்பதற்கு முன்னர் ஒப்புதலுக்காக பணிகள் பொறியியலாளருக்கு அனைத்து பொருட்களினதும் மாதிரி ஒன்றை சமர்ப்பித்தல் வேண்டும்.

10. அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் இயங்கும் புகழ்பெற்ற வர்த்தக வங்கி ஒன்றில் இருந்து நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதம் அல்லது ரொக்கப்பணத்தில் செலுத்தும் இலங்கை ரூபா நூற்று ஐம்பதாயிரத்தின் (இ.ரூபா 150,000.00) விலைமனு பிணை ஒன்றை கொண்டிருத்தல் வேண்டும் என்பதோடு அது விலைமனுக்களை சமர்ப்பிக்கும் திகதியில் இருந்து 2025 ஜனவரி 21 ஆம் திகதி வரை செல்லுபடியாக இருத்தல் வேண்டும்.

11. விலைமனுவுக்கு முந்திய சந்திப்பு யக்கல, கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகத்தில் நிர்வாகக் கட்டிடத்தின் பதிவாளரின் அலுவலகத்தின் (2ஆவது மாடி) கூட்ட அறையில் 2024.09.25 ஆம் திகதி நடத்தப்படும். விலைமனுவுக்கு முந்திய சந்திப்புக்குப் பின்னர் தளப் பயணம் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

**தலைவர்,**
**திணைக்கள பெறுகைக் குழு (சிறிய அளவானது)**
**கம்பஹா விக்ரமாரச்சி சுதேச மருத்துவ பல்கலைக்கழகம்,**
**கண்டி வீதி, யக்கல.**
**2024.09.10**

OBSERVER JOBS

BREAKING BOUNDARIES

THE COUNTRY'S LARGEST RECRUITMENT DATABASE

FOR JOBSEEKERS

www.observerjobs.lk

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம் - கம்பஹா

## சமைத்த உணவு வழங்குதல் – 2025

2025ஆம் வருடத்தில் மேல் மாகாணம், கம்பஹா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவிற்குரித்தான பின்வரும் வைத்தியசாலைகளுக்கு சமைத்த உணவு வழங்குவதற்காக மேல் மாகாணத்தில் வதிவிடத்தைக் கொண்டுள்ள நபர்கள் மற்றும் பதிவு செய்துள்ள வியாபார நிறுவனங்களிடமிருந்து தேசிய போட்டி ரீதியிலான விலைக்கோரல் நடைமுறையின் கீழ் முத்திரை குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| வைத்தியசாலையின் பெயர் | விலைக்கோரல் பிணை முறி | பெறுமதிச் சான்றிதழின் பெறுமதி |
|---|---|---|
| மினுவாங்கொட ஆதார வைத்தியசாலை | 110,000.00 | 100,000.00 |
| தொம்பே பிரதேச வைத்தியசாலை | 70,000.00 | 75,000.00 |
| ரந்தவான பிரதேச வைத்தியசாலை | 85,000.00 | 25,000.00 |
| ஜா-எல பிரதேச வைத்தியசாலை | 60,000.00 | 25,000.00 |
| பமுனுகம பிரதேச வைத்தியசாலை | 35,000.00 | 25,000.00 |
| அகரகம பிரதேச வைத்தியசாலை | 75,000.00 | 25,000.00 |
| பியகம பிரதேச வைத்தியசாலை | 60,000.00 | 25,000.00 |
| உடுபில பிரதேச வைத்தியசாலை | 30,000.00 | 25,000.00 |
| மல்வத்துபிட்டிய பிரதேச வைத்தியசாலை | 55,000.00 | 25,000.00 |

**பொது நிபந்தனைகள்**

➢ 2024-09-10ஆம் திகதி முதல் 2024-10-02ஆம் திகதி வரையான வார நாட்களில் மு.ப. 9.00 மணிக்கும் பி.ப. 2.00 மணிக்கும் இடைப்பட்ட காலத்தில் பின்வரும் முகவரிக்கு எழுத்து மூலமான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பித்து, தேசிய அடையாள அட்டை, வதிவிடம் தொடர்பான கிராம சேவையாளர் சான்றிதழ் மற்றும் சொத்துச் சான்றிதழைச் சமர்ப்பித்து, உரிய விலைக்கோரல் பிணை முறி மற்றும் மீளளிக்கப்படாத விலைமனுக் கட்டணமாக 2000.00 ரூபாவை கம்பஹா பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளருக்குச் செலுத்தி, பற்றுச்சீட்டை சமர்ப்பித்ததன் பின் சமைத்த உணவு வழங்குதல் 2025 என்பதற்கான சிங்கள மொழியிலான விலைக்கோரல் ஆவணங்கள் மற்றும் இயைபுடைய விபரங்களைப் பெற்றுக்கொள்ளலாம்.

➢ ஆர்வமுள்ள விலைமனுதாரர்கள் பின்வரும் முகவரியில் அலுவலக நேரத்தினுள் விலைக்கோரல் ஆவணங்களை இலவசமாகப் பரீட்சித்துப் பார்க்கலாம்.

➢ பூரணப்படுத்திய விண்ணப்பப் படிவங்களை ''மூலப் பிரதி'' மற்றும் ''நகல் பிரதி'' எனத் தனித்தனியான உறைகளில் இட்டு அதன் இடதுபக்க மேல் மூலையில் ''சமைத்த உணவு வழங்குதல் 2025 ........................ வைத்தியசாலை'' எனக் குறிப்பிட்டு 2024-10-03ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு முன் இவ்வலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள கேள்விப் பெட்டியில் உள்ளிடலாம் அல்லது ''தலைவர், பிராந்திய பெறுகைக் குழு, பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம், கச்சேரி கட்டிடத்தொகுதி, கொழும்பு வீதி, கம்பஹா'' எனும் முகவரிக்கு பதிவுத் தபாலில் அனுப்பலாம்.

➢ பிந்திக் கிடைக்கும் விலைமனுக்கள் நிராகரிக்கப்படும் என்பதுடன் விலைமனுக்கள் ஏற்றுக்கொள்ளப்பட்ட உடனடுத்து பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகத்தின் கேட்போர்கூடத்தில் அவைகள் திறக்கப்படும்.

➢ விலைமனுக்கள் திறக்கப்படும் வேளையில் விலைமனுதாரர் அல்லது அவரது அதிகாரபூர்வ பிரதிநிதியொருவர் கலந்துகொள்ளலாம்.

➢ விலைக்கோரலைப் பெற்றுக்கொள்வதற்கான தகைமையைப் பெறுவதற்கு விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியல்படுத்தப்படாதவராக இருத்தல் வேண்டும்.

➢ இவ்விலைமனு கோரல் தொடர்பில் அனைத்து தீர்மானங்கள் எடுக்கும் உரிமையை கம்பஹா மாவட்ட பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலக பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

➢ இவ்விலைமனு கோரல் தொடர்பான மேலதிக தகவல்களை வார நாட்களில் அலுவலக நேரத்தினுள் பின்வரும் தொலைபேசி இலக்கங்களைத் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளலாம்.

தலைவர்,
பிராந்திய பெறுகைக் குழு,
பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் அலுவலகம்,
கச்சேரி கட்டிடத்தொகுதி,
கொழும்பு வீதி, கம்பஹா.

தொலைபேசி: **033 2222873/033 2222874**
தொலைநகல்: **033 2230992**

# விலைமனுக்களுக்கான அழைப்பு

## இலங்கை சனநாயக சோஷலிசக் குடியரசு

## நீர்ப்பாசன அமைச்சு

## நீர்ப்பாசன திணைக்களம் – அம்பாறை மாவட்டம்

# தேசிய போட்டிரீதியான விலைமனு (NCB)

01. அம்பாறை, நீர்ப்பாசன பணிப்பாளர் சார்பில், பிராந்திய பெறுகைக் குழு தலைவரினால் கீழ் குறிப்பிடப்பட்டிருக்கும் வேலைகளுக்காக பொருத்தமான மற்றும் தகுதியுடைய விலைமனுதாரர்களிடம் இருந்து முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்கள் கோரப்படுகின்றன.

| ஒப்பந்த இலக்கம் | வேலை விபரம் | நிர்மாணக் காலம் (வாரம்) | பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் | விலைமனு பிணை | | குறைந்தபட்ச CIDA தரம் | விலைமனு செல்லுபடிக் காலம் (நாட்கள்) |
|---|---|---|---|---|---|---|---|
| | | | | வங்கிக் கட்டளை (இலங்கை ரூபா) | காலம் (நாட்கள்) | | |
| DI/AMP/RM MIS/ POD/2024/ NCB/09 | அம்பாறை பிராந்தியத்தின் பொத்துவில் பிரிவின் கரந்தனோயா திட்டத்தின் 04 bay ஒழுங்காக்கியின் (Regulator) நிர்மாணம் | 30 | பொத்துவில் | 240,000.00 | 105 (2025.01.15) | C6 அல்லது அதற்கு மேல் | 77 |
| DI/AMP/RM MIS/ POD/2024/ NCB/10 | அம்பாறை பிராந்தியத்தின் பொத்துவில் பிரிவின் கரந்தனோயா திட்டத்தின் ஒலிமடு LB கால்வாயின் 0+000 தொடக்கம் 1+000 வரையான கால்வாய் மற்றும் விவசாயப் பாதையை மேம்படுத்தல். | 30 | பொத்துவில் | 260,000.00 | 105 (2025.01.15) | C6 அல்லது அதற்கு மேல் | 77 |
| DI/AMP/RM MIS/ POD/2024/ NCB/11 | அம்பாறை பிராந்தியத்தின் பொத்துவில் பிரிவின் லஹுகல திட்டத்தின் மெத வாய்க்காலினை 0+000 தொடக்கம் 1+410 வரையான மேம்படுத்தல். (முதல் கட்டம்) | 30 | பொத்துவில் | 290,000.00 | 105 (2025.01.15) | C6 அல்லது அதற்கு மேல் | 77 |
| DI/AMP/RM MIS/ POD/2024/ NCB/12 | அம்பாறை பிராந்தியத்தின் அம்பாறை பிரிவின் தமன அலகின் RB 17 கால்வாயின் 6+400 இன் வான் கால்வாயினை மீள் நிர்மாணித்தல் | 30 | அம்பாறை | 108,000.00 | 105 (2025.01.15) | C7 அல்லது அதற்கு மேல் | 77 |

02. வெற்றிகரமான விலைமனுதாரர் நிபந்தனைகளை மீறி இருக்கக் கூடாது என்பதோடு, மேலுள்ள அட்டவணையில் குறிப்பிட்டுள்ளவாறு நீர்ப்பாசன மற்றும் வடிகாலமைப்பு கால்வாய் துறையில், நிர்மாண கைத்தொழில் அதிகாரசபையில் (CIDA) பதிவு செய்திருத்தல் வேண்டும்.

03. இதற்கான விலைமனுக் கோரல் முன்னோடிக் கூட்டம் 2024.09.18ஆம் திகதி 14:00 மணிக்கு அம்பாறை, கச்சேரி வீதி, நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தில் இடம்பெறும். கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளரின் உதவியுடன் (கீழுள்ள அட்டவணையில் குறிப்பிடப்பட்ட திகதி மற்றும் நேரம்) வேலை இடத்தை பரீட்சிக்குமாறும் விலைமனுவுக்கு முந்திய சந்திப்பில் கலந்துகொள்ளும்படியும் எதிர்பார்ப்புடைய விலைமனுதாரர்களிடம் கோரப்படுகிறது.

| வேலை விபரம் | ஆரம்பிக்கும் இடம் | திகதி மற்றும் நேரம் |
|---|---|---|
| அம்பாறை பிராந்தியத்தின் பொத்துவில் பிரிவின் கரந்தனோயா திட்டத்தின் 04 bay ஒழுங்காக்கியின் (Regulator) நிர்மாணம் | பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், பொத்துவில் (தொ.பே. 063-2248396) | திகதி: 2024.09.18 நேரம்: 08.30 மணி |
| அம்பாறை பிராந்தியத்தின் பொத்துவில் பிரிவின் கரந்தனோயா திட்டத்தின் ஒல்லிமடு LB கால்வாயின் 0+000 தொடக்கம் 1+000 வரையான கால்வாய் மற்றும் விவசாயப் பாதையை மேம்படுத்தல். | பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், பொத்துவில் (தொ.பே. 063-2248396) | திகதி: 2024.09.18 நேரம்: 08.30 மணி |
| அம்பாறை பிராந்தியத்தின் பொத்துவில் பிரிவின் லஹுகல திட்டத்தின் மெத எல பாதையின் 0+000 தொடக்கம் 1+410 வரையான மேம்படுத்தல். (முதல் கட்டம்) | பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், பொத்துவில் (தொ.பே. 063-2248396) | திகதி: 2024.09.18 நேரம்: 08.30 மணி |
| அம்பாறை பிராந்தியத்தின் அம்பாறை பிரிவின் தமன அலகின் RB 17 கால்வாய் பாதையின் 6+400 வடி வழியை மீண்டும் நிர்மாணித்தல் | பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகம், அம்பாறை (தொ.பே. 063-2224736) | திகதி: 2024.09.18 நேரம்: 08.30 மணி |

04. இதற்காக ஆர்வமுள்ள விலைமனுதாரர்களுக்கு மேலதிக விபரங்களை அம்பாறை நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து (தொ.பே. 063-2222276) மற்றும் குறித்த பிராந்திய நீர்ப்பாசன பொறியியலாளர் அலுவலகத்தில் இருந்து 09:30 மணி மற்றும் 16:00 மணிக்கு இடையே அலுவலக நேரத்தில் பெற்றுக்கொள்ள முடியும்.

05. ஒவ்வொரு பொதிக்காகவும் மீளளிக்கப்படாத இலங்கை ரூபா 4,000.00 கட்டணம் ஒன்றை செலுத்திய பின் 2024.09.10 ஆம் திகதி தொடக்கம் 2024.10.01 ஆம் திகதி வரை கடமை நாட்களில் 09:00 மணி தொடக்கம் 15:00 மணி வரை அம்பாறை நீர்ப்பாசன பணிப்பாளர் அலுவலகத்தில் இருந்து ஆங்கில மொழியில் தயாரிக்கப்பட்ட விலைமனு ஆவணங்களை பெற்றுக்கொள்ள முடியும். கட்டணம் ரொக்கப்பணத்தில் மேற்கொள்ளல் வேண்டும்.

06. மூல மற்றும் நகல் பிரதிகளைக் கொண்டு பூர்த்தி செய்யப்பட்ட முத்திரைக்குறி பொறிக்கப்பட்ட விலைமனுக்களை 2024.10.02 ஆம் திகதி 14:00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்குமாறு 'நீர்ப்பாசன பணிப்பாளர், நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகம், கச்சேரி வீதி அம்பாறை' என்ற முகவரிக்கு பதிவுத் தபால் மூலம் அனுப்புவதற்கு அல்லது அம்பாறை, கச்சேரி வீதி, நீர்ப்பாசனப் பணிப்பாளர் அலுவலகத்தில் வைக்கப்பட்டுள்ள விலைக்கேட்புப் பெட்டிக்கு இடுவதற்கு முடியும். தாமதித்து கிடைக்கின்ற விலைமனுக்கள் நிராகரிக்கப்படும். விலைமனுக்களை ஏற்பது முடிவுற்ற உடன் அந்த சந்தர்ப்பத்திற்கு வருகை தந்துள்ள விலைமனுதாரர் அல்லது பிரதிநிதி முன்னிலையில் விலைமனுக்கள் திறக்கப்படும்.

07. விலைமனுவுடன் மேலுள்ள அட்டவணையில் விபரிக்கப்பட்டுள்ளவாறு விலைமனு பிணை ஒன்றை இணைத்து அனுப்ப வேண்டும்.

08. பெறுகைக் குழுவின் முடிவு இறுதி முடிவாகும்.

09. விலைமனுக்களை இட்டு அனுப்புகின்ற உறையின் இடது பக்க மேல் மூலையில் வேலையின் விபரம் மற்றும் ஒப்பந்த இலக்கத்தை குறிப்பிடுதல் வேண்டும்.

**தலைவர்,**
**பிராந்திய பெறுகைக் குழு,**
**நீர்ப்பாசன திணைக்களம்,**
**அம்பாறை.**

திகதி: 2024.09.10

# கண்டி மாவட்ட வாக்கு எண்ணும் பணிகள் பொல்கொல்லையில்

(அக்குறணை குறூப் நிருபர்)



நடைபெறவுள்ள ஜனாதிபதி தேர்தலில் கண்டி மாவட்டத்தில் பொல்கொல்லையை மையமாகக் கொண்டு 124 மண்டபங்களில் வாக்கு எண்ணும் பணிகள் இடம்பெறவுள்ளதாக கண்டி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி சந்தன தென்னகோன் தெரிவித்துள்ளார்.

கண்டியில் அண்மையில் இடம்பெற்ற ஊடக சந்திப்பில் கண்டி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி சந்தன தென்னகோன் இதனைத் தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்தில் 11 இலட்சத்து 91 ஆயிரத்து 399 வாக்காளர்கள் வாக்களிக்க தகுதி பெற்றுள்ளதாகவும் அவர் மேலும் தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்தில் பொல்கொல்ல கூட்டுறவுப் பாடசாலை, பொல்கொல்ல திறந்த பல்கலைக்கழகம், பொல்கொல்லை மாதிரிப்பாடசாலை மற்றும் பொல்கொல்ல மஹாவலி கல்வியியற் கல்லூரி ஆகிய இடங்கள் தேர்தல் வாக்கெண்ணும் வலயங்களாக தெரிவு செய்யப்பட்டுள்ளதகவும் அவ்வதிகாரி தெரிவித்தார். மேற்படி நிலையங்களில் மொத்தம் 124 வாக்கெண்ணும் மண்டபங்கள் ஒதுக்கப்பட்டுள்ளதாகவும் கூட்டுறவுப்பாடசாலை பிரதான மண்டபத்தில் இருந்தே கண்டி மாவட்ட தேர்தல் முடிவுகள் அறிவிக்கப்படும் என்றும் அவர் மேலும் தெரிவித்தார்.

கண்டி மாவட்டத்தில் தபால்மூலம் வாக்களிக்க பதிவு செய்யப்பட்ட 55,797 வாக்காளர்களும் மிக அமைதியான முறையில் வாக்களிப்பில் கலந்து கொண்டதாகவும் கண்டி மாவட்ட தெரிவத்தாட்சி அதிகாரி மேலும் தெரிவித்தார்.

அதேநேரம், கண்டி மாவட்டத்தில் தபால் மூல வாக்களிப்பில் இதுவரை எதுவித முறைகேடுகளும் இடம் பெற்றதாக முறைப்பாடுகள் கிடைக்கப் பெறவில்லை எனவும் அவர் மேலும் தெரிவித்தார்.



அநுராதபுரம் மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துமிந்த திஸாநாயக்க, சுயேச்சை வேட்பாளர் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் தேர்தல் விஞ்ஞாபனத்தை அநுராதபுரம் பெரிய ஜும்ஆப் பள்ளிவாசலுக்கு விஜயம் செய்து பிரதம பேஷ் இமாம் மற்றும் நிருவாகிகளுக்கு வழங்கிய போது பிடித்த படம்.

(படம் : அநுராதபுரம் மேற்கு தினகரன் நிருபர்)

# வங்கி அட்டையை பயன்படுத்தி திருட்டு; சந்தேகத்தில் பெண் கைது

(மஸ்கெலியா தினகரன் விசேட நிருபர்)



மஸ்கெலிய மக்கள் வங்கி கிளையில் தன்னியக்க இயந்திரம் ஊடாக கடந்த 03ஆம் திகதி பணம் எடுக்கச் சென்ற பெண்ணின் வங்கி அட்டையை பயன்படுத்தி ரூ.16,000 பணம் சூரையாடப்பட்டுள்ளதாக குறித்த பெண் பொலிஸாரிடம் தெரிவித்துள்ளனர்.

இது குறித்து, மஸ்கெலியா மொக்கா தோட்ட மிட்லோதியன் பிரிவைச் சேர்ந்த ராமன் மாரியாய் மஸ்கெலியா பொலிஸ் நிலையத்தில் செய்த புகாரைத் தொடர்ந்து நேற்று முன்தினம் 8ஆம் திகதி சந்தேகத்திற்கிடமான முறையில் மேற்படி மக்கள் வங்கி கிளை தன்னியக்க இயந்திரம் காணப்படும் பகுதியில் நடமாடிய யுவதி ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். அவரிடம் விசாரணை செய்த போது , இவ்வாறு பல தடவைகள் திருட்டில் ஈடுபட்டு வந்தது வெளியாகி உள்ளது.

சந்தேக நபரான யுவதியை ஹட்டன் நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவுள்ளதாக மஸ்கெலியா பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி புஷ்பகுமார தெரிவித்தார்.

# கஞ்சா சேனைகள் சுற்றிவளைப்பு

(இரத்தினபுரி சுழற்சி நிருபர்)

உடவளவ விசேட அதிரடிப்படை முகாமுக்கு கிடைத்த தகவல் ஒன்றை அடுத்து தனமல்வில அலுத்வெவ காட்டுப் பகுதியில் நடத்தப்பட்டு வந்த மூன்று கஞ்சா சேனைகள் அதிகாரிகளால் நேற்று (9) சுற்றுவளைக்கப்பட்டுள்ளன.

எனினும், மேற்படி சுற்றிவளைப்பில் சந்தேக நபர்கள் எவரும் அவ்விடங்களில் இருக்கவில்லை என அதிகாரிகள் தெரிவித்தனர்.

மேற்படி சுற்றி வளைப்பில் அங்கிருந்த 12 ஆயிரத்திற்கும் அதிகமான கஞ்சா செடிகள் தனமல்வில பொலிஸாரிடம் ஒப்படைக்கப்பட்டதாகவும் ஏனைய கஞ்சா செடிகள் அனைத்தும் அங்கு அழிக்கப்பட்டதாகவும் அதிகாரிகள் தெரிவித்தனர்.


## இலங்கைப் பரீட்சைகள் திணைக்களம்

## விலைமனுக்களுக்கான அழைப்பு (IFB)

### இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சை பெறுபேறு தாள்களை அகப்படமாக்குதல், படமாக்குதல், அட்டவணைப்படுத்தல் மற்றும் DBMS அமுல்படுத்துதல்

### (Scanning, Imaging, Indexing and Implement DBMS of Examination Result Sheets of Department of Examinations)

ஒப்பந்த இல. **4/5/5/scan project**

1. பின்வருமாறு குறிப்பிடப்பட்டுள்ள ஆகக் குறைந்த அனுபவத்தைக் கொண்டுள்ள தகுதி மற்றும் தகைமை வாய்ந்த விலைமனுதாரர்களிடமிருந்து விபரிக்கப்பட்டுள்ளவாறு இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சை பெறுபேறு தாள்களை அகப்படமாக்குதல், படமாக்குதல், அட்டவணைப்படுத்தல் மற்றும் **DBMS** அமுல்படுத்துதல் என்பவற்றை வழங்கும் பெறுகைக்காக முத்திரைக் குறியிடப்பட்ட விலைமனுக்களை இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சைகள் ஆணையாளர் நாயகத்தின் சார்பில் திணைக்கள பெறுகைக் குழுத் தலைவர் கோருகின்றார். விலைமனுக்கோரல் ஆவணத்தில் முழுமையான விபரங்கள் வழங்கப்பட்டுள்ளன.
2. விலைமனுக்கோரல் தேசிய போட்டி ரீதியிலான நடைமுறை (NCB) மூலம் நடாத்தப்படும்.
3. ஒப்பந்தத்தைப் பெறுவதற்காக சித்திகரமான விலைமனுதாரர் அபகீர்த்தியாளர் பட்டியலில் இடம்பெறாதவராகவும் இயைபுடைய பொருட்களை வழங்கும் இதனையொத்த திட்டத்தில் மூன்று வருட அனுபவத்தையுடையவராகவும் இருத்தல் வேண்டும்.
4. விலைமனுதாரர் 1987ஆம் ஆண்டின் 3ஆம் இலக்க பொது ஒப்பந்தங்கள் சட்டத்தின் 6ஆம் பிரிவின் பிரகாரம் பொது ஒப்பந்தங்கள் பதிவாளரினால் வழங்கப்பட்ட செல்லுபடியாகும் தன்மையிலுள்ள சான்றிதழைக் கொண்டிருத்தல் வேண்டும்.
5. ஆர்வமும் தகுதியுமுள்ள விலைமனுதாரர்கள் மேலதிக தகவலை பரீட்சைகள் திணைக்கள 3ஆம் மாடி வழங்கல் பிரிவிலிருந்து பெற்றுக் கொள்ளலாம். (தொலைபேசி: 011-2784393) மற்றும் வேலை நாட்களில் மு.ப. 9.00 மணியிலிருந்து பி.ப. 3.00 மணி வரை விலைமனுக்கோரல் ஆவணங்களை இலவசமாக பரீட்சித்துப் பார்க்கலாம். (2024-09-30ஆம் திகதி).
6. ஒவ்வொரு ஆவணத்திற்கும் (2024-09-30) பி.ப. 3.00 மணி அல்லது அதற்கு முன்னராக மீளளிக்கப்படாத கட்டணமாக 17,000.00 ரூபாவைச் செலுத்திய பின்னர் வியாபார பதிவுச் சான்றிதழின் பிரதியொன்றுடன் எழுத்துருவிலான விண்ணப்பமொன்றைச் சமர்ப்பிப்பதன் மூலம் ஆங்கில மொழியிலுள்ள விலைமனுக்கோரல் ஆவணங்களின் முழுமையான தொகுதியொன்றை வழங்கல் பிரிவிலிருந்து ஆர்வமுள்ள விலைமனுதாரர்களினால் கொள்வனவு செய்யப்படலாம். (பணக்கொடுப்பனவுகளை ரொக்கப் பணத்திலேயே மேற்கொள்ளல் வேண்டும்.)
7. விலைக்கோரல் முன்னோடிக் கூட்டமொன்று 2024-09-19ஆம் திகதி மு.ப. 10.00 மணிக்கு பரீட்சைகள் திணைக்களத்தில் இடம்பெறும்.
8. விலைமனுக்கள் 90 நாட்கள் வரையில் (2024-12-29ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலிருத்தல் வேண்டும்.
9. அனைத்து விலைமனுக்களும் இலங்கையில் செயற்படும் கீர்த்தி வாய்ந்த வர்த்தக வங்கியிலிருந்து பெறப்பட்டதும் நிபந்தனையற்ற வங்கி உத்தரவாதமாகவும் விலைமனு ஆவணங்களுடன் இணைக்கப்பட்ட உருமாதிரியின் பிரகாரம் எட்டு இலட்சம் இலங்கை ரூபாவிற்கான (800,000.00 இலங்கை ரூபா) விலைமனுக்கள் முடிவுறுத்தப்படும் திகதியிலிருந்து 120 நாட்களுக்கு (2025-01-28ஆம் திகதி வரை) செல்லுபடியாகும் தன்மையிலும் இருத்தல் வேண்டும்.
10. விலைமனுக்கள் 2024-10-01ஆம் திகதி பி.ப. 2.30 மணி அல்லது அதற்கு முன்னராக கிடைக்கும் வகையில் பத்தரமுல்ல, பெலவத்த, பரீட்சைகள் திணைக்களம், 03 ஆம் மாடி, வழங்கல் பிரிவிற்கு ஒப்படைக்கப்படல் வேண்டும். தாமதமான விலைமனுக்கள் திறக்கப்படாமலேயே திருப்பி அனுப்பப்படும். விலைமனுக்கள் அவற்றை மூடிய பின்னர் மேலே வழங்கப்பட்டுள்ள முகவரியில் சமுகமளித்திருக்கும் விலைமனுதாரர்கள் அல்லது அவர்களின் பிரதிநிதிகளின் முன்னிலையில் திறக்கப்படும்.
11. உரிய முறையில் பூர்த்தி செய்யப்பட்டு முத்திரையிடப்பட்ட விலைமனுக்கள் தபாலுறையின் இடது பக்க மேல் மூலையில் ''இலங்கைப் பரீட்சைகள் திணைக்களத்தின் பரீட்சை பெறுபேறு தாள்களை அகப்படமாக்குதல், படமாக்குதல், அட்டவணைப்படுத்தல் மற்றும் **DBMS** அமுல்படுத்துதல் என்பவற்றை வழங்குவதற்கான பெறுகை - ஒப்பந்த இல.: **4/5/5/scan project**" என குறிப்பிடப்படல் வேண்டும்.
12. பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு எந்தவொரு பொறுப்பையும் ஏற்படுத்துதல் அல்லது பாதிக்கப்பட்ட விலைமனுதாரர் அல்லது விலைமனுதாரர்களுக்கு தெரிவிக்கவேண்டும் என்ற எவ்விதக் கடப்பாடும் இன்றி ஒப்பந்தத்தை வழங்குவதற்கு முன்னர் எந்நேரத்திலும் எந்தவொரு முயற்சியையும் ஏற்றுக் கொள்வதற்கும் அல்லது நிராகரிப்பதற்கும் அல்லது அனைத்து விலைமனுக்கோரல் செயற்பாட்டை இரத்துச் செய்வதற்கும் எவ்விதக் காரணமும் காட்டாமல் எந்தவொரு விலைமனுவை ஏற்றுக்கொள்ளும் அல்லது அதன் ஒரு பகுதியை ஏற்றுக்கொள்ளும் உரிமையை திணைக்களப் பெறுகைக் குழு தன்னகத்தே கொண்டுள்ளது.

**பரீட்சை ஆணையாளர் நாயகம்,**
**பரீட்சைகள் திணைக்களம்,**
**பெலவத்த,**
**பத்தரமுல்ல.**
**2024-09-09.**



Airport & Aviation Services (Sri Lanka) (Private) Limited

## வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி

## வீடுகள்/ கட்டிடங்களை வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்வதற்காக

வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனியின் யாழ்ப்பாணம் சர்வதேச விமானநிலையத்தின் பதவியணியினருக்காக வதிவிட வசதிகளை வழங்கும்பொருட்டு வாடகை அடிப்படையில் பொருத்தமான வீடுகள்/ கட்டிடங்களைப் பெற்றுக்கொள்வதற்காக கம்பனியின் மூலம் முன்மொழிவுகள் அழைக்கப்படுகின்றன.

உரிய வீடுகள்/ கட்டிடங்கள் மிகவும் சிறந்த நிலையில் இருப்பது அவசியம் என்பதுடன் கீழே குறிப்பிடப்பட்டுள்ளவாறு தேவைப்பாடுகள் நிறைவு செய்திருத்தல் வேண்டும்.

01. பலாலி விமானநிலையத்திற்கு அண்மையில் மற்றும் பலாலி விமானநிலையத்திற்கு எளிதாக அணுக முடியுமாக இருக்க வேண்டும். பலாலி/ காங்கேசந்துரை மற்றும் யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
02. வரவேற்பறை/ உணவறை/ படுக்கையறைகள் (குளிரூட்டப்பட்ட அறைகள் விரும்பப்படுகின்றன) இணைக்கப்பட்டுள்ள குளியலறை அல்லது பொதுவான குளியலறைகள் மற்றும் சமையலறை
03. அனைத்து விதமான வீட்டுத் தளபாடங்களுடன் இருத்தல் வேண்டும்.
04. போதுமானளவு வாகனங்களை நிறுத்தும் வசதிகள்
05. தொடர்வாரியான நீர்/ மின்சார விநியோகம்

வீடுகள்/கட்டிடங்கள் முதலாவதாக 06 மாதங்களுக்கு வாடகை அடிப்படையில் பெற்றுக்கொள்ளப்பட்டு பின்னர் கம்பனியின் தேவைப்பாட்டின் அடிப்படையில் இரு தரப்பினரினதும் இணக்கப்பாட்டுடன் அக்காலத்தினை நீடித்துக் கொள்ள முடியும்.

கீழே தரப்பட்டுள்ள காரணங்கள் முன்மொழிவில் உள்ளடங்கப்பட்டிருத்தல் வேண்டும்.

01. வீடுகள்/ கட்டிடங்கள் தொடர்பான முழு விபரம்

| | |
|---|---|
| 1) பெயர் (வீட்டின்/ கட்டிடத்தின் உரிமையாளர்) | 9) படுக்கையறைகளின் எண்ணிக்கை (குளிரூட்டம் செய்யப்பட்ட/ குளிரூட்டம் செய்யப்படாத) |
| 2) வீட்டு/ கட்டிடத்தின் முகவரி | 10) குளியலறைகள்/ கழிப்பறைகளின் எண்ணிக்கை (பொதுவான/ இணைக்கப்பட்ட) |
| 3) உரிமையாளரின் தொலைபேசி இலக்கம் | 11) வரவேற்பறை (உண்டு/ இல்லை) |
| 4) பிரதேச செயலகப் பிரிவு | 12) சாப்பாட்டு அறை (உண்டு/ இல்லை) |
| 5) கிராமசேவகர் பிரிவு | 13) சமையலறை (உண்டு/ இல்லை) |
| 6) பலாலி விமானநிலையத்திற்குள்ள தூரம் (கி.மீ) | 14) வாகன நிறுத்துமிட வசதிகள் (உண்டு / இல்லை) |
| 7) மாடிகளின் எண்ணிக்கை | 15) அனைத்துவித வீட்டுத்தளபாடங்கள் (உண்டு/ இல்லை) |
| 8) வீட்டின் பரப்பளவு (சதுரடி) | 16) வேறு ஏதேனும் தொடர்புடைய விவரங்கள். |

02. வீட்டின்/ கட்டிடத்தின் உரிமையாளரின் தேசிய அடையாள அட்டையின் பிரதி.
03. வீட்டின்/ கட்டிடத்தின் உரிமையாளரின் காணியுறுதியின் பிரதி.
04. வீட்டின்/ கட்டிடத்தின் புகைப்படங்கள்.
05. எதிர்பார்க்கப்படும் மாத வாடகை.

முறையாக பூர்த்தி செய்யப்பட்ட முன்மொழிவுத் தாள் முத்திரை குறியிடப்பட்ட உறை ஒன்றில் இட்டு இடதுபக்க மேல் மூலையில் வீடுகள்/ கட்டிடங்களை வாடகைக்குப் பெறுவதற்கான முன்மொழிவுகள் என குறிப்பிட்டு “தவிசாளர், திணைக்கள பெறுகைக் குழு, இலக்கம் 02, வழங்கல்தொடர் முகாமைத்துவ பிரிவு, வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி கட்டுநாயக்கவிற்கு 2024 ஒக்டோபர் மாதம் 01 ஆந் திகதி பி.ப 2.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு அனுப்புதல் வேண்டும்.

மேலதிக தவல்களைப் பெறுவதற்காக 112263550/ 011-2263513 என்ற தொலைபேசி இலக்கங்களை அழைக்கவும்.

**தவிசாளர்,**
**வரையறுக்கப்பட்ட விமானநிலைய மற்றும் விமானசேவைகள் (இலங்கை) கம்பனி,**
**பண்டாரநாயக்க சர்வதேச விமானநிலையம்,**
**கட்டுநாயக்க**



## வழங்குநர்களைப் பதிவு செய்தல் – 2025ஆம் வருடம்

## நாத்தாண்டிய பிரதேச சபை

2025ஆம் வருடத்திற்காக நாத்தாண்டிய பிரதேச சபைக்குத் தேவையான கீழ்க்குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள், வேலைகள் மற்றும் சேவைகளை பெற்றுக்கொள்வதற்கான வழங்குநர்கள் பதிவு செய்து கொள்ளப்படுவர்.

**பொருட்கள் வழங்கல்**

1. மேசை, கதிரை, அலுமாரி, கோவை கெபினட் போன்ற அலுவலக உபகரணங்கள் (உருக்கு, பலகை, பிளாஸ்டிக்)
2. அலுவலக வேலைகளுக்குத் தேவையான காகிதாதிகள் மற்றும் உபகரணங்கள்.
3. துப்புரவேற்பாட்டுச் சேவைக்குத் தேவையான பொருட்கள் (சவர்க்காரம், பைனோல், ஹார்பிக், விளக்குமார், அரிவாள், கத்தி, குப்பைத்தொட்டி, டெட்டோல், கை வண்டி, மண்வெட்டி, தும்புத்தடி, பிரம்புக் கூடை)
4. வீதி நிர்மாணப் பொருட்கள் (கருங்கல், ஏபீசீ, சிப்ஸ், சரளைக் கற்கள், மணல், சீமெந்து, இரும்பு, கொலாஸ், தார், பலகைகள், விறகு)
5. கட்டிட நிர்மாணப் பொருட்கள் (கருங்கல், செங்கல், சரளைக் கற்கள், மணல், ஓடுகள், சீமெந்து, இரும்பு, நிறப்பூச்சுகள், தார், பலகைகள்)
6. நீர்க்குழாய் உதிரிப்பாகங்கள், நீர்மானிகள், நீர்ப் பம்பிகள்
7. ஹியும் குழாய் மற்றும் கொங்கிறீட் உற்பத்திகள்
8. அலுவலக வேலைகளுக்குத் தேவையான இயந்திராதிகள் (அச்சு இயந்திரம், புகைப்படப் பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம், கணனி, டுப்ளோ இயந்திரம், வளிச்சீராக்கி இயந்திரங்கள், ஒலிபெருக்கி உபகரணங்கள்)
9. புகைப்படப் பிரதி இயந்திரம், டுப்ளோ இயந்திரம் மற்றும் அச்சு இயந்திரத்திற்குத் தேவையான மைகள், டோனர்
10. கெப் வண்டிகள், கென்டர், டிரக்டர், முச்சக்கர வண்டி, பெக்கோ இயந்திரம், மோட்டர் கிரேடர்களுக்குத் தேவையான டயர்/ டியூப்/ ரிம்டேப்/ பற்றரி மற்றும் உதிரிப்பாகங்கள் (அதிகாரப் பிரதேசத்தினுள் அல்லது அதற்கு அன்மையில் அமைந்திருத்தல் வேண்டும்)
11. மின் விளக்குகளைப் பராமரிப்பதற்குத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள்
12. நாய்களுக்கான கழுத்துப் பட்டி
13. குப்பைகளை அப்புறப்படுத்தும் வேலைகளுக்குத் தேவையான பொருட்கள் மற்றும் உபகரணங்கள் (பொலித்தீன் உறைகள், குப்பைத் தொட்டிகள், சேதனப் பசளைத் தொட்டிகள்)
14. உபசாரங்களுக்குத் தேவையான உணவு பானங்கள்
15. பூந்தோட்ட அலங்காரத்திற்குத் தேவையான உபகரணங்கள் (பூக் கன்றுகள், பழமரக் கன்றுகள், பூச்சாடிகள்)
16. சிறுவர் பூங்காவுக்குத் தேவையான விளையாட்டு உபகரணங்கள் மற்றும் விளையாட்டுப் பொருட்கள்
17. குடி நீர் போத்தல்கள்
18. மருந்துகள் மற்றும் மருத்துவ உபகரணங்கள்
19. எரிபொருள் மற்றும் எரிவாயு
20. திரைச்சீலைகள், துணிகள், கொடிகள் மற்றும் சீருடைகள் (சாரிகள், டீ சேர்ட்கள், விளையாட்டு உடைகள்)
21. ஞாபகச் சின்னங்கள் மற்றும் பரிசுப் பொருட்கள்
22. பாடசாலை மாணவர்களுக்கு வழங்குவதற்குத் தேவையான உபகரணங்கள் (பைகள், உணவுப் பெட்டிகள், தண்ணீர் போத்தல்கள்)
23. CCTV கெமரா முறைமைகளைப் பொருத்துதல் மற்றும் உள்ளக தொலைபேசி முறைமைகளைப் பொருத்துதல்

**வேலை மற்றும் சேவை வழங்கல்**

1. அச்சிடல் சேவைகள் மற்றும் முத்திரைகளைத் தயாரித்தல்
2. அலுவலக இயந்திராதிகளைப் பழுதுபார்த்தல் (அச்சு பொறிகள், புகைப்படப் பிரதி இயந்திரம், தொலைநகல் இயந்திரம், கணனி, டுப்ளோ இயந்திரம், வளிச்சீராக்கி இயந்திரங்கள், ஒலிபெருக்கி உபகரணங்கள்)
3. CCTV கெமரா முறைமைகளைப் பொருத்துதல் மற்றும் உள்ளக தொலைபேசி முறைமைகளின் திருத்தவேலைகள்
4. பெயர்ப் பலகை, அறிவித்தல் பலகை, பதாகைகள் தயாரித்தல்
5. கட்டிட, வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்புச் சேவை 5 இலட்சம் ரூபாவிற்கு குறைவானவை
6. கட்டிட, வீதி நிர்மாணம் மற்றும் பராமரிப்புச் சேவை 5 இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்டவை (இக்டாட் பதிவுடன்)
7. வீதிகள், பாலங்கள், மதகுகள், வடிகான்கள் நிர்மாண சேவை ஒப்பந்தங்கள் 5 இலட்சம் ரூபாவிற்கு குறைவானவை
8. வீதிகள், பாலங்கள், மதகுகள், வடிகான்கள் நிர்மாண சேவை ஒப்பந்தங்கள் 5 இலட்சம் ரூபாவிற்கு மேற்பட்டவை (இக்டாட் பதிவுடன்)
9. மேசன் வேலை, தச்சு வேலை, வெல்டிங் வேலை, நீர்க்குழாய் தொழில்நுட்ப சேவைகள், உள்ளக தொலைபேசி சேவைகள்
10. வீதி சமப்படுத்தல், டோஸர் இயந்திரம், எக்ஸ்கவேட்டர் இயந்திரங்களை வாடகைக்கு அமர்த்துதல் மற்றும் போக்குவரத்துச் சேவைகளை வழங்கல் (கிரவல் போக்குவரத்து)
11. கெப் வண்டி, கென்டர், டிரக்டர், முச்சக்கர வண்டி, பெக்கோ இயந்திரம், மோட்டர் கிரேடர் திருத்தவேலைகள் மற்றும் சேர்விஸ் செய்தல் (அதிகாரப் பிரதேசத்திற்குள் அல்லது அதற்கு அருகாமையில் இருத்தல் வேண்டும்)
12. ஒலிபெருக்கி, விழாக்களுக்கான பொருட்களை வாடகைக்கு வழங்குதல்
13. சட்டத்தரணிகள் சேவை மற்றும் நில அளவைச் சேவை வழங்கல்
14. நீர் பம்பி திருத்தவேலைகள்
15. ஆய்வுகூட சேவைகள்
16. குழாய்க் கிணறுகளை நிர்மாணித்தல்
17. பாதுகாப்பு சேவைகள் வழங்குதல்
18. மரங்களை வெட்டுதல்

பதிவிற்காக இங்கு தரப்படும் விண்ணப்பத்தினைப் பயன்படுத்துதல் வேண்டும். ஒரு வழங்கலுக்காக ரூ. 2000.00 கட்டணம் செலுத்திப் பதிவு செய்தல் வேண்டும். காசோலை, காசுக்கட்டளைகளை நாத்தாண்டிய பிரதேச சபையின் பெயரில் எழுதுதல் வேண்டும். விண்ணப்பங்களை ஏற்றுக்கொள்ளல் 2024.11.29ஆம் திகதி பி.ப. 2.30 மணிக்கு நிறைவுறும். விண்ணப்பத்தினை தாங்கி வரும் கடித உறையின் இடதுபக்க மேல் மூலையில் **''வழங்குநர்களைப் பதிவு செய்தல் - 2025ஆம் வருடம்''** எனக் குறிப்பிடுதல் வேண்டும்.

- ❖ வழங்குநர்களின் வியாபாரத்திற்காக வியாபாரப் பதிவுச் சான்றிதழ் அல்லது அனுமதிப் பத்திரத்தினைப் பெற்றிருத்தல் கட்டாயமாகும்.
- ❖ பதிவுச் சான்றிதழில் குறிப்பிடப்பட்டுள்ள பொருட்கள், சேவைகள் மற்றும் வேலைகளுக்காக மட்டும் பதிவு செய்தல் வேண்டும்.
- ❖ பொருட்கள் மற்றும் சேவைகள் வழங்குவதிலுள்ள அனுபவம் தொடர்பான சான்றிதழின் புகைப்படப் பிரதியினை இணைத்து அனுப்புதல் வேண்டும்.
- ❖ பதிவினை வழங்குவது தொடர்பான இறுதித் தீர்மானம் நாத்தாண்டிய பிரதேச சபைக்குரியது.
- ❖ வெட் வரிச் சான்றிதழினையுடையவர்கள் வெட் வரிச் சான்றிதழினையும் இணைத்து அனுப்புதல் வேண்டும்.
- ❖ தேவைப்பாடுகளுக்கமைய பதிவு செய்யப்பட்ட வழங்குநர்களுக்குப் புறம்பாக பொருட்கள் மற்றும் சேவைகளைப் பெற்றுக்கொள்ளும் உரிமையை சபை தன்னகத்தே கொண்டுள்ளது.

**கே.ஆர்.பீ.ஜீ.ஆர். கருணாநாயக்க**
**செயலாளர்,**
**நாத்தாண்டிய பிரதேச சபை**

2024.09.10
**பிரதேச சபை, அலுவலகம்,**
**நாத்தாண்டிய.**
**தொலைபேசி: 032-2254276 / 032-4934148**

## நாத்தாண்டிய பிரதேச சபை

### 2025ஆம் வருடத்திற்கு வழங்குநர்களைப் பதிவு செய்வதற்கான விண்ணப்பம்

வழங்குநரின் பெயர் : ........................................
முகவரி : ........................................
அடையாள அட்டை இலக்கம் : ........................................
தொலைபேசி இலக்கம் : .................... தொலைநகல் இல. ....................
மின்னஞ்சல் முகவரி : ........................................
வழங்கப்படுகின்ற 1. பொருள்: ........................................
2. சேவை: ........................................
3. வேலை: ........................................

பொருள் / சேவை வழங்கல் தொடர்பாக பெற்றுள்ள அனுபவம்: 1. ....................
2. ....................
3 ....................

இக்டாட் பதிவு இலக்கம் / வியாபாரப் பதிவு இலக்கம்: ........................................

பதிவுக் கட்டணம் ரூ.................................... (ஒரு விடயத்துக்காக 2000.00 ரூபா)

காசோலை இலக்கம் / காசுக்கட்டளை இலக்கம்: ........................................

மேலே குறிப்பிடப்பட்டுள்ள விபரங்கள் சரியானது என்பதையும் குறித்த பதிவுச் சான்றிதழை இத்துடன் இணைத்துள்ளேன் என்பதையும் இத்தால் உறுதிப்படுத்துகிறேன். வழங்குநர்களைப் பதிவு செய்வதற்குரிய விளம்பரத்தில் குறிப்பிடப்பட்டுள்ள நிபந்தனைகளுக்கு இணங்குகிறேன்.


**திகதி:**.................... ....................
**கையொப்பம்**

**அலுவலக உபயோகத்திற்காக**

விடயப்பொறுப்பதிகாரியின் பரிந்துரை: ........................................
விடயப் பொறுப்பதிகாரியின் கையொப்பம்: .................... திகதி: ....................
பி/சேவை/ அதிகாரி பரிந்துரை: .................... செயலாளர் ஒப்புதல்: ....................

.................... ....................
**பி/சேவை/ அதிகாரி** **செயலாளர்**

பற்றுச்சீட்டு இலக்கம்: .................... திகதி: ....................
பதிவேட்டின் பக்க இலக்கம்: ........................................



# பத்து ஆண்டுகளின் பின் இலங்கை அணி இங்கிலாந்துக்கு எதிராக டெஸ்ட் வெற்றி



Sri Lanka Cricket
தேசிய கிரிக்கெட் அணியின் உத்தியோகபூர்வ அனுசரணையாளர்
Dialog
எதிர்காலம் இன்றே.

பத்தும் நிசங்கவின் அபார சதத்தின் உதவியோடு இங்கிலாந்துக்கு எதிராக 8 விக்கெட்டுகளால் வெற்றியீட்டிய இலங்கை அணி 10 ஆண்டுகளில் முதல் முறையாக இங்கிலாந்தை டெஸ்ட் போட்டி ஒன்றில் வீழ்த்தியுள்ளது.

லண்டன் ஓவல் மைதானத்தில் நடைபெற்ற போட்டியின் நான்காவது நாளான நேற்று (09) 219 ஓட்ட வெற்றி இலக்கை நோக்கி தனது இரண்டாவது இன்னிங்ஸை தொடர்ந்த இலங்கை அணிக்கு ஆரம்ப வீரர் பத்தும் நிசங்க சிறப்பாக செயற்பட்டார். 124 பந்துகளுக்கு முகம் கொடுத்த அவர் 13 பௌண்டரிகள் மற்றும் 2 சிக்ஸர்களுடன் ஆட்டமிழக்காது 127 ஓட்டங்களைப் பெற்றார்.

இதன்மூலம் இலங்கை அணி 40.3 ஓவர்களில் 2 விக்கெட்டுகளை இழந்து வெற்றி இலக்கான 219 ஓட்டங்களை எட்டியது.

இந்த டெஸ்ட் போட்டியில் முதலில் துடுப்பெடுத்தாட பணிக்கப்பட்ட இங்கிலாந்து அணி முதல் இன்னிங்ஸுக்கு 325 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் இலங்கை அணி தனது முதல் இன்னிங்ஸுக்காக 263 ஓட்டங்களை எடுத்தது. இந்நிலையில் தனது இரண்டாவது இன்னிங்ஸை ஆரம்பித்த இங்கிலாந்து அணி 156 ஓட்டங்களுக்கே சுருண்டது.

லஹிரு குமார 4 விக்கெட்டுகளை வீழ்த்தியதோடு விஷ்வ பெர்னாண்டோ 3 விக்கெட்டுகளை பதம்பார்த்தார்.

இலங்கை அணி கடைசியாக இங்கிலாந்து அணிக்கு எதிரான டெஸ்ட் போட்டி ஒன்றில் வென்றது 2014 ஜூன் மாதத்திலாகும். எனினும் இலங்கை அணி இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரை 1–2 என இழந்தமை குறிப்பிடத்தக்கது.



## சர்வதேச செய்திகள்

# பங்களாதேஷ் அரசியல் பதற்றத்தால் ஆடைத் தொழில்துறை கடும் பாதிப்பு

பங்களாதேஷ் பிரதமர் ஷெய்க் ஹசீனாவை பதவி கவிழ்த்த ஆர்ப்பாட்டத்தை அடுத்து அந்நாட்டின் ஆடைத் தொழில் துறை நிச்சமற்ற நிலையை எதிர்கொண்டுள்ளது.

பங்களாதேஷுக்கு ஆண்டுக்கு 55 பில்லியன் டொலர் வருவாயை ஈட்டித்தரும் ஆடைத் தொழில்துறையில் பல தொழில்சாலைகளும் மூடப்படும் நிலைக்குத் தள்ளப்பட்டுள்ளன. தேசிய அளவில் ஏற்பட்டுள்ள இணையதள முடக்கங்கள் காரணமாக குறைந்தது நான்கு தொழிற்சாலைகளை மூடும் நிலைக்குத் தள்ளப்பட்டிருப்பதாக செய்தி வெளியாகியுள்ளது.

இதில் பல நிறுவனங்களும் வேறு நாடுகளைத் தேடிச் செல்வதாகவும் கூறப்படுகிறது.

அரசியல் பதற்றத்திற்கு மத்தியில் இடையூறுகள் தொடரும் நிலையில் தலைநகர் டாக்காவின் புறநகர் பகுதியில் இருக்கும் சுமார் 60 தொழிற்சாலைகள் தொழிலாளர் இடையே ஏற்பட்டிருக்கும் கொந்தளிப்புகள் காரணமாக மூடப்படுவதற்கு வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. அதிக சம்பளம் உட்பட பல கோரிக்கைகளையும் முன்வைத்து ஊழியர்கள் ஆர்ப்பாட்டங்களை நடத்தி வருகின்றனர்.

அண்மைய சம்பவங்கள் நிறுவனங்கள் இடையே நம்பிக்கையை குறைத்து வருவதாக நாட்டின் ஆடை உற்பத்தி மற்றும் ஏற்றுமதி சங்கத்தின் பணிப்பாளர் முஹியுத்தீன் ருபெல் பி.பி.சி. செய்தி நிறுவனத்திற்கு குறிப்பிட்டுள்ளார்.

அண்மைய அரசியல் பதற்றம் இந்த ஆண்டு ஏற்றுமதியில் 10 தொடக்கம் 20 வீத வீழ்ச்சியை ஏற்படுத்தி இருப்பதாக கூறப்பட்டுள்ளது. பங்களாதேஷ் ஏற்றுமதி வருவாயில் 80 வீதமானது ஆடைத் தொழில் துறையில் தங்கி இருக்கும் நிலையில் இந்த எண்ணிக்கை கணிசமாக இருப்பதாகவும் குறிப்பிடப்பட்டுள்ளது.

கடந்த ஓகஸ்டில் பிரதமர் ஷெய்க் ஹசீனாவை பதவி விலகச் செய்த பல வாரங்கள் நீடித்த ஆர்ப்பாட்டத்தில் நூற்றுக்கணக்கானோர் கொல்லப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# பதவிக் காலத்தில் 532 நாட்கள் விடுமுறை எடுத்த ஜோ பைடன்



அமெரிக்க ஜனாதிபதி ஜோ பைடன் தனது 4 வருட பதவிக் காலத்தில் 532 விடுமுறை நாட்களை எடுத்துள்ளார் என்று நியூயோர்க் போஸ்ட் தெரிவித்துள்ளது. இது ஒரு சராசரி அமெரிக்க அலுவலக ஊழியர் 48 ஆண்டுகளில் எடுக்கும் சராசரி விடுமுறை நாட்களைப் போன்றது என்று குடியரசுக் கட்சியின் தேசியக் குழு ஆய்வு தெரிவிக்கிறது.

ஓர் அமெரிக்க அலுவலக ஊழியர் ஆண்டுக்கு சராசரியாக 11 விடுமுறை நாட்களைப் பெறுகிறார் என்று நியூயோர்க் போஸ்ட் கூறியது. அதன் படி, ஜனாதிபதி பைடன் தனது நான்கு வருட காலத்தில் ஓர் அமெரிக்க அலுவலக ஊழியர் 50 ஆண்டுகளுக்கு எடுக்கும் சராசரி விடுமுறை நாட்களை அனுபவித்துள்ளார்.

81 வயதான ஜனாதிபதி பைடன் தனது 1326 நாள் பதவிக்காலத்தில் 532 நாட்களை விடுமுறையில் கழித்துள்ளார். அதாவது அவர் தனது பதவிக் காலத்தில் 40 வீதத்தை விடுமுறைக்காக எடுத்துக் கொண்டுள்ளார் என்று நியூயோர்க் போஸ்ட் செய்தித்தாள் சுட்டிக்காட்டியுள்ளது.

# நைஜீரியாவில் எரிபொருள் லொறி மோதி 48 பேர் பலி



நைஜீரியாவின் மத்திய மாநிலமான நைகரில் எண்ணெய் கொள்கலன் லொறி ஒன்று பயணிகள் மற்றும் கால்நடைகளை ஏற்றிய லொறியுடன் மோதிய விபத்தில் 48 பேர் பலியாகியுள்ளனர். '

கடந்த ஞாயிற்றுக்கிழமை (08) இடம்பெற்ற இந்த விபத்தை அடுத்து இரு வாகனங்களும் பெரும் வெடிப்புடன் தீப்பற்றி எரிந்ததாக நைகர் மாநில அவசர முகாமைத்துவ நிறுவனம் தெரிவித்துள்ளது. இதன் போது அருகில் இருந்த மற்ற வாகனங்களும் தீப்பற்றியுள்ளன.

இரு வாகனங்களும் தீயில் முழுமையாக கருகி இருப்பது மற்றும் கணிசமான கால்நடைகள் கொல்லப்பட்டிருப்பது சம்பவ இடத்தில் இருந்து பிடிக்கப்பட்ட படங்களில் தெரிகிறது. வாகனத்துக்குள் இருந்து கருகிய சடலங்கள் மற்றும் கால்நடைகளின் உடல்களை மீட்டதாக மீட்புப் பணியாளர்கள் தெரிவித்துள்ளனர்.

நைஜீரியாவில் வீதிகள் மிக மோசமான நிலையில் இருப்பதால் எரிபொருள் கொள்கலன் லொறிகள் அங்கே அடிக்கடி விபத்துக்கு உள்ளாவதாகக் கூறப்படுகிறது. 2020 ஆம் ஆண்டில் மாத்திரம் நைஜிரியாவில் 1,513 எரிபொருள் கொள்கலன் லொறிகள் விபத்துக்குள்ளாகி 553 பேர் உயிரிழந்திருப்பதோடு 1,142 பேர் காயமடைந்ததாக நைஜீரிய மத்திய வீதி பாதுகாப்பு நிறுவனம் தெரிவித்தள்ளது.

# யாகி சூறாவளி பாதிப்பால் வியட்நாமில் 59 பேர் பலி



யாகி சூறாவளியால் ஏற்பட்ட மழை, வெள்ளம் மற்றும் நிலச்சரிவுகளில் வியட்நாமில் குறைந்து 59 பேர் உயிரிழந்திருப்பதாக அந்நாட்டு அரச ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

ஆசியாவில் இந்த ஆண்டு ஏற்பட்ட சக்திமிக்க சூறாவளியாக சீனா மற்றும் பிலிப்பைன்ஸ் நாடுகளில் சேதத்தை ஏற்படுத்திய நிலையில் கடந்த சனிக்கிழமை வியட்நாமின் வடகிழக்கு கடற்கரையை யாகி சூறாவளி தாக்கியது.

இதில் பலியானவர்களில் வடமேற்கு வியட்நாமின் மலைப்பிராந்தியத்தில் நிலச்சரிவு ஒன்றில் கொல்லப்பட்ட புதிதாக பிறந்த குழந்தை மற்றும் ஒரு வயது ஆண் குழந்தை உட்பட ஆறு பேரும் அடங்குவர். அதேபோன்று நேற்றுக் காலை 20 பேருடன் சென்ற பஸ் வண்டி ஒன்று வெள்ள நீரில் அடித்துச் செல்லப்பட்டுள்ளது.

ஹங் போங் நகரிலிருந்து 'யாகி' தற்போது லாவோஸ் நோக்கிச் சென்றுகொண்டிருக்கிறது. வேகம் குறைந்தவுடன் தேடல் மீட்புப் பனிகள் நேற்று ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

சூறாவளி காரணமாக 50,000 பேர் வீடுகளிலிருந்து வெளியேற்றப்பட்டுள்ளனர். நாட்டின் பல பகுதிகளிலும் மின்சாரம் மற்றும் தொலைத்தொடர்புகள் துண்டிக்கப்பட்டிருப்பதாக வியட்நாம் அரசு குறிப்பிட்டுள்ளது.

# இஸ்ரேலிய தாக்குதல்களால் சிரியாவில் 16 பேர் உயிரிழப்பு



மத்திய சிரியாவில் உள்ள பல இராணுவ தளங்கள் மீது இஸ்ரேல் நடத்திய வான் தாக்குதல்களில் குறைந்தது 16 கொல்லப்பட்டதாக சிரிய அரச செய்தி நிறுவனம் தெரிவித்துள்ளது.

ஹமா மாகாணத்தில் மஸ்யாப் நகரைச் சூழ கடந்த ஞாயிற்றுக்கிழமை இடம்பெற்ற இந்தத் தாக்குதல்களில் மேலும் 43 பேர் காயமடைந்ததாக சானாவை தளமாகக் கொண்ட மருத்துவமனை ஒன்றின் பணிப்பாளர் ஒருவர் தெரிவித்துள்ளார்.

மிஸ்யாபுக்கு அருகில் இருக்கும் இரசாயன ஆயுத தயாரிப்புக்கான பிரதான இராணுவ ஆராய்ச்சி நிறுவனம் பல முறை தாக்கப்பட்டிருப்பதாக உளவு வட்டாரங்களை மேற்கோள்காட்டி செய்தி வெளியாகியுள்ளது. ஈரானிய இராணுவ நிபுணர்கள் இங்கு ஆயுத உற்பத்தியில் ஈடுபட்டிருப்பதாக நம்பப்படுகிறது.

இந்தத் தாக்குதலால் இரு இடங்களில் தீ பரவி இருப்பதாகவும் அதனை கட்டுப்படுத்த தீயணைப்புப் படையினர் போராடி வருவதாகவும் சிரிய அரச ஊடகம் தெரிவித்துள்ளது.

சிரிய வான் பாதுகாப்பு அமைப்பு சில ஏவுகணைகளை இடைமறித்து அழித்திருப்பதாகவும் அங்கிருந்து வரும் செய்திகள் கூறுகின்றன.

இது தொடர்பில் இஸ்ரேல் தரப்பிடம் இருந்து எந்த பதிலும் அளிக்கப்படவில்லை. வெளிநாடுகளில் இடம்பெறும் தாக்குதல்கள் தொடர்பில் இஸ்ரேல் வழக்கமாக பொது வெளியில் பதில் அளிப்பதில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

காசாவில் போர் வெடித்தது தொடக்கம் சிரியாவிலும் இஸ்ரேலின் தாக்குதல்கள் தீவிரம் அடைந்துள்ளன. கடந்த ஏப்ரலில் இஸ்ரேல் போர் விமானங்கள் ஈரான் தூதரகம் மீது குண்டு வீசி இருந்தமை குறிப்பிடத்தக்கது.

இதேவேளை காசாவில் இஸ்ரேலின் தாக்குதல்கள் தொடர்ந்து இடம்பெற்று வருவதோடு 12 மாதமாக நீடிக்கும் தாக்குதல்களில் கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 41 ஆயிரத்தை நெருங்கியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# காசாவில் அனைத்து வகுப்புகளும் மூடப்பட்ட நிலையில் புதிய பாடசாலை ஆண்டு ஆரம்பம்



காசாவில் 11 மாதங்களாக நீடிக்கும் போரில் அனைத்துப் பாடசாலைகளும் மூடப்பட்டு, போர் நிறுத்தம் ஒன்றுக்கான வாய்ப்புகள் குறுகி வரும் நிலையில் நேற்று (09) பாடசாலை ஆண்டு உத்தியோகபூர்வமாக ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இஸ்ரேலை நோக்கி பலஸ்தீன போராளிகள் புதிய ரொக்கெட் தாக்குதல்களை நடத்திய நிலையில் வடக்கு காசாவில் இஸ்ரேலியப் படை புதிய வெளியேற்ற உத்தரவை பிறப்பித்துள்ளது. காசாவில் தாக்குதல்கள் தொடரும் நிலையில் அங்கு கொல்லப்பட்ட பலஸ்தீனர்கள் எண்ணிக்கை 41 ஆயிரத்தை நெருங்கியுள்ளது.

இந்நிலையில் காசாவில் பாடசாலைகள் மூடப்பட்டிருப்பதோடு அவற்றில் 90 வீதமானவை இஸ்ரேலிய தாக்குதல்களால் அழிக்கப்பட்டு அல்லது சேதமாக்கப்பட்டுள்ளன. இதில் பெரும்பாலானவை இடம்பெயர்ந்த பலஸ்தீனர்களின் அடைக்கலமாக மாறியுள்ளன.

'குழந்தைகள் எவ்வளவு காலம் பாடசாலையை விட்டு வெளியேறுகிறார்களோ, அந்த அளவுக்கு அவர்கள் இழந்த கற்றலைப் பிடிப்பது மிகவும் கடினம். மேலும், அவர்கள் இழந்த தலைமுறையாக மாறுவதற்கான வாய்ப்புகள் அதிகம். குழந்தைத் திருமணம், குழந்தைத் தொழிலாளர் மற்றும் ஆயுதக் குழுக்களில் ஆட்சேர்ப்பு உள்ளிட்ட சுரண்டலுக்கு இரையாகின்றனர்' என்று பலஸ்தீன அகதிகளுக்கான ஐ.நா. நிறுவனத்தின் தொடர்பாடல் பணிப்பாளர் ஜூலிட் டூபா ரோய்ட்டர்ஸ் செய்தி நிறுவனத்திற்கு தெரிவித்துள்ளார்.

ஏற்கனவே பாடசாலை கல்வியை பெற்று வரும் 625,000 காசா மாணவர்கள் புதிய பாடசாலை ஆண்டை இழந்திருப்பதோடு மேலும் ஆறு வயது நிரம்பிய சுமார் 58,000 சிறுவர்கள் முதலாம் தரத்துக்காக பாடசாலையில் இணைவதும் தடுக்கப்பட்டிருப்பதாக பலஸ்தீன கல்வி அமைச்சு குறிப்பிட்டுள்ளது.

இப்பத்திரிகை அஸோஸியேட்டட் நியூஸ் பேப்பர்ஸ் ஒப் சிலோன் லிமிடட் கம்பனியரால் கொழும்பு இல. 35, டி ஆர். விஜயவர்தன மாவத்தையிலுள்ள லேக் ஹவுஸில் 2024 செப்டெம்பர் மாதம் 10ம் திகதி செவ்வாய்க்கிழமை அச்சிட்டுப் பிரசுரிக்கப்பட்டது.